விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 17 சனிக்கிழமை (30.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 101

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ரா
ம்
கோ
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# பொதுநலவாய மாநாடு குறித்து ஆராய உயர் அதிகாரி வருகை!

## அறிக்கை சமர்ப்பித்த பின்பே மாநாடு

(கொழும்பு)

**பொதுநலவாய நாடுகள் அமைப்பின் உயர்மட்ட அதிகாரி ஒருவரை இலங்கைக்கு அனுப்பி அவ் அதிகாரி அறிக்கை சமர்ப்பித்த பின்பே, இலங்கையில் பொதுநலவாய நாடுகள் மாநாட்டை நடத்துவது குறித்து தீர்மானிக்கப்படவுள்ளது. இதனை அதன் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா தீர்மானித்துள்ளதாக தெரிய வருகிறது.**

இலங்கையில் பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டை நடத்துவதில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ள நிலையில், இவ்வமைப்பின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் அந்த விவகாரத்தை மையமாகக் கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்வது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா, பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அரச தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு சில பரிந்துரைகளை முன்வைத்திருந்தார்.

இவற்றில் ஊடக சுதந்திரம், மனித உரிமை மேம்பாடு மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துதல் ஆகியன முதன்மையானதாகும்.

அந்த அடிப்படையில் மேற் கூறப்பட்ட விடயங்களை (19ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்களுக்கு சொந்தமான கடை மீது பிக்குகள் தாக்குதல்

## அவசர அமைச்சரவைக் கூட்டத்திற்கு கோரிக்கை

(கொழும்பு)

கண்டியில் நடந்த கூட்டம் ஒன்றில் பொதுபல சேனா அமைப்பின் பௌத்த பிக்கு ஒருவரே 'பெஷன் பக்' என்னும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான வணிக நிறுவனத்தின் மீதான தாக்குதலுக்கு மறைமுகமாக தூண்டியதாக குற்றஞ்சாட்டியுள்ள நீதியமைச்சரான ரவூப் ஹக்கீம் இது குறித்து ஆராய அவசர அமைச்சரவை கூட்டம் ஒன்றை நடத்துமாறு ஜனாதிபதியைக் கேட்டிருக்கிறார்.

ஒரு சிங்களப் பெண்ணை அந்த நிறுவனத்தில் பலவந்தப்படுத்தியதாக பொய்க்குற்றம் சாட்டியே அப்படி அவர் தூண்டியதாக ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

இதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் சிறுபான்மை மக்கள் மீது ஒரு உதிரிக் கும்பல் இலக்கு வைத்து தாக்குவதற்கு அரசாங்கமே இடமளித்ததாக அமைந்து விடும் என்றும் அவர் கூறுகிறார்.

அண்மையில் பொது பல சேனா அமைப்பின கட்டிடம் ஒன்றை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ திறந்து வைத்ததை கடுமையாக விமர்சித்துள்ள அமைச்சர் ஹக்கீம் அந்தக் கூட்டத்தில் அவரை கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டாம் என்று தான் முன்னதாகவே ஜனாதிபதியைக் கேட்டிருந்ததாகவும் கூறினார்.

அப்படி பாதுகாப்புச் செயலர் அந்தக்கூட்டத்தில்கலந்துகொண்டதே பொதுபல சேனா அமைப்பு இன்று அசுரதாண்டவம் ஆடுவதற்குதூண்டுகோலாக அமைந்து விட்டதாகவும் அவர் குற் (19ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக முதல்வர் ஜெயலலிதா சுயநினைவை இழந்துவிட்டார்

## சுப்பிரமணியன் சுவாமி தெரிவிப்பு



(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா சுயநினைவு இழந்துவிட்டார் என்றும் தமிழகத்தின் முக்கிய தலைவர்கள் படிப்பறிவு இல்லாத காரணத்தால் சுயமாக சிந்திக்காமல் பேசுகிறார்கள் என்றும் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி அதிரடியாக (20ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகத்திலிருந்து வந்தவர்களை உடனடியாக நாடுகடத்த வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய ஆவேசம்

(கொழும்பு)

தமிழகத்திலிருந்து சுற்றுலா விசா மூலம் நாட்டுக்குள் பிரவேசித்துள்ள அனைவரையும் நாடுகடத்த வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா விசா மூலம் நாட்டில் இருக்கும் சகல தமிழக பிரஜைகளை நாடுகடத்துவதுடன் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு ராஜதந்திர ரீதியிலான அதிருப்தி வெளியிடப்படவேண்டும்.

ஈழ ராச்சியம் தொடர்பில் வெகுஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனக் கோரி தமிழக சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றிய எந்தவொரு அரசியல்வாதியும் நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கக் கூடாது. (20ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய மத்திய அரசை எதிர்த்து மாணவர் போராட்டம் தொடரும்

## மாணவர் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் கடந்த சில வாரங்களாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவரும் தமிழகக் கல்லூரி மாணவர்கள் தங்கள் போராட்டம் தொடரும் என்று அறிவித்துள்ளனர்.

ஐநா.மனிதஉரிமைகள்ஆணைய அமர்வின்போதுபல்வேறுகோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் எங்கும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தபோது, கடந்த மார்ச் 15 அன்று கல்லூரிகள் மூடப்பட்டன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உருவப்பொம்மை எரிப்பு , இலங்கைத் துணைத் தூதரகம் மற்றும் மத்திய அரசு அலுவலகங்களின் அருகே ஆர்ப்பாட்டங்கள், சாலை மறியல்கள் எனப் பல்வேறு வகைகளில் மாணவர்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டி வருகின்றனர்.

இந்தநிலையில்தனிஈழம்தொடர்பாக பொதுவாக்கெடுப்பு, போர்க்குற்றங்கள் தொடர்பில் பன்னாட்டு விசாரணை உள்ளிட்ட அம்சங்களை வலியுறுத்தி தீர்மானம் ஒன்றை கடந்த புதன்கிழமை தமிழக சட்டமன்றம் நிறைவேற்றியது.

முதல்வர் ஜெயலலிதா தனது அரசின் நடவடிக்கை மாணவர்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையிலேயே இருப்பதால் மாணவர்கள் போராட்டத்தை கைவிடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அதுகுறித்துகருத்துதெரிவித்தஈழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பிரபாகரன், முதல்வரின் கரிசனைக்கு நன்றி தெரி (20ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினை அதிகாரப்பகிர்வைப் பாதிக்கும்!

## பாதுகாப்புச் செயலர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

தமிழகப் பிரச்சினைகள் அதிகாரப் பகிர்வு குறித்த திட்டங்களை மோசமாகப் பாதிக்கும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் இலங்கையர்களுக்கு எதிரான அழுத்தங்கள் அதிகரித் துள்ளதாகவும், இவ்வாறான நடவடிக்கைகள் 13ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக (19ஆம் பக்கம் பார்க்க)

# சிறுபான்மையினரைத் தாக்க பாதுகாப்பு அமைச்சிலிருந்து நிதி

## மங்கள சமரவீர குற்றச்சாட்டு



(கொழும்பு)

சிறுபான்மையினரின் மீது தாக்குதல் நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு நிதி உதவிகளை வழங்கிவருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை மதங்களை சேர்ந்த சமூகங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சே நிதியுதவிகளை வழங்கிவருவதாக குறிப்பிட்டுள்ளார் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# இலங்கை விவகாரம் தமிழக கோரிக்கைகளை ஏற்க முடியாது -குர்ஷித்


தமிழ்நாடு சட்டமன்றத்தில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் நிராகரித்துள்ளார்.

சிஎன்என்-ஐபிஎன் தொலைக்காட்சிக்கு நேற்று அவர் அளித்துள்ள செவ்வியில்,

இலங்கை தமிழர்களுக்கு தனி ஈழம் கோரி பொது வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்றும்,

இலங்கையை நட்புறவு நாடாக நடத்தக்கூடாது என்றும் தமிழ்நாடு சட்டமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தமிழர்களின் உணர்வை வெளிப்படுத்துகின்றது.

ஆனால் இந்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது.



தமிழ் நாட்டில் கடுமையான உணர்வுகள் இருப்பதைநான் கவனத்தில்கொண்டுள்ளேன். ஏனைய கட்சிகளிடம் மட்டுமற்றி எமது கட்சியில் கூட இத்தகைய கடுமையான உணர்வு உள்ளது. எல்லோரிடத்திலும் இல்லாவிட்டாலும், நிறையப் பேரிடம் உள்ளது.

ஆனால் உலகின் பலபேரின் நிலைப்பாட்டுடன் இந்த உணர்வுகள் முற்றிலும் ஒத்துப் போகவில்லை.

அதேவேளை, நாம் பேச்சுக்களை நம்புகின்றோம். நாம் இலங்கையுடன் நாம் பேச்சுக்களை நடத்தமுடியும்என்றும் நம்புகின்றோம்.

அதற்கு சமான முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும்.

இலங்கையை நட்பு நாடு இல்லை என்று முடிவெடுப்பது குறித்து உடனடியான ஆலோசிக்கும் திட்டம் இல்லை.

பொருளாதாரத் தடை விதிக்கும் எண்ணமும் இல்லை. தனி ஈழத்துக்கான பொதுவாக்கெடுப்பை நடத்தக் கோரும் திட்டமும் இல்லை.

இந்தவிவகாரத்தை ஒருசட்டமன்றம்தான் நிறைவேற்றியுள்ளது.

ஏனைய மாநிலங்கள் என்ன நிலையில் உள்ளன? மேலும் பல சட்டமன்றங்கள் உள்ளன.

இதற்கு இந்தியாவின் ஏனைய பகுதிகளில் ஆதரவு இல்லை.

இதற்கு இந்தியா முழுவதும் ஆதரவு இருந்தால், அது இன்னொரு விவகாரமாக இருக்கும்.

ஆனால் ஒரு மாநிலத்தின் ஆதரவை எம்மால் அதன் உணர்வாகவே கருத்தில் எடுக்க முடியும்.

அவர்கள் சொல்வதையெல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவையில்லை என்று இந்திய வெளி விவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்தார். (ஏ-11)


யாழ்ப்பாணம் செல்லா சினிமா




சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த

சென்னையில் ஒரு நாள்

10.30, 2.30, 6.30, 9.30

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

மசாலா தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

பணிநிலை வேண்டுகை

கணனி பக்க வடிவமைப்பாளர் (ஆண் / பெண்) அச்சகத்துறையில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்

நேரச்சு இயக்குனர் (ஆண்) அனுபவம் உள்ளவர்கள் மட்டும்

அலுவலக துப்பரவுப் பணியாளர் (பெண்)


மேற்படி பணிநிலைக்கு அனுபவம் உள்ளவர்கள் 01ஆம், 02ஆம் திகதிகளில் (01,02-04-2013) மு.ப 9.00 - பி.ப 3.00 மணி வரை நேரில் வரவும்.

பைண்டிங், ஸ்கிறீன் பிறிண்டிங் பழக விருப்பம் உள்ளவர்களும் (பெண்) நேரில் வரவும்.

குறிப்பு: எமது நிறுவனத்தில் இருந்து 3Kmக்குள் வசிப்பவர்கள் மட்டும்

கரிகணன் பிறிண்டேர்ஸ்
681, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. கந்தசாமி வீரசிங்கம்

B.A., Dip in Edu., SLPS

எமது கோப்பாய் கோட்டப் பாடசாலையான யா/கோப்பாய் மகா வித்தியாலயத்தில் அதிபராக இருந்து 30.03.2013 இல் ஒய்வுபெறும் திரு.கந்தசாமி வீரசிங்கம் அவர்களை சகல சௌபாக்கியமும் பெற்று குடும்பத்தாருடன் வாழ வாழ்த்துகின்றோம்.

(ச-2823)

| | |
|---|---|
| கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஊழியர்கள் கோப்பாய்க் கோட்டம் | அதிபர் சங்கம் கோப்பாய்க் கோட்டம் |


தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்கள் சுயமாக கற்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட நூலும் DVDயும் விற்பனையாகிறது.

புலமைப்பரிசில் வழிகாட்டி விளக்கம் 2013 - 2014

வினாத்தாள் I இல் 100% மதிப்பெண்களைப் பெறுவதற்காக 1200 வினாக்களும் 18 மணிநேர DVD ஊடான விரிவான கற்பித்தல்

நூல் + DVD = 850/-

கிடைக்கும் இடங்கள்:-

1. அன்னை புத்தகசாலை - யாழ்ப்பாணம்
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
3. சிறிலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்
4. துர்க்கா புத்தகசாலை - சுன்னாகம்
5. சிறி முருகன் புத்தகசாலை - பண்டத்தரிப்பு
6. சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை - நெல்லியடி
7. சாலினி புத்தகசாலை - அச்சுவேலி
8. பொதிகை புத்தகசாலை - சாவகச்சேரி
9. புதிய அருள்நாயகி புத்தகசாலை - கொடிகாமம்

(2260)


## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு கணபதிப்பிள்ளை (சூடாமணி)



(புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி மத்திய குழு உறுப்பினரும், லிமிட்டட் ஊழியரும், தொழிற்சங்கத் தலைவரும்)

காங்கேசன்துறை தையிட்டியைப் பிறப்பிடமாகவும், வீமன்காமம் வடக்கை வதிவிடமாகக் கொண்டவரும் தற்போது வவுனியாவை வதிவிடமாகவும் கொண்டவருமான இ.கா.சூடாமணி அவர்கள் 29.03.2013 வெள்ளிக்கிழமை காலை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு-செல்லம் அவர்களின் அருமைப் புத்திரரும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-வள்ளிப்பிள்ளை அவர்களின் பாசமிகு மருமகனும், செல்லத்துரை, இரத்தினாவதி, அமரர் டாக்டர் இராஜதுரை, தர்மலிங்கம் ஆகியோரின் சகோதரரும்,

வையந்திமாலா (ஆசிரியர், கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயம்), அமரர் ஜெயகுணா, ஜெயதாசன், மேஜெயா (மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர், வவுனியா), ஜெயரத்தினா (ஆசிரியர் , சைவபிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும்,

சுந்தரராஜ் (ஆசிரியர், பாவற்குளம் மகா வித்தியாலயம்), ஜெயரஞ்சினி (ஆசிரியர் சிவபுரம் அ.த.க பாடசாலை), தமயந்தி(இளவேனில் பாலர் பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் ஜெனனி, துவாரகா, யதுசன், திசாலினி, கனிமதி, மகிழ்மதி, சாதுரியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் 63/3, அண்ணா வீதி, தோணிக்கல், வவுனியா இல்லத்தில் நடைபெறும்.

01.04.2013 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அஞ்சலிக்கூட்டம் இடம்பெற்று, பிற்பகல் 2 மணிக்கு பூந்தோட்டம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்: குடும்பத்தினர்

0242221210, 0777585908, 0777589722

(ச-2824)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 . 02 . 1957



மறைவு 08 . 04 . 2012

யாழ்.நல்லூரை பிறப்பிடமாகவும், சாவகச்சேரி அல்லாரையை வதிவிடமாகவும் கொண்ட

### அமரர் நடராசா மனோகரதாஸ்

(தாசன் சலூன் உரிமையாளர்)

அன்பு மாமா, நாங்களே உங்கள் உலகமென
வாழ்ந்து வந்தீர்களே!
உங்களை எங்களிடமிருந்து இறைவன் பறித்து
ஆண்டு ஒன்று ஆகிவிட்ட போதிலும்
என்றென்றும் எங்கள் மனதில் வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள்
உங்கள் பிரிவு என்றென்றும் ஆறாத துயர் நமக்கு
என்றென்றும் அழியாது உங்கள் புகழ்.

MS Lane
Kondavil East, Kondavil

மைத்துனர்
ஆனந்தராசா குடும்பம்

(2268)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மோட்சம்

ஒருவர் நீண்ட நேரமாக ஆகாயத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"அங்கே எதை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று இன்னொருவர் கேட்டார்.

"எனக்கு மோட்சம் கிடைக்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது... அது எங்கேயிருக்கிறது என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

"அது அங்கே இல்லை சேர்!" என்றார்.

"அப்படியென்றால் அது இருக்கிற இடம் உங்களுக்குத் தெரியுமா?" என்றார்.

"அது எனக்குத் தெரிந்தால் இப்படி ஏன் உங்களுக்குத் தகவல் சொல்லிக் கொண்டு இங்கே இருக்கிறேன்" என்றேன்.

இவ்வாறு கூறிவிட்டு மீண்டும் ஆகாயத்தை பார்த்தபடி இருந்தார்.

இது தொடர்பாக சாய்பாபா என்ன சொல்கிறார் தெரியுமா?

"மோட்சம் என்பது ஆகாயத்தில் இருந்து விழும் ஒன்றல்ல. பூமியில் இருந்து எழும்பி வருவதுமில்லை. அது இந்த உலகில் இருக்கிறதும் இல்லை.

மோட்சம் என்பது ஒரு நிலை... அந்த நிலையை நம்மால் அடைய முடியுமா? முடியும்!

இதயத்திலே இருக்கும் ஆசைகள் ஒவ்வொன்றையும் பொறுக்கி எடுத்து எரிந்தால்... அதன்பின் ஏற்படும் நிலை தான் மோட்ச நிலை.

இதற்கு ஒரு உதாரணம்...

சுலபமாக உயர போகக் கூடியது எது? காற்றிலே கடதாசி, பஞ்சு என்பன பறக்கும். இவை இரண்டிலும் "கனம்" இல்லை.

மனிதன் அப்படி பறக்க வேண்டும் என்றால்... அதற்கு என்ன செய்ய வேண்டும்...

அவனிடம் உள்ளடங்கிய ஆசைகள்... சுயநல நாட்டத்தோடு பொருட்களை சேர்க்கிற தன்மை... இதிலேதான் மனிதனுக்கு மேலே ஒரு சுமையாக அமர்ந்திருந்து அழுத்திக் கொண்டிருக்கிறது. நாட்கள் நகர ஆசைகள் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது.

சுயநல நாட்டமோ ஆகாயத்தையே எட்டிப் பிடிக்குமளவிற்கு அதிகமாக உயர்ந்து விட்டது.

இவ்வாறு மனிதனை அமுக்கி வைத்திருக்கும் போது அவன் எங்கே பறக்க முடியும்?

எழுந்து நிற்பதற்கே கஷ்டம். அவன் எங்கே மோட்ச நிலையை எட்டிப் பிடிக்கிறது.

ஒரு குருவோ அல்லது சாமியாரோ, "இது உங்களுக்குரிய மோட்சம்; வைத்துக் கொள்ளுங்கள்" என்று பெற்றுக் கொடுக்க முடியாது.

ஒருவருடைய உண்மையான தன்மை அவருக்குள்ளே இருக்கும் மெய்ப்பொருளாகும்; அதை உணர்வதுதான் மோட்சம் ஆகும். அதை விடுத்து வெளியிலே இந்தப் பெயரைச் சொல்லி வியாபாரம் செய்பவர்களையெல்லாம் நம்பக்கூடாது.

ஒரு விமானத்திலே இவ்வளவு தான் 'பாரம்' ஏற்ற வேண்டும் எனக் கணக்கு இருக்கிறது... அதற்கு மேலே ஏற்றமாட்டார்கள்.

ஒரு இயந்திரத்திற்கு இவ்வளவு கட்டுப்பாடு இருக்கும் போது, ஆன்மீகத்திலே ஈடுபாடுடையவர்களுக்கு இது எந்த அளவிற்கு அவசியம் என்பதை நாம் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்.

மிருகங்களுக்கு வெளிப்பார்வைதான் இருக்கிறது. உள்பார்வை கிடையாது.

பச்சைப்புல் எங்கேயாவது கண்ணுக்கு நேரில் தென்பட்டால், பசுமாடு அங்கே போய்விடும். அது யாருடைய நிலம்... அங்கே போவது சரியா என்றெல்லாம் யோசிக்காது.

மனிதத்தன்மை அப்படிப்பட்டதல்ல. இவன் உள்பார்வை பார்க்க வேண்டும்... அங்கே இருக்கும் சுமைகளைத் தூக்கியெறிய வேண்டும். அப்போதுதான் ஆகாயத்திலே பறக்க முடியும். மோட்ச பாக்கியத்தை பெற முடியும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# பழம்பெரும் ஏட்டுச் சுவடி பிரதிகள் கையளிக்கும் நிகழ்வு இன்று

பழம் பெரும் ஏட்டுச் சுவடிகளின் பிரதிகளினை ஒப்படைக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் சிவன் கோவிலில் நடைபெறும் பூசை வழிபாட்டினையடுத்து ஊர்வலம் ஆரம்பமாகி அகில இலங்கை இந்து மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலையத்தில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் விடுக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

பாரத நாட்டில் பல இடங்களிலும் இருந்த இந்து மக்களின் அருஞ்சொத்துக் களான ஏடுகளை பாண்டிச்சேரி மாநிலத்தில் பிரெஞ்சு அரசாங்கம் நீண்டகாலமாக பாதுகாத்து பாண் டிச்சேரி பல்கலைக்கழகத்தில் பாது காத்து வருவது ஆய்வாளர்கள் பலர் அறிந்த செய்தி.

இவ்வரிய சொத்தை இந்து மக்கள் அறிய வேண்டும் என அயராது பாடுபட்டது அமெரிக்க ஹவாய் ஆதீனம்.

அதன் விளைவாக பாண்டிச்சேரியில் பாதுகாக்கப்பட்ட இந்து மதம் சார்ந்த ஏடுகளை நவீன கருவிகள் ஊடாக மிகவும் கடின முயற்சியால் புகைப்படங்களாக எடுத்து அவற்றை கணனி மயப்படுத்தி எதிர் கால சந்ததியினருக்கு இவ்வரிய ஆவணத்தை அறிவதற்கு ஹவாய் சைவ ஆதீனம் உதவியுள்ளது. ஹவாய் சைவ ஆதீன முதல்வர் வணக்கத்திற்குரிய போதிநாத வேலன் சுவாமிகளின் ஆசியோடு விலை மதிக்க முடியாத இவ்வரிய ஏடுகளின் பிரதியை நவீன முறையில் வன்தகட்டில் எம்மண்ணுக்கு ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் கொண்டு வந்து சேர்த்துள்ளார்.

எம்மண்ணில் வாழும் ஆய்வாளர்கள், அந்தணர்கள், ஆன்மீக ஆர்வலர்கள் இவ்வரிய சொத்தைப் பாதுகாக்க கொழும்பில் கடந்த 3 ஆம் திகதி கையளிக்கப்பட்டது.

திருமுறை வழிபாட்டைத் தொடர்ந்து இணுவில் தர்மசா ஸ்திரக் குருகுலமுதல்வர் சிவஸ்ரீ தானு மகாதேவா க்குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இந்துக் குருமார் ஒன்றியம் தலைவர் சிவஸ்ரீ சபாவாசுதேவ க்குருக்கள் ஆகியோரின் ஆசியுரை கள் இடம்பெறும்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீல கண்டன் தலைமையுரை வழங்குவார். இந்திய நாட்டின் யாழ். இராஜதந்திர முதல்வர் வி.மகாலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

பழம் பெரும் ஏட்டுச் சுவடிகள் அடங்கிய பேழையை ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் வழங்க உபதலைவர், அகில இல ங்கை இந்து மாமன்ற இயக்குநர் கலாநிதி ஆறு திருமுருகன் மாமன்றத்தின் சார்பில் ஏற்றுக் கொள்வார்.

அரும் பொக்கிஷம் பற்றிய அறிமுகவுரையை ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் நிகழ்த்துவார் என அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. (அ-2-4)

## எழுத்தாளர்களுக்கான நூற்பரிசுப் போட்டி

வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் வட மாகாண எழுத்தா ளர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் வருடாந்தம் நடத்தப்படும் சிறந்த நூற்பரிசுப் போட்டி இவ்வருடமும் நடத்தப்படவுள்ளது. கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கும் அவ்வாண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு இடையில் அச்சில் முதற் பதிவாக வெளிவந்த நூல்கள் அனுப்பி வைக்கப்படவேண்டும். இதற்கான விண்ணப்பபடிவத்தினை சங்கானை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ளலாம். (அ-3-30)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 150 |
| தக்காளி | 80 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 40 |
| கோவா | 60 | 40 | 60 |
| கரட் | 120 | 100 | 120 |
| பூசணி | 80 | 40 | 60 |
| புடோல் | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 80 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 70-80 | 50-100 |
| பெரிய வெங்காயம் | 100 | 60 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 80 |
| பயற்றங்காய் | 80 | 50 | 80 |
| லீக்ஸ் | 120 | 110 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 120 | 90 | 120 |
| முருங்கைக்காய் | 600 | 500 | -- |
| போஞ்சி | 120 | 110 | 100 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 40-70 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 35-60 | 40-50 | 45-50 |
| இராசவள்ளி | 100 | 90 | 100 |
| வெங்காயப்பூ | 160 | 180 | 160 |

## இராசி பலன்

*30.03.2013*
*(பங்குனி 17, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு*
*துதியை முற்பகல் 11.06 மணிவரை*
*சுவாதி மூற்பகல் 8.15 மணிவரை*
*இராகுகாலம் 9.12 - 10.42 மணிவரை*
*சுபநேரம் 3.12 - 4.42 மணிவ்வரை*
*சங்கடகரசதுர்த்தி விரதம்*
*அமிர்த சித்தம்*

**மேடம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டிய நாள், விருந்தினர் வருகையுண்டு, பயணங்களால் பலனுன்டு, தொழிலில் பங்குதாரரின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**இடபம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், கடன் சுமை குறையும், உடல் நலன் சீராகும், காரிய அனுகூலமுண்டு, முன்னோர் சொத்துக்களால் நன்மையுண்டு.

**மிதுனம்** சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பிள்ளைகளின் வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறலாம், பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கடகம்** நம்பிக்கைகள் நடைபெற தும்பிக்கை யானை வழிபட வேண்டிய நாள், செய் தொழில் மேன்மையுண்டு, வாகன சுகமுண்டு, கல்வியில் மேன்மையுண்டு, ரோக பயமுண்டு

**சிங்கம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், வாக்கு மேன்மையுண்டு, விநாயகர் வழிபாடு காரிய வெற்றி தரும்.

**கன்னி** மக்கள் போற்றும் வாழ்வமைய விக்கினேஸ்வரனை வழிபட வேண்டிய நாள், உடல் நலம் சீராகும், எதிர்பாரத வகையில் பணவரவுகள் ஏற்படலாம், வாக்கு மேன்மையுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்** தொழில் ரீதியான பயணம் வெற்றியளிக்கும், குடும்பத்தில் பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**விருச்சிகம்** காரியங்களில் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், சயன சுகக் குறைவுண்டு, உறவினர் வருகையுண்டு.

**தனுசு** உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்தி தரும், சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு, பொது வாழ்வில் கௌரவம் கூடும்.

**மகரம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும், போசன நன்மையுண்டு, கனவுகள் நிறைவேற கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள்.

**கும்பம்** பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உடல் நலம் சீராகும், தந்தை வழி உறவில் தன வரவுகள் ஏற்படலாம்.

**மீனம்** வளர்ச்சி காண வழிபாட்டினை மேற்கொள்ள வேண்டிய நாள், வரவை விட செலவுகள் அதிகரிக்கலாம், குடும்பத்தினரிடையே கோபமாக பேசிவிட்டு பின்னர் வருத்தமடைய நேரிடலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதி பெறாத விடுதிகள் அனைத்தும் மூடப்படும்


(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குள் சபையின் அனுமதி பெறாமல் பல விடுதிகள் தனிப்பட்டவர்களால் நடத்தப்படுவதாகவும் அவ் விடுதிகளில் சுகாதாரச் சீர்கேடு, கலாச்சாரச் சீர்கேடு முதலியன அதிகரித்து வருவதாகவும் அனுமதியற்ற முறையில் நடத்தப்படும் விடுதிகளினால் சுற்றுச் சூழலில் பாதிப்பு ஏற்படுவதாகவும் அவ் விடுதிகளினால் சூழலில் வசித்து வரும் பொதுமக்களிற்கு பல அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும் பல முறைப்பாடுகள் கிடைத்தபடியே இருப்பதாக யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெறாமல் கண்காணிக்க வேண்டியது மாநகர சபையின் கடமையாதலால் மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள விடுதிகள் சம்பந்தமாக சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் யாழ்.மாநகர சபை எல்லைக்குள் உரிய அனுமதி பெறாமல் இயங்கி வரும் விடுதிகள் அனைத்தும் உடனடியாக மூடப்படுவதுடன் சபையின் அனுமதியின்றி எத்தகைய விடுதிகளும் நடத்தப்படக்கூடாது. இதனை மீறி நடத்தப்படும் விடுதிகளின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் கோவில் வீதியில் உள்ள விடுதியொன்றில் சட்டவிரோதமாக தங்கியிருந்த ஆண்கள், பெண்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



நன்றி: ஐலண்ட்

# தீக்காயத்திற்குள்ளான இளம்பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இளம் குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கடந்த 24 ஆம் திகதி உடல் முழுவதும் தீக்காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குறித்த பெண் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கோப்பாய் வடக்கு, கோப்பாயைச் சேர்ந்த அருண் குகசாந்தினி (வயது 24). என்ற குடும்ப பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார். (அ-6)

# சிவதொண்டன் பயிற்சி பட்டறை

(யாழ்ப்பாணம்)

இருபத்தொராம் நூற்றாண்டின் சைவ சமயப்பணியை பொருத்தமான முறையில் எவ்வாறு செய்வது என்பது தொடர்பாக சிவதொண்டன் பயிற்சிப் பட்டறை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப் பயிற்சிப் பட்டறையில் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அந்தண சிவாச்சாரியார்கள், சைவசமய ஆர்வலர்கள் என்போர் கலந்து கொள்ள முடியும்.

இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகும் இப்பயிற்சி பட்டறை மதிய உணவுடன் பிற்பகல் 3 மணி வரை நடைபெறவுள்ளது.

21 ஆம் நூற்றாண்டில் எவ்வாறு பொருத்தமான முறையில் சமயப்பணி செய்தல், சைவ சமயத்தினை எவ்வாறு வழிநடத்திச் செல்லுதல் என்பவை தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.


இப் பயிற்சி பட்டறையில் மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை, வன்னி, யாழ்ப்பாணம், மலையகம் ஆகிய மாவட்டங்களினை சேர்ந்த பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை மாணவர்களிற்கு இப்பயிற்சி பட்டறை பயனுடையதாக அமையும்.

இந்து நாகரிகத்துறை மாணவர்களிற்கு கள ஆய்வு என்பது முக்கியமானதாகும். அந்த வகையில் யாழ்.பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறை மாணவர்கள் இதில் கலந்து கொண்டு பயனடைய முடியும்.

இப் பயிற்சி பட்டறையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டுமெனவும் இப்பயிற்சி பட்டறையில் மாணவர்கள் பங்குபற்றி சைவ சமயத்தில் சிறந்த அறிவினை பெற்றுக் கொள்ள யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர்கள், பீடாதிபதிகள் அறிவுறுத்தல் வழங்க வேண்டும் என இந்து மாமன்றத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (அ-4)

# சாவகச்சேரியில் நேற்று வாகன விபத்து


(படம்:- எம்.கௌரிகாந்தன்)

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் வாகனம் பலத்த சேதமடைந்தபோதும் வாகனத்தில் பயணித்த வாகன சாரதி எவ்வித காயமும் இன்றி உயிர் பிழைத்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பிக்கப் ரக வாகனமே மேற்படி விபத்தில் சிக்கியுள்ளது.

வீதி வளைவு ஒன்றில் மிக வேகமாக பயணிக்க முயன்றபோதே வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் விளம்பர பதாகை ஒன்றை மோதி தூக்கி வீசப்பட்ட பிக்கப் வாகனம் தொலைபேசி இணைப்பு மின்கம்பத்துடன் மோதி நின்றது.

இதன்போது வாகனத்தின் முன்பகுதி முற்றாக பலத்த சேதமடைந்ததுடன் மின்கம்பமும் நொருங்கி வீழ்ந்துள்ளது.

வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த காற்றுப்பை தொழில்நுட்பம் மூலமாகவே சாரதி எவ்வித காயமும் இன்றி உயிர் பிழைத்துள்ளார். (அ-5)

# கிராமத்திற்கொரு வீடு அடிக்கல் நாட்டு விழா

(மானிப்பாய்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர்களால் கிராமத்திற்கொரு வீடு செயற்றிட்டத்தின் சண்டிலிப்பாய் பிரதேசத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11.30 இற்கு மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்திற்குட்பட்ட பகுதியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி வினோதினி ஸ்ரீமேனன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக ஜே/140 கிராம சேவையாளர் திருமதி சிவபுண்ணியம், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி லக்ஷன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக முன்னாள் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவரான அ.ஜெபநேசன், தேசிய சம்மேளனப் பிரதிநிதியும் மாவட்ட சம்மேளனத் தலைவருமான ச.செந்தில்குமரன், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் பே.சுபாகர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்வருடம் இச் செயற்றிட்டம் மானிப்பாய் மேற்கு ஜே/140 இளைஞர் கழகத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2-23)

# பல்கலை மாணவர்களுக்கு 24 மடிக்கணனிகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு இந்து வித்தியா விருத்திச் சங்கம் இணைந்து பல்கலைக்கழக மாணவர்களுக்கு 24 மடிக்கணனிகள் வழங்கவுள்ளன.

இம் மடிக்கணனி வழங்கும் வைபவம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 24 பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு இம் மடிக்கணனிகள் வழங்கப்படவுள்ளன.


இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் தலைமையுரையினை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் வழங்கவுள்ளதோடு ஆசியுரையினை ஆன்மீக சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் நிறைவுரையினை கலாநிதி ஆறு.திருமுருகனும் நிகழ்த்தவுள்ளனர். (அ-4)







யாழ்.திருநெல்வேலி அரசடி அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலய புனராவர்த்தன மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்றபோது... (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு கலந்துரையாடல் அவசியம்

நிறுவனங்களிலும் தொழிலாளர்கள் அதிகம் பணிபுரியும் அலுவலகங்களிலும் ஏற்படும் சகல பிரச்சினைகளையும் சட்டம் மூலம் தீர்க்க முடியாது. வன்னி மாவட்டங்களில் இவ்வாறு பல பிரச்சினைகள் உள்ளன என வடக்கு மாகாண தொழில் திணைக்கள பிரதித் தொழில் திணைக்கள ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தொழில் திணைக்களத்தின் கீழ் இயங்கும் சமூக கலந்துரையாடல் பிரிவின் ஏற்பாட்டில் வேலை தளங்களில் கூட்டுறவை விருத்தி செய்யும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சிப் பட்டறையொன்று கடந்த 25 ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றும் போதே பிரதித் தொழில் திணைக்கள ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நிறுவனங்களில் ஏற்படும் சகல பிரச்சினைகளையும் சட்டத்தின் மூலம் தீர்த்து வைத்து விட முடியாது. சிறந்த முறையில் கலந்து ரையா டலில் ஈடுபடுவதன் மூலம் எந்தவொரு பிரச்சி னைக்கும் சுமுகமான முறையில் தீர்வு கண்டு விடமுடியும்.

அதுமட்டுமின்றி உற்பத்தித்திறனை அதிகரித்தல், நிறுவன முன்னேற்றத்திற்கு உதவுதல் போன்றவற்றுக்கும் கலந்துரையாடல் முக்கியமாக அமைகின்றது. கூட்டுறவு மூலம் இவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். யுத்தத்திற்குப் பின்னர் வன்னி மாவட்டங்களில் கூட்டுறவு மற்றும் கலந்துரையாடலின் தேவை அதிகமாககாணப்படுகின்றது எனத்தெரிவித்தார்.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் தொழிலாளர்களும் பணியாளர்களும் பல பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றனர் எனவும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தேவை தற்போது மிகவும் குறைவடைந்து விட்டது எனவும் அவற்றை நாடுவோரின் எண்ணிக்கை மிகவும் குறை வடைந்துவருகின்றது எனவும் இதனால் அங்கு பணிபுரியும் தொழிலாளர்களும் பணியாளர்களும் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு வட மாகாணத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்து வளத்தையும் இழந்த நிலையில் உள்ளன. இவற்றை மறுபடியும் மீளக் கட்டியெழுப்ப அபிவிருத்தி நிதிகளும் ஊக்கத் தொகைகளும் கிடைக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் மாறுபட்ட கோணத்தில் சிந்தித்து வருமானத்தை பெருக்கிகொள்ள வேண்டுமெனவும் இந்த பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டு உரையாற்றிய ஏனையவர்கள் வலியுறுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

## கொரிய மொழியில் சித்தியடைந்தோருக்கு விரைவில் வேலை

(கொழும்பு)

2010 ,2011 ஆம் வருடங்களில் இடம்பெற்ற கொரிய மொழி பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் தொடக்கம் கொரிய வேலை வாய்ப்புக்கு முன்னுரிமை வழங்கப்படும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தெரிவு செய்யப்படுவோருக்கு கடிதம் மற்றும் தொலைபேசி மூலம் அறிவிக்கப்படும் என பணியகம் குறிப்பிட்டுள்ளது.

கொரிய வேலைவாய்ப்பு குறித்து பரவும் வதந்திகளை நம்ப வேண்டாம் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (அ-2)

# மின்சாரம் தடைப்படும்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும் புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரையும் உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப்பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி, புன்னாலைக் கட்டுவன், அச்செழு, புத்தூர், ஊரெழு, ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வல்லை, வடமராட்சிப் பிரதேசம், வடமராட்சி கிழக்கு பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மல்லாகம், ஏழாலை, மயிலங்காடு, காங்கேசன் துறை, உயர்பாதுகாப்பு வலயப்பகுதி, மாவிட்டபுரம், கீரிமலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், முடமாவடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, பாற்பண்ணைப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் நாளை மறுதினம் திங்கட்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரையம் கோண்டாவில் பலாலி வீதியிலிருந்து அன்னங்கை வரையான பிரதேசம், பளை மாசார் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என அவர்குறிப்பிட்டுள்ளார். (அ)

# தமிழினத்தின் இருப்பை பாதுகாக்க கலாசாரத்தை பேண வேண்டும்

*யாழ். த.சங்க தலைவர் பேராசிரியர் வேல்நம்பி*

தமிழ் உணர்வையும் பற்றையும் முன் னெடுத்துச் செல்வதோடு கலாசாரத்தையும் பண்பாட்டையும் கட்டியெழுப்புவது அவசியம் என யாழ்ப்பாணத் தமிழ் சங்கத்தின் தலைவரும் யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத் துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி தெரிவித்தார்.யாழ்ப்பாண தமிழ் சங்கம் நடத்திய திருவள் ளுவர் விழா நேற்று யாழ். நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் தமிழ் சங்கத்தின் உபதலைவர் பேராசிரியர் கி. விசாகரூபன் தலைமையில் இடம் பெற்றது.இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எமது தமிழ் இனத்தின் இருப்பினை பாதுகாக்கும் பொருட்டு பல செயற்பாடுகளை தமிழ்ச்சங்கத்தின் ஊடாக முன்னெடுக்க வேண்டியுள்ளதால் விரும்பியோ விரும்பாமலோ தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பொறுப்பிலுள்ளேன்.

விழாக்களை மட்டும் எடுப்பதோடு நின்றுவிடாது எமது தமிழினத்தின் இருப்பினை பாதுகாக்கும் நோக்குடன் கலாசாரம், பண்பாடு, விழுமியத்தை பாதுகாக்கும் நோக்குடனும் எதிர்காலத் தலைமுறைக்கு அவற் றைக் கொண்டு செல்லும் நோக்குடனும் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.எமது இனத்தின் கலாசாரத்தையும் பண்பாட்டையும் சமூக விழுமியத்தையும் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்திற்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம்.இதற்காக பல முயற்சிகளைத் தொடர்ந்து நாம் எடுக்க வேண்டியுள்ளது. தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா தொடர்பான செய்திகள் இந்திய ஊடகங்களிலும் வெளிவந்துள்ளன.எங்களுடைய நாட்டில் மட்டுமல்ல பல நாடுகளிற்கும் இவ்வாறான விழாக்கள் தொ டர்பான செய்திகள் கொண்டு செல்லப்பட வேண்டும்.

விழாக்கள் நடத்தப்படுவது வருங்கால சந்ததியினருக்கு எமது இனத்தின் இருப்பு, கலை, கலாசாரம் என்பவற்றை கடத்தும் நோக்குடன் எமது இனத்தில் மிகப்பெரிய ஆற்றல் உள்ளவர்கள் உள்ளனர். இலை மறை காயாகவுள்ள அவர்களை வெளிக் கொண்டு வர வேண்டும்.தமிழ் மொழி சம்பந்தமான விடயங்களை இளைய தலைமுறையினர் கற்றிந்து கொள்வதோடு துடிப்புடன் தமிழை வளர்க்க முன் வரவேண்டும்.

எமது யாழ்ப்பாணத் தமிழ்சங்கத்தில் தற்போது 250 பேர் வரை அங்கத்தவர்களாகவுள்ளனர். இவ்வாறான நிகழ்வுகளில் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.தமிழுக்கு நிலையான பங்களிப்பு வழங்க வேண்டும். தமிழ்ச்சங்கத்தின் கருத்தினை பலப்படுத்த வேண்டும். தமிழ் மொழிக்கு தம்மையே அர்ப்பணிப்பு செய்து பணியாற் றிய பலர் உள்ளனர்.அவர்கள் கௌரவிக்கப்பட வேண்டும்.' எத்தனை நவீன இலக்கியங்கள் தமிழ் மொழியில் வந்தாலும் பண்டைய தமிழ் இலக்கியங்கள்தான் ஆதாரமாகவும் அத்திவாரமாகவும் உள்ளன.திரைப்படங்களில் வெளிவரும் பாடல்களில் பல பாடல்கள் பண்டைய இலக்கியங் களில் எழுதப்பட்டவைகளையே உள்ளடக்கியதாகவுள்ளன. பழைய விடயத்தை புதிய வடிவில் முன்வைக்கின்றனர்.

பழந்தமிழ் இலக்கியத்திலுள்ள மரபு வழி இலக்கியத்தினை விளங்கிக் கொண்டு நவீன இலக்கியத்தினை படிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# பெற்றோருக்கு தெரியாமல் வவுனியாவுக்கு சென்ற சிறுவர்கள்

## மூவரும் ஆசிரியரிடம் ஒப்படைப்பு

(குருமன்காடு)

பெற்றோர்களுக்கு தெரியாமல் கிளிநொச்சியிலிருந்து வவுனியாவுக்குச் சென்ற சிறுவர்கள் மூவரை கண்டுபிடித்த பொலிஸார் அவர்களை ஆசிரியரொருவரிடம் ஒப்படைத்ததாக வவுனியா மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரி ஜோசப் ஜெயக்கெனடி தெரிவித்துள்ளார்.

10 வயது மதிக்கத்தக்க சிறுவர்கள் மூவர் நேற்று முன்தினம் மாலை வீதியில் அலைந்து திரிந்ததைக் கண்டு சந்தேகமடைந்த வவுனியா குட்செட் வீதி பொலிஸ் காவலரணிலுள்ள பொலிஸார் இவர்களை அழை த்து விசாரித்துள்ளனர்.

இதன்போது இச்சிறுவர்கள் மூவரும் தங்களது பெற்றோர்களுக்கு தெரியாமல் கிளிநொச்சியிலிருந்து பேருந்து வண்டியில் வவுனியாவுக்கு வந்தமை தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து வவு னியாவிலுள்ள சிறுவர் காப்பகமொன்றில் இச்சிறுவர்களை தற்காலிகமாக தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை பொலிஸார் மேற் கொண்டனர். இந்நிலையில் இச் சிறுவர்கள் மூவரும் தங்களுக்கு கற்பிக்கும் ஆசிரிய ரொருவர் வவுனியாவில் உள்ளதாகவும் அவரிடம் தங்களை ஒப்படைக்குமாறும் பொலிஸாரிடம் கோரியுள்ளனர்.

இவ்வாசிரியரை வரவழைத்த பொலிஸார் இச்சிறுவர்கள் மூவரையும் ஆசிரியர்களிடம் ஒப்படைத்துள்ளதாகவும் அவர் கூறினார். தற்போது இச்சிறுவர்கள் மூவரையும் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவ தாகவும் அவர் தெரிவித்தார். (அ-2-250)


இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: 20.5, 2இல் சூரி, செவ்<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்: O/L, வியாபாரம்<br>தொ.இ: B -1503 | பிறப்பு: 1989 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா: 7.25, சூரி, செவ் ஒரே வீட்டில்<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: BA,முன்பள்ளி ஆசிரியர்<br>தொ.இ: G -1515 |
| பிறப்பு: 1990 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா. 49, 1இல் செவ்.<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: O/L, நகைத்தொழில்<br>தொ.இ: B -1504 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்: 5'<br>கி.பா: 18.75<br>தகைமை/ தொழில்: B.com, AG Office<br>தொ.இ: G-1517 |
| பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>உயரம்: 6'<br>கி.பா: 8<br>தகைமை/தொழில்: Civil Engineering Study (France not PR)<br>தொ.இ: B -1510 | பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 70<br>உயரம்: 5' 1"<br>தகைமை/ தொழில்: O/L<br>தொ.இ: G -1521 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 71.5, 8 இல் செவ்<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: Quantity Surveyor<br>தொ.இ: B -1512 | பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 31.5, 2 இல் செவ்<br>உயரம்: 5' 2"<br>தகைமை/ தொழில்: A/L, புறநிலைப்படிப்பு<br>தொ.இ: G -1522 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலில் வேலைவாய்ப்புக்கள்

கப்பலில் வேலைவாய்ப்புகள் என்ற விடயத்தை ஆராயப்போனால் இலங்கை யில் கணிசமானவர்கள் கப்பலில் தொழில் வாய்ப்பை பெற்று நல்லநிலையில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் அநேகருற்கு இத்தொழில் சம்பந்தமான போதிய விளக்கம் சிறிதளவேனுமில்லை.முக்கியமாக யாழ். குடாநாட்டில் உள்ள மக்களுக்கு அறவே கிடையாது.

சமீபத்தில் ஆசியாவிலேயே கப்பற்றுறை கற்கைநெறிகளைக் கற்பிப்பதில் மிகப்புகழ் பெற்ற கல்வி நிறுவனமான Colombo International Nautical and Engineering College (CINEC) தனது கிளை நிறுவனத்தினை யாழ்.மருதனார்மடத்தில் CINEC Jaffna Campus எனும் பெயரில் மாலுமிகளுக்கான ஆரம்பகற்கை நெறிகளை ஆரம்பித்துள்ளது. இந்நிறுவனத்தை இங்கு ஆரம்பித்து வைக்க வல்வை மாலுமிகள் நலன் புரிச்சங்கம் பெரும்பங்காற்றியுள்ளது. ஆகவே கப்பலில் வேலைவாய்ப்புக்கள் பற்றி விளக்கமளிக்க இக்கட்டுரை முயல்கிறது.

**கப்பல்களில் தொழில்**

இவை மூன்று வகைப்படுடம்.கப்பல் தளப்பகுதி (Deck Side), இயந்திரப்பகுதி (Engine side), சமையல் பகுதி (Catering side). இதில் முதல் இரண்டு பகுதிகளுக்குமான ஆரம்பக் கற்கை நெறிகளே தற்போது யாழ் மருதனார் மடத்திலுள்ள cinec Jaffna Campus என்ற கல்வி நிறுவனம் ஆரம்பித்துள்ளது. இக்கற்கை நெறி Pre- Sea Training course என அழைக்கப்படும்.இதுவே கப்பல் தொழில் வாய்ப்பிற்கான நுழைவாசல். இதற்கான கல்வித்தகைமைகள் கல்வி பொதுத்தராதரம் சா/த பரீட்சையில் சித்தியெய்தி இருக்க வேண்டும். ஆனால் சமீப காலங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாலுமிகளை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் மாலுமிகளாய் கப்பல்களில் சேர்நத பின்பு கப்பல்களில் ஏற்படும் மேற்கூறிய சம்பவங்களிலிருற்து உங்களை பாதுகாப்பதற்கும் இதற்காக செலவிடும் பணத்திற்கு நல்ல பலன் கிடைக்க வேண்டும் என்ற நன் நோக்கங்களிற்காகவே ஆங்கில அறிவு தேவைப்படுகிறது தவிர வேறெதுமில்லை.

**மாலுமிகள் சான்றிதழ் (Continual Discharge Certificate C.D.C)**

இச்சான்றிதழை இக்கற்கை நெறிகளின் முடிவில் கிடைக்கப்பெற்ற சான்றிதழ்களுடனும் வைத்திய பரிசோதனை சான்றிதழ்களுடனும் தேவையான ஆவணங்களுடனும் கொழும்பில் உள்ள கப்பற்றுறை அலுவலகத்தில் (Shipping office) விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.


**பயிலுநர் (Cadets)**

இது கப்பற்றுறையினுள் புகுவதற்கான இன்னுமொரு வழிமுறை. இதற்கான கற்கை நெறிகள் கொழும்பு மாலேபே CINEC இல் கற்பிக்கிறார்கள். இதற்கான வய தெல்லை 20 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும். கல்வித்தகைமை கல்வி பொதுத் தராதர சா/த பரீட்சையில் கணிதம், ஆங்கி லம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் அதி விசேட சித்தி உட்பட ஏனைய பாடங்களிலும் சித்தி அடைந்திருக்க வேண்டும். கடுமை யான நுழைவு பரீட்சைகளின் பின்பும் நேர் முகப் பரீட்சைகளின் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே உள்ளீர்க்கப்படுகின்றனர்.

**வேலைவாய்ப்புக்கள்**

சகல துறைகளிலும் வேலை வாய்ப்பினை பெற சுய முயற்சியே உதவும். கல்வி கற்ற நிறுவனங்களையோ அல்லது பல்கலைக் கழகங்களையோ நம்பியிருப்பதில் எவ்வித பிரயோசனமும் இல்லை. ஆகவே கப்பலில் தொழில் வாய்ப்பை பெறுவதும் அப்படியே.

இதற்காக பல கப்பல் முகவர்கள் அலுவலகங்கள் (Shipping Agents Office) கொழு



ம்பில் உள்ளன. அவற்றில் இனம் கண்டு நல்ல முகவர்களிடம் அணுகினால் தொழில் வாய்ப்புக்கள் பெறலாம். ஆனால் முதல் முதலாக தொழில்வாய்ப்புப் பெறுவது கடினமே. காரணம் சகல தொழில்களிலும் முன்னனுபவம் கோருவது வழமை. அதேபோல் இத்துறையிலும் முன் அனுபவம் (Sea Service) கோருவார்கள். இதற்கு குறைந்த சம்பளத்தில் வேலை செய்ய தயாராக இருக்க வேண்டும்.

**எதிர்காலம்**

மாலுமிச் சான்றிதழ்கள் பெற்றவுடன் 9 மாதகால சேவையின் பின் ஒரு தராதரச் சான்றிதழ் (Watch Keeping Certificate) எடுக்க வேண்டும். இது கப்பல் தளப்பகுதியில் மாணவர்களிற்கான கப்பல் துறை அமைச்சு (Shipping ministry) இப்பரீட்சையில் சித்தி எய்தாவிட்டாலும் தோற்றியிருந்தால் போதுமானதென்ற சலுகை வடக்கு கிழக்கு மாணவர்களிற்கு மட்டும் வழங்கியுள்ளவர்கள் இச் சலுகையானது 2013 ஆம் ஆண்டு வரையுமே.

**கால எல்லையும் கட்டணங்களும்**

அடிப்படைக் கற்கை நெறிகளிற்கு (Basic Course) மற்றும் கப்பல் சம்பந்தமான குறுகிய கால கற்கை நெறிகள் உட்பட (Short term courses) 4 மாத காலம். இதில் அடிப்படைக் கற்கை நெறிகள் யாழ் மருதனார் மடத்தில் இயங்கி வரும் Cinec Jaffna Campus இலும் குறுகிய கால கற்கை நெறிகள் கொழும்பு மாலபே என்னுமிடத்திலமைந்துள்ள தலைமைக்கல்வி நிறுவனத்திலும் கற்பிக்கப்படும். இவை எல்லாவற்றுக்குமான கட்டணமாக ரூபா அறுபதினாயிரம் (ரூபா 60000) அறவிடப்படுகிறது. இவை பகுதியாக தவணை அடிப்படையில் கட்ட வசதி யேற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**ஆங்கில அறிவு**

பொதுவாக கப்பல்களில் பல நாட்டவர்களும் வேலை செய்வதால் ஆங்கிலமே தொடர்பாடல் மொழியாகவுள்ளது.குறிப்பாக ஒரு கப்பலில் தீ விபத்து, கடல் கொந்தளிப்பு, புயல், கடற்கொள்ளையர்களின் தாக்குதல், விபத்தினால் கப்பல் மூழ்கும் நிலை போன்ற அவசர காலநிலை ஏற்படும் போது உயர் அதிகாரிகளின் கட்டளையை செவிமடுத்து புரிந்து கொள்ள அல்லது உங்கள் நிலைமைகளை மற்றவர்களுக்கு எடுத்து விபரிக்கவோ ஆங்கிலம் அவசியமாகிறது.

அதாவது உங்கள் உயிரை பாதுகாக்க ஆங்கில மொழி அறிவு அவசியமாகிறது. ஆகவேதான் தற்போது சர்வதேச கடல் சார்பு சட்டம் (International Maratime law) சகல மாலுமிகளும் ஆங்கில அறிவில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென அமுல்படுத்தி உள்ளது.

இச்சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளால் (Inspection) சமீபத்தில் பல மாலுமிகள் தொழில் வாய்ப்பினை இழந்து வீடு திரும்பியுள்ளனர்.

இக்கல்வி நிறுவனம் தொடர்பாடல் ஆங்கிலம் (Communicative English) என்ற பாடநெறியை அறிமுகம் செய்துள்ளார்கள். 50 மணித்தியாலம் கொண்ட இப்பாட நெறிக்கு ரூபா 10000 கட்டணமாகவுள்ளது. மாணவர்களது தராதரத்தை மேம்படுத்தும் நோக்கில் இதில் சித்தியெய்தினால் மட்டுமே மற்ற கற்கை நெறிகளை தொடர வாய்ப்பளிக்கப்படும் என்ற நிபந்தனையும் விதித்துள்ளார்.

காரணம் இக்கற்கை நெறிகளிற்கான விரிவுரைகள் தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலுமே இடம் பெற்றாலும் இறுதிப்பரீட்சை ஆங்கிலத்தில் மட்டுமே இடம்பெறவுள்ளதாலும் சர்வதேச கடல் சார் தராதரத்திற்கு (international Maratime Standard) அமைவாக வேலை செய்திருந்தால் Able Seamen என்றும் இயந்திரப்பகுதியில் வேலை செய்தால் motor man என்றும் எடுக்க வேண் டும். இதுவும் கொழும்பு Shipping Office இல் சிறு நேர்முகப்பரீட்சை (Oral test) யில் சித்தியெய்தினால் மட்டுமே வழங்கப்படும்.

உங்கள் கப்பல் தொழிலை தொடர இச் சான்றிதழ் அவசியம். மேலும் பதவி உயர்வு பெற விரும்பினால் 36 மாத கால சேவையின் பின்பு Class iii in Navigation or Class iv in Marine Engineering போன்ற கற்கை நெறிகளை கற்று சித்தியெய்தினால் அதிகாரியாக (Officers or Engineers) ஆக தொழில் புரிய முடியும். அப்போது வேலை வாய்ப்புக்கள் உங்களை தேடி வரும். மேலும் முயற்சி எடுத்தால் இறுதியில் கப்பல் கப்டன்களாகவோ அல்லது பிரதம பொறியியலாளராகவோ அதி கூடிய சம்பளங்களில் அதாவது பல ஆயிரக்கணக்கான டொலர்களில் பணியாற்ற முடியும். தற்போது சான்றிதழ் பெற்ற கப்பல் உத்தியோகத்தினருக்கு (Certified Officers) சர்வதேச கப்பல்களில் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

**கப்பல் தொழில்களிலுள்ள நன்மைகளும் தீமைகளும்**

முதலில் நன்மைகள் பற்றி பார்ப்போமானால் ஊதியத்துடன் உலகத்தை சுற்றி பார்வையிடலாம். வெளிநாட்டு நாணயத்தில் சம்பளம். இதனால் நாணய மாற்று விகிதத்திற்கேற்ப தொகை அதிகரிப்பு. ஆனால் தீமை என்னவெனில் உற்றார், உறவினர்களினது திருமணங்கள், பிறந்த நாள் விழாக்களிலோ மரண வீடுகளிற்கோ சமுகமளிக்க முடியாமல் போகலாம். விபத்துக்கள் கப்பலில் சற்று அதிகமாக ஏற்பட வாய்ப்புண்டு. இதனால் தான் சகல மாலுமிகளிற்கும் பல்வேறு தற்பாதுகாப்புத் துறையில் பயிற்சியளிக்கப்பட்டு கப்பல்களில் ஒத்திகை (Fire &Boat Drill) வாரம் தோறும் இடம்பெறுவது வழக்கம்.


**சம்பள விபரங்கள்**

சாதாரண மாலுமி அல்லது துடைப்பனர் (ordinary seaman) US$ 400-500, தராதர மாலுமி அல்லது இயந்திர ஊழியர் (Able seamen or oiler) US$ 800- US$1000, ஆம்தர கப்பல் அதிகாரி அல்லது 4ஆவது பொறியியலாளர் (3rd offic er or 4th Engineer US$ 2000-US$ 2500, 2ஆம்தர கப்பல் அதிகாரி அல்லது 3 ஆவது பொறியியலாளர் (2nd officer or 3rd Engineer) US$ 3000 -US$ 3500, பிரதம அதிகாரி அல்லது 2 ஆவது பொறியியலாளர் (Chief officer or 2nd Engineer US$ 4000-US$ 4500, கப்பல் கப்டன் அல்லது பிரதம பொறி யிய லாளர் Master of Chief Engineer US $8000-US $10000.

ஆகவே கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் தோற்றிய மாணவர்களே உங்களிற்கு இது ஒரு வரப்பிரசாதமாகலாம். மேலும் விபரங்களிற்கு மேற்படி கல்வி நிறுவனத்திடம் அணுகி பெற்றுக்கொள்ளுங்கள். CINEC Jaffna Campus, K.K.S. Road, Maruthanarmadam, Jaffna. T.P: 021 4925925. E-mail: infojaffna @cinec.edu

கப்பல் தொழிலை பாரம்பரிய தொழிலாக கொண்ட வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Valvai Seamen welfare Association என்று அழைக்கப்படும் வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கம் Cinec இல் கற்கை நெறிகளை மேற்கொள்பவர்களிற்கு உதவி செய்யும் நோக்கில் ஏறக்குறைய ஒரு துணை நிறுவனமாக செயற்பட்டு இலவசமாக பாடங்களை நடாத்தி Lectures using Video and Power point வருகிறது பயன் பெற விரும்புகின்றவர்கள் தலைவர் கா. றஞ்சனதாஸ் என்பவரின் 0779786096 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**கா. றஞ்சனதாஸ்**
(இளைப்பாறிய கப்பல் பிரதம பொறியியலாளர்) தலைவர்,
வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கம்,
வல்வெட்டித்துறை.



யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்திய திருவள்ளுவர் விழா நேற்று யாழ். நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் தமிழ்ச் சங்க உப தலைவர் பேராசிரியர் சி.விசாகரூபன் தலைமையில் நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியருமான தி.வேல்நம்பி, யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.விசாகரூபன், யாழ். பல்கலைக்கழக கல்வியியற் றுறைப் பேராசிரியர் மா. சின்னத்தம்பி ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர். கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகோவை கைது செய்து வழக்கு தாக்கல் செய்யுங்கள்

## சுப்பிரமணிய சுவாமி கோரிக்கை

வைகோவை கைது செய்து வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்று ஜனதா கட்சி யின் தலைவர் சுப்பிரமணிய சுவாமி தமிழக அரசாங்கத்தை கோரியுள்ளார்.

இலங்கையின் உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசத்துக்கு எதிராக தெரிவித்த கருத்து தொடர்பிலேயே அவர் இந்தக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவின் வடக்கு மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் இடையில் பிரச்சினையை ஏற்படுத்தும் வகை யில் காரியவசம் கருத்து வெளியிட்டதாக கூறி அவரை கைது செய்ய வேண்டும் என்று வைகோ கோரியிருந்தார்.

சிங்கள மக்கள் ஒரிசா மற்றும் மேற்கு பிர தேச வம்சாவளிகள். எனவே அவர்களுக்கு இந்தியா வரும் போது இந்திய அரசாங்கம் உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும் என்று பிரசாத் காரியவசம் கோரியிருந்ததாக வைகோ குற்றம் சுமத்தியிருந்தார். இதன்மூலம் இந்தியாவில் இனங்களுக்கு இடையில் பிரச்சினை யை உருவாக்க பிரசாத் காரியவசம் முனைவ தாக வைகோ குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்நிலையில் குறித்த கருத்து தொடர்பி லேயே வைகோவை கைது செய்ய வேண்டும் என்று சுப்பிரமணிய சுவாமி கோரியுள்ளார். (அ-2)

# கொழும்பிலுள்ள இராஜதந்திரிகள் மன்னாருக்கு விஜயம் செய்வர்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள இராஜதந்திரிகள் குழு வொன்று மன்னாருக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

இந்த வார இறுதியில் கொழும்பிலுள்ள உயர் ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்கள் மன்னாரு க்கான விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தத் தூதுக்குழுவின் பலஸ்தீன், பாகிஸ் தான், ஈரான், மலேசியா உள்ளிட்ட முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் உள்ளடங்குகின்றனர்.

அமைச்சர் றிசாத் பதியூதீனின் அழைப் பின் பேரில் செல்லும் இந்த இராஜதந்திரிகள் தூதுக்குழுவிற்கு பலஸ்தீன் தூதுவரும் கொழு ம்பிலுள்ள இராஜதந்திரிகள் அமைப்பின் தலைவருமான கலாநிதி அன்வர் அல் அகா தலைமை தாங்குகின் றார்.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் மீள்குடியேற்றப்பட்டுள்ள செயற்பாடுகளை நேரில் அவதானிப்பதுடன் இவர்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களையும் சந்திக்கவுள் ளனர். (அ-2)

# மத்தல விமான நிலையத்தால் மனித-யானை மோதல் ஏற்படும்

## வனவள ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை

மத்தல விமான நிலையத்தினால் மனித– யானை மோதல்கள் அதிகரிக்கும் என்று வனவள ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மத்தல விமான நிலைய அமைப்புக்காக ஏற்கனவே யானைகள் வாழ்ந்த வனப்பகுதியில் இருந்து 800 ஹெக்டேயர் நிலம் சுவீகரிக்கப் பட்டுள்ளது. விமான நிலையத்தினுள் யானை கள்நுழையாதபடி பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவே யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதலை தீவிரப்படுத்த காரணமாக அமைந்து விடும்.

இந்நிலையில் விமான நிலையத்தை சூழ வுள்ள கிராமங்களில் யானைகளின் அட்டகாசம் அதிகரிக்கும் என்று குறித்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் விமான நிலையத்துக்கு அருகில் வர்த்தக நிலையங்கள் அமைக்கப்படும் போதும் இந்த பிரச்சினை ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# நண்பர்களை விட எதிரிகளே அதிகம்

## கரு எம்.பி.தெரிவிப்பு


நண்பர்களை விடவும் அரசாங்கம் எதிரி களை அதிகளவில் சம்பாதித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய அங்கத்தி னர்களை திரட்டும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், நாடு சகல வழிகளிலும் சீர்குலைந்து பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

நாட்டில் சட்டம் ஒழுங்கு இல்லை. பெருமளவு கடன்களைப் பெற்றுக் கொண்டுள்ளோம். இந்த அரசாங்கம் சர்வதேச அரங்கில் நண்பர்களை விடவும் எதிரிகளின் எண்ணிக்கை அதிகரித் துக் கொண்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)





வல்வை ஆதி பராசக்தி விளையாட்டுக் கழகம் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்ட நிகழ்வினை யும் பரிசளிப்பு விழாவினையும் அண்மையில் சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் நடத்தியது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக வீரனுக்கு பிரதம விருந்தினராக் கலந்து கொண்ட ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் வெற்றிக் கிண்ணம் வழங்கி வைப்பதையும் படங்களில் காணலாம்.

# கிறிஸ்தவர்களுக்கு எதிராக திடீரென வன்முறைகள்

## தேசிய கிறிஸ்தவ புலமை அமைப்பு

கிறிஸ்தவர்களுக்கு எதிராக திடீரென்று மேற்கொள்ளப்படும் வன்முறைகள் குறித்து தேசிய கிறிஸ்தவ புலமை அமைப்பு தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

நாட்டில் அண்மைக்காலமாக கிறிஸ்தவ நிறுவனங்கள் மீது பௌத்த அடிப்படை வாதிகளால் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறாக 2013 ஆம் ஆண்டில் மாத்திரம் 23 சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்நிலையில் குறித்த சம்பங்கள் தொடர்பில் பிழையான, பொய்யான தகவல்களை ஊடகங்கள் பிரசாரம் செய்வதாக கிறிஸ்தவ அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இதேவேளை கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் தாம் முறைப்பாடுகளை தெரிவித்துள்ள போதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று தேசிய கிறிஸ்தவ புலமை அமைப்பின் செயலாளர் வணக்கத்துக்குரிய ரொஹறான் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# தமிழக சட்டசபை தீர்மானத்திற்கு தி.மு.கழக தலைவர் வரவேற்பு

இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வும் தனி ஈழம் குறித்து பொது வாக்கெடுப்பு நடத்தவும் தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையை திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி வரவேற்றுள்ளார்.


இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக் கையில்,

சென்னையில் நடந்த டெசோ மாநாட்டில் 14 முக்கிய தீர்மானங்களில் இது முக்கிய மானதாகும். அதற்கு தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எடுத்துக்காட் டாக அமைவதாக உள்ளது. அதனை வரவேற் கிறேன் என்று கூறியுள்ளார்.

அதே நேரத்தில் டெசோ தலைவர் கருணா நிதி பற்றிய விமர்சனத்தின் மூலம் நமது பொது எதிரி ராஜபக்ச என்பதற்கு பதில் இங்குள்ள அரசியல் தலைவர் கருணாநிதிதான் என்பது போன்ற விரும்பத்தகாத போக்கு ஏற்கத்தக்கது அல்ல என்றும் கி.வீரமணி கூறியுள்ளார். (அ-2)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

# இயேசுவின் கல்லறை மன்னிப்பின் பாடத்தை நமக்கு சொல்லித் தரட்டும்



சனிக்கிழமை அதாவது அன்று ஆயத்த நாளுக்கு அடுத்த நாள், தலைமைக்குருக்களும் பரிசேயர்களும் பிலாத்திடம் கூடி வந்தார்கள். அவர்கள் ஐயா, இயேசு உயிருடன் இருந்தபொழுது மூன்று நாட்களுக்குப்பின்னர் நான் உயிருடன் எழுப்பப்படுவேன் என்று சொன்னது எங்களுக்கு நினைவிலிருக்கிறது. ஆகையால் மூன்று நாட்கள் வரை கல்லறையைக் கருத்தாய்க் காவல் செய்யக் கட்டளையிடும். இல்லையெனில் அவருடைய சீடர்கள் ஒருவேளை வந்து அவன் உடலைத் திருடிச் சென்று விட்டு இறந்த அவர் உயிருடன் எழுப்பப்பட்டார் என்று மக்களிடம் சொல்ல நேரிடும். அப்பொழுது முந்தின ஏமாற்று வேலையைவிடப் பிந்தினது மிகுந்த கேடு விளைவிக்கும் என்றனர்.

அதற்குப் பிலாத்து அவர்களிடம் உங்களிடம் காவல் வீரர்கள் இருக்கிறார் கள் .நீங்களே போய் உங்களுக்குத் தெரிந்தபடி கருத்தாய் காவல் செய்யுங்கள் என்றார். அவர்கள் போய்க் கல்லறையை மூடியிருந்த கல்லுக்கு முத்திரையிட்டு காவல் வீரரைக்கொண்டு கருத்தாய்க் காவல் செய்ய ஏற்பாடு செய்தார்கள்.

காவல் பலமாக இருந்ததனால் கல்லறையை நெருங்க முடியாமல் அன்னை மரியா, மகதலா மரியா, அன்புச்சீடர்கள் தவித்தனர், அந்தக் கல்லறையைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருக்கும் அன்னை மரியா, சீடர்கள் அனைவரின் உள்ளங்களிலும் அலைமோதும் எண்ணங்கள் என்னவாக இருந்திருக்கும்? எத்தனையோ எண்ணங்கள் இருந்தாலும் இயேசு சிலுவையில் தொங்கியபோது சொன்ன பொன்மொழிகள் அவர்கள் எண்ணங்களை ஆக்கிரமித்திருக்கும்.


அவர்களுடன் நாமும் இணைந்து இயேசுவின் இறுதிப் பொன்மொழிகளில் தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை எனக்கூறும் பகுதியை சிந்திப்போம். தன் உலக வாழ்வின் இறுதிக்கட்டத்தில் தன் சொல்லாலும் செயலாலும் இறைமகன் இயேசு மன்னிப்பின் உன்னதத்தை உணர்த்தியதை இங்கு சிந்திப்போம். மன்னிப்பு மழையில் இந்த உலகம் நனைந்தால் சுவாசிப்பதைப்போல் மன்னிப்பதும் நம் ஒவ்வொருவருக்கும் இயல்பாகவே மாறிவிட்டால் இயேசுவின் வேதனையின் உச்சியில் சிலுவையில் அவர் கூறிய அற்புதமான இந்த வார்த்தைகளை அழகான வாழ்க்கைப் பாடங்களை எமக்குச் சொல்லித்தந்து விட்டதே என நாம் மார்பு தட்டி மகிழலாம். இயேசுவின் கல்லறை நமக்கு மன்னிப்பின் பாடத்தைச் சொல்லித்தரட்டும்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மந்திரியின் மதியூகம்



ஒரு சமயம் கலிங்கநாட்டு மன்னர் சந்திரஹாசன் தன் குடும்பத்துடன் காட்டுக்கு உல்லாசமாகச் சென்றார். தனிப்பட்ட முறையில் குடும்பத்துடன் சுற்றுலா சென்றதால் தற்காப்புக்காக ஒரு சில வீரர்களை மட்டும் தன்னுடன் அழைத்துச் சென்ற மன்னர் மந்திரி பத்மசாம்பவரையும் அழைத்துச் சென்றார். அரசாங்க வேலையாக இருந்தாலும் சரி கேளிக்கையாக இருந்தாலும் சரி தனது வலதுகரம் போல் செயற்பட்ட பத்மசாம்பவர் இல்லாமல் மன்னர் எங்கும் செல்ல மாட்டார்.

நாள்முழுவதும் காட்டில் குடும்பத்தினருடன் உல்லாசமாகப் பொழுது போக்கிய பின் அனைவரும் ஊர் திரும்பினர். வரும் வழியில் காட்டில் திடீரென ஒரு புலி எதிரில் வந்து நிற்க அனைவரும் திடுக்கிட்டனர். எதிர்பாராமல் மிக அருகில் புலி வந்து விட்டதால் அனைவரும் சற்று செயலிழந்து திகைக்க மன்னர் மட்டும் உடனே சமாளித்துக்கொண்டு தன் வீரர்களை நோக்கிப் புலியைக் கொல்ல உத்தரவிட்டார். உடனே இடைமறித்த மந்திரி பிரபு அவர்கள் வேண்டாம். நீங்களே தனியொருவராக அந்தப் புலியை விரட்டலாமே! என்றார். மந்திரி அவ்வாறு கூறுவதில் ஏதோ உள்நோக்கம் இருக்க வேண்டும் என்று நம்பிய மன்னர் உடனே புலியை நோக்கிப் பாய்ந்து சென்று அதன்மீது மின்னல் வேகத்தில் ஈட்டியை வீசினார். அந்த ஈட்டி புலியின் உடலில் பாய அது பயங்கரமாக உறுமிக் கொண்டே ஓடிவிட்டது.

மன்னர் புலியை தைரியமாக ஈட்டி வீசி காயப்படுத்தியதைக் கண்ட சுற்றியிருந்த அனைவரும் கைதட்டி ஆரவாரம் செய்தனர். குறிப்பாக ராணிக்குத் தன் கணவனின்



வீரப்பிரதாபத்தைக் கண்ணெதிரே கண்டு மட்டிலா மகிழ்ச்சி ஏற்பட்டது. அரண்மனை திரும்பிய பின் அந்தப்புரத்தில் ராணி மன்னரை மனமாரப் பாராட்டினாள். மற்றவர்கள் மன்னரின் சாகசத்தை ஒன்றுக்குப் பத்தாகக் கூட்டி தலைநகரில் எல்லோருக்கும் தம்பட்டம் அடித்தனர். அதிலிருந்து ஏற்கனவே மன்னரின் வீரத்தின் மீது மக்கள் கொண்டிருந்த மதிப்பு மேலும் பெருகியது.

இந்தச் சம்பவம் நடந்த சில நாட்களில் வங்கநாட்டு மன்னன் சூரசேனன் திடீரென கலிங்கத்தின் மீது படையெடுத்தான். கலிங்கமன்னர் சந்திரஹாசன் தானே முன்னின்று போர்க்களத்தில் மிகுந்த வீரத்துடன் போர் செய்தார். முதல் நாளன்றே எதிரிகளின் படையில் ஏராளமான சேதம் ஏற்பட்டது.

அன்றிரவு மன்னர் சந்திரஹாசன் மறுநாள் போரைப் பற்றிய திட்டங்களை தளபதியுடன் விவாதித்த பின் தளபதி அங்கிருந்து அகன்றார்.

## அம்புலிமாமா கதைகள்

தனிமையில் விடப்பட்ட மன்னரைச் சந்தித்த மந்திரி பிரபு உங்களின் கீழ் இருபதாயிரம் போர் வீரர்கள் இருக்கும் போது நீங்கள் ஏன் முன்னணியில் நின்று போர் புரிய வேண்டும்? நீங்கள் பின்வரிசையில் நிற்கவேண்டும். உங்களைச் சுற்றி சக்கரவியூகம் அமைத்துக் கொண்டு பாதுகாப்பாக இருக்கவேண்டும். நீங்கள் தளபதிக்கு அவ்வப்போது பின்னிருந்தபடியே ஆலோசனைகளை கூறலாமே தவிர நீங்களே முன்னே சென்று போரிடுவது சரியல்ல! என்றார்.

மன்னருக்கு அது கேட்டு ஆச்சரியம் உண்டாயிற்று. சில நாட்களுக்கு முன் காட்டில் புலியைக் கொல்லும் வேலையை அவர்களிடம் விடாமல் தன்னையே முன்னே சென்று செய்யுமாறு கூறியவர் இன்று ஏன் அதற்கு எதிர்மாறாகக் கூறுகிறார். தன் சந்தேகத்தை உடனே மன்னர் மந்திரியிடம் கேட்டும் விட்டார்.

அதற்கு மந்திரி சிரித்துக் கொண்டே, பிரபு! அன்றிருந்த சூழ்நிலை வேறு! இன்றுள்ள சூழ்நிலை வேறு! அன்று நீங்கள் இருந்தது ஒரு காடு! எதிர்ப்பட்டது ஆறறிவற்ற ஒரு



காட்டு விலங்கு! மின்னல் வேகத்தில் அது பாயமுடியும்! அது மனிதனைத் தாக்கும் விதம் வேறு! தங்களுடனிருந்த வீரர்கள் போர்க்களத்தில் போர்புரியப் பயின்றவர்கள். காட்டு விலங்கைக் கண்டு அவர்கள் யோசிக்கும் திறனற்று செயலிழந்து நின்றனர். அதனால் புலியைக் கொல்லுமாறு சொன்னேன். வேட்டையாடும் பழக்கம் உங்களுக்கு உண்டு. அதனால் புலியைக் கொல்வது உங்களுக்கு கடினமான வேலையல்ல. உங்களுக்கு புலியினால் ஆபத்து நேராது என்று தெரியும்.

நான் எதிர்பார்த்தபடி அன்று நீங்கள் புலியை தாக்கிய தகவல் நாடெங்கும் பரவி எல்லோருக்கும் உங்கள் வீரத்தின் மீது தனி மதிப்பே உண்டாகி விட்டது. ஆனால் இன்றைய சூழ்நிலை வேறு!. யுத்தக்களத்தில் உங்கள் எதிரே பல்லாயிரக்கணக்கான எதிரிகள்! நீங்கள் முன்னணியில் நின்று எவ்வளவுதான் வீரத்துடனும் எச்சரிக்கையுடனும் போரிட்டாலும் எதிரிகளில் எவனாவது ஒருவனின் ஈட்டியோ வாளோ உங்கள் மீது பாய்ந்தால் என்ன ஆவது? நீங்கள் யார்? இந்த நாட்டுக்கு மன்னர்! திருமாலின் அவதாரமாக கருதப்படும் நீங்கள் உங் களை ஆபத்துக்கு உள்ளாக்கிக்கொள்ளலாமா! வீரர்களை நீங்கள் ஏற்கனவே ஊக்குவித்து விட்டீர்கள். அதுபோதும்! இனி பின்னின்று போரை நடத்தும் ஆலோசனைகளை மட்டும் கூறுங்கள்.

தவிர! மற்றொரு விடயம்! போர்க்களத்தில் உங்கள் வீரத்தை உங்கள் படைவீரர்கள் மட்டும்தான் பார்க்க முடியும். ராணியால் பார்க்க முடியுமா? முடியா... வா! அதனால்தான் உங்கள் வீரத்தை நேரில் பார்க்க ராணிக்கு அன்று வாய்ப்பினை ஏற்படுத்தினேன்! ராணி உங்களைப் பார்த்த பார்வையில் எத்தனை பெருமையும் மகிழ்ச்சியும் இருந்தது என்று பார்த்தீர்களா? என்றான்.

சபாஷ் மந்திரி! உங்களைப் போன்ற மதியூகியை நான் பார்த்ததேயில்லை. நீங்கள் என்னுடன் இருப்பதை நான் எனது மிகப்பெரிய பாக்கியமாகக் கருதுகிறேன் என்று மந்திரியை மன்னர் மனமாரப் பாராட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைந்து செயற்படுதல்

ஆன்மீகம் 03



பரமஹம்ஸ நித்தியானந்தர்

இவையனைத்தும் படைப்புகள். இதயத்திலிருந்து வரும் படைப்புகள், உங்கள் இதயத்தின் வெளிப்பாடுகள். உங்களால் உணர்வேயின்றி ஒரு கவிதை எழுத முடியுமா? ஒரு ஓவியனால் மூளையை மட்டும் வைத்துக்கொண்டு ஓவியம் வரைய முடியுமா? முடியாது. இதயத்துடன் தொடர்பு கொள்ளும்பொழுது கலை தானாகவே எழுகிறது.

நீங்கள் கவிதை எழுதுவது பற்றியோ அல்லது ஓவியம் வரைவது பற்றியோ, உங்கள் மூளையில் சில குறிப்புக்களையோ அல்லது உத்திகளையோ எடுத்து வைத்திருக்கலாம்! ஆனால், இறுதியாக அது இதயத்திலிருந்து மட்டுமே எழும். யாரும் உங்களுக்குக் கவிதை எழுதுவதற்கோ அல்லது ஓவியம் வரைவதற்கோ கற்றுத்தர முடியாது. அவர்கள் உங்களுக்கு சில உத்திகளைக் கற்றுத்தர முடியும். அவ்வளவே. பின்னர் நீங்களே விடயத்தை கிரஹித்துக் கொண்டு, சொந்தமாகத்தான் செய்யத் தொடங்க வேண்டும்.

மூன்றாவது வகை, ஆன்மீக அறிவு- இது உங்கள் மூளையையோ அல்லது இதயத்தையோ சார்ந்தது அல்ல; உங்கள் இருப்புத் தன்மையைச் சார்ந்தது! உண்மையில் அதை அறிவு என்றுகூடச் சொல்ல முடியாது. அது தர்க்கத்திற்கு அப்பாற்பட்ட ஆழ்ந்து புரிந்துகொள்ளும் தன்மையாகும். அது கற்றுத்தரவோ, எடுத்துக் கொள்ளவோ முடியாதது. அது இருப்புத்தன்மை நிலையில் ஆழ்ந்து சங்கமிக்கும் பொழுது தானாகவே நிகழ்கிறது.

நான் எப்பொழுதும் மக்களிடம் சொல்வதுண்டு: என்னால் உங்களுக்கு ஆன்மீகத்தைக் கற்றுத்தர முடியாது. ஆனால், உங்களால் கற்றுக்கொள்ள முடியும்! இருப்புத் தன்மைநிலையில்- சக்தியைக் கிரஹித்துக் கொள்வதைப்போல- குருவின் வார்த்தைகளைக் கிரஹித்துக் கொள்வதன் மூலம் வார்த்தைகளுக்குப் பின்னால் இருக்கும் ஆற்றல் மிகவும் சக்தி வாய்ந்தது. குருவின் வார்த்தைகளை அனுமதித்தால், அது ஊடுருவிக் கொண்டு சென்று உங்களை இருப்புத் தன்மை நிலையில் தொடவல்ல சக்தி நிரம்பியது. அது மூளையிலிருந்து வரும் சாதாரண வார்த்தைகளாலோ அல்லது இதயத்தின் உணர்வுகளாலோ நிகழ முடியாத உருமாற்றத்தைக் கொண்டு வரவல்லது.

நான் பேசும் பொழுது, என்னுடைய இருப்புத் தன்மையிலிருந்து, இறுதி உண்மையை அறிந்து என் அனுபவத்திலிருந்து பேசுகிறேன். நீங்கள் கேட்கும் பொழுது, உங்கள் இருப்புத் தன்மையில் இருந்து முழுமையாகக் கேளுங்கள். அப்பொழுதுதான் உங்களுக்கு என் அனுபவத்தின் க்ஷண நேரக் காட்சியாவது கிடைக்கும். நான் இங்கு உங்களுக்கு வெறும் வார்த்தைகளைக் கொடுப்பதற்காக வரவில்லை. உங்களை வார்த்தைகளுக்கு அப்பால் எடுத்துச் செல்லவே வந்திருக்கிறேன். இங்கு நீங்கள் அமைதியுடனும் கூர்மையான விழிப்புணர்வுடனும் இருந்தால், வார்த்தைகளுக்கு அப்பால் சென்று உங்கள் இருப்புத் தன்மையைத் தரிசிக்க முடியும்.

சரி, இப்பொழுது நீங்கள் உட்கீர்ந்து இருக்கும் இருக்கை அமைப்பைச் சற்று மாற்றியமைப்போம். நீங்கள் அமரும் பொழுது, உறவினர்கள், நண்பர்கள் அல்லது தெரிந்தவர்களுடன் அமராதீர்கள். உங்களுக்கு முன்பின் அறிமுகமில்லாத, பழக்கமில்லாத எவரருகிலாவது அமருங்கள். ஏனெனில் தெரிந்தவர்கள் அருகில் அமரும் பொழுது நான் பேசிக் கொண்டிருக்கும் பொழுது நீங்கள் பார்வைகளையோ அல்லது வார்த்தைகளையோ பரிமாறிக் கொள்ளும் நிர்ப்பந்தம் ஏற்படலாம். முன்பின் அறிமுகமற்றவர்களுடன் அமரும் பொழுது, தனியாக இருப்பதால் என்னை இன்னும் நன்றாக உட்கிரஹித்துக்கொள்ள முடியும்.


ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ளுங்கள். நான் இதை எப்பொழுதும் என் உரைகளில் சொல்வதுண்டு: வகுப்பு நிகழ்ந்து கொண்டிருக்கும் பொழுது, ஒரு அழகான பிரவாகம், ஒருசக்தி உற்பத்தியாகி அறை முழுவதும் அதிர்ந்து கொண்டிருக்கும். உங்களுக்கும் எனக்குமிடையே ஒரு ஆழமான சங்கமம் நிகழ்ந்து கொண்டிருக்கும். தாமதமாக வந்து அந்தச் சக்தியோட்டத்தைத் தடைப்படுத்தி விடாதீர்கள். அந்தப் பிரவாகம் தடைப்பட்டுவிடும்.

அது உங்கள் வாகனம் ஒரு நெடுஞ்சாலையில் வழுக்கிக் கொண்டு சென்று கொண்டிருக்கும் பொழுது எதிர்ப்படும் ஒரு வேகத்தடை போன்றது. வேகத்தடை ஒரு சின்னத் தடங்கல்தான். ஆனால், அதைக் கடப்பதற்கு கொஞ்சம் வேகத்தைக் குறைத்து, அதைக் கடந்து பின்னர் மீண்டும் வேகமெடுக்க வேண்டும். மென்மையான சீரான ஓட்டம் தடைப்பட்டுவிடும்.

தயவுசெய்த உங்கள் செல்போன்களை அணைத்து விடுங்கள். இந்நாட்களில் அவை இன்னொரு பொதுவான வேகத்தடையாக இருக்கிறது! உண்மையில் அவை பயணம் முழுவதையும்- ஒன்றன்பின் ஒன்றாகப் பலவேகத்தடைகளால்- மேடும் பள்ளமுமாக ஆக்கி விடுகிறது! நீங்கள் அனைவரும் ஆளுக்கொரு செல்போன் வைத்திருப்பீர்கள் என்று நிச்சயமாக என்னால் சொல்ல முடியும்!

(தொடரும்)

# இந்தியாவைத் தட்டிக்கழித்துவிட்டு சீனாவுடன் கைகோர்க்கும் இலங்கை



அயல்நாடுகளுடன் எவ்வாறு கசப்பான உறவைப்போணுவது மற்றும் அயல்நாடுகள் மீது செல்வாக்குச்செலுத்தக்கூடிய வாய்ப்புக்களைக் கூட எவ்வாறு இழப்பது என்பது தொடர்பாக ஒரு வழிகாட்டல் நூல் இருந்திருந்தால் இலங்கை விடயத்தில் இந்தியா சரியான வகையில் நடந்துகொண்டிருக்கும். இலங்கையில் சீனா தனது செல்வாக்கை அதிகத் செலுத்தி வருகின்ற இந்நிலையில் இந்தியா தனக்குக் கிடைக்கும் சிறிய வாய்ப்புக்களைக்கூட தவறவிடுவதாக பிசினஸ் ஸ்ராண்ட் ஆல் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை விடயத்தில் இந்தியா தரை- கடல் மற்றம் வான் ஆகிய மூன்று வழிகளிலும் தனக்கு இருந்த செல்வாக்கை இழந்துள்ளது. இந்தியாவின் இலங்கை மீதான இராஜதந்திர சுய இலக்குகளில் ஏற்பட்டுள்ள இடைவெளியை தற்போது சீனா மிகத் துரிதமாக நிரப்பியுள்ளதாகவும் இந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்த வாரம் இந்தியா இருவேறுபட்ட பிரச்சினைக்குள் மாட்டிக்கொண்டது.

அதாவது, [illegible] பேரவையில் [illegible] அமெரிக்கா தலைமையில் முன்வைக்கப்பட்ட தீர்மானம் மற்றும் மத்தியில் அரசாங்கத்தை அமைத்துள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலிருந்து தி.மு.க விலகியமை ஆகிய இரு அழுத்தங்கள் தொடர்பிலும் இந்தியா முடிவெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது.

இலங்கை மீதான இந்தியாவின் நிலைப்பாட்டை சீனா தனக்கு சாதகமாக்கியுள்ளது.

இலங்கை அதன் தேசிய இறையாண்மையைப் பாதுகாப்பதற்காக எடுக்கும் முயற்சிகளுக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் நிறைவேற்றப்படும் தீர்மானம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் சீனா தொடர்ந்தும் இலங்கைக்கு ஆதரவளிக்கும் எனவும் தற்போது சீனாவில் புதிதாகப்பதவியேற்றுள்ள அதிபர் ஜி ஜின்பிங் தொலைபேசியூடாக இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்சவுக்கு உறுதியளித்திருந்தார்.

ஈழத்தமிழர்கள் விவகாரம் தொடர்பில் தமிழ்நாட்டைச்சேர்ந்த தி.மு.க. மட்டுமன்றி அ.தி.மு.க. மற்றும் [illegible] அரசியல் கட்சிகளும் இந்திய மத்திய அரசாங்கம் மீது அதிக அழுத்தங்களைக்கொடுத்து வருகின்றன.

இந்திய மத்திய அரசாங்கம் உள்நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் அழுத்தத்தை ஈடு செய்து தனது ஆட்சியை நிலை நிறுத்திக்கொள்வதற்காக இலங்கை தொடர்பான வெளியுறவுக்கொள்கையில் சில விட்டுக்கொடுப்புகளைச் செய்ய .வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான விட்டுக் கொடுப்புக்கள் ஆபத்தை உண்டுபண்ணுகின்ற போதி லும் இந்தியா இதனைச் செய்ய வேண்டியுள்ளது.

எடுத்துக்காட்டாக இலங்கையில் நடத்தத் திட்டமிட்டுள்ள பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாட்டில் கலந்துகொள்ளாது அதனை இந்தியா புறக்கணிக்கவேண்டும் என தி.மு.க. மற்றும் அ.தி.மு.க போன்ற தமிழ்நாட்டுக்கட்சிகள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்திடம் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

அண்மையில் தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்த இலங்கை யாத்திரிகர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட த ாக்குதல்கள் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள இலங்கை வர்த்தக நலன்கள் மீதான தாக்குதல்போன்றன சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகம் மூடப்படவேண்டும் என்ற தீர்மானத்தை அந்நாட்டு அரசாங்கம் எடுப்பதற்குத் தூண்டியுள்ளன.

இலங்கை மீதான இந்தியாவின் மூலோபாய மற்றும் வர்த்தக சார் நலன்கள் பாதிக்கப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தை சீனா மிக இலகுவாகப்ப யன்படுத்துகின்றது.


இணையம்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்காயத்தில் அறுவடைக்கு பிந்திய அழுகல்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 25-V



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இம் முறை வரவேற்பு உற்சாகமானதாக இல்லை என்பது தெரிகின்றது. வெங்காய செய்கையில் ஈடுபடும் எமது விவசாயிகளுக்கு சோதனை நிறைந்த காலமாக இவ்வருட ஆரம்பம் அமைந்திருக்கின்றது. காலநிலை மாற்றத்தினுடைய அனுசரணையினால் வெங்காயப் பயிரில் பல்வேறு வகையான பூஞ்சண தொற்றுக்கள் ஏற்பட்டு விளைநிலத்திலேயே பயிர் வாடி அழிவுற்றதை கண்டு உற்பத்தியாளர்கள் அடைந்த சோகம் மறைய இது உருவெடுத்திருப்பது இம்முறை உள்ளூர் வெங்காயத்திற்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை ஏற்படுத்தவும் மேலும் இதனால் விலை எகிறவும் வாய்ப்பாகி விட வழியுண்டு.

இம்முறை சிறிய வெங்காயத்திற்கு ஏற்பட்ட இந்நிலையால் விதை வெங்காயத்திற்கான தட்டுப்பாட்டையும் தோற்றுவிக்க வழியுண்டு என்பதனையும் மறுதலிக்க முடியவில்லை. எங்களூரின் பணப்பயிர்களில் ஒன்றான சின்ன வெங்காயத்தின் உற்பத்தியிலும் பின்னர் அதனது சேமிப்பிலும் ஏற்பட்டுள்ள ருந்த அதிகளவிலான ஈரப்பதன் பூஞ்சண நோயினை பெரிதாக்கியிருக்கின்றது. எமது ஆய்வில் ஆறு வகையான பூஞ்சணங்களின் தொற்று இருந்ததையும் அதனால் வெங்காயப்பயிர் வீரியமிழந்து இருந்தமையும் குறித்தெடுத்தோம்.

மேலாக அறுவடையின் போது பெய்த கனமழை மீண்டும் வெங்காயத்திற்கான சோதனைக்காலமாக மாறிவிட்டது. அறுவடை முடிந்து வெங்காயம் காய வைத்த காலப்பகுதியில் ஈரப்பதன் அதிகமாக இருந்தது பூஞ்

முன்பு இன்னொரு இடி இடித்திருக்கின்றது.

நோயிலிருந்து காப்பாற்றப்பட்ட வெங்காயத்தை தெரிந்து காயவைத்து கத்தை கட்டி தூக்கியிருக்கும் இடங்களில் கத்தையின் உட்பகுதியில் அதுவும் நடுப்பகுதியிலிருந்து அழுகல் ஆரம்பித்து நாளடைவில் அதுவும் விரைவாக கத்தை முழுக்க பரவலடைந்து விட்டது. கைக்கெட்டியது வாய்க் கெட்டவில்லை என்னும் கதையை நிருபித்திருக்கின்றது இம்முறை வெங்காயத்தில் ஏற்பட்டிருக்கும் அழுகல்.

பல விவசாய பெருமக்களினது அறுவடைக்கு பின்னர் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் பாரிய பிரச்சனையாக பிரச்சினை அனைத்து வெங்காய செய்கையாளர்களையும் இம்முறை பாதிக்க வைத்து விட்டது.

இப்பிரச்சினையிலிருந்து உடனடியாக மீள்வதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவே. வெங்காயம் விளைவித்த காலப்பகுதியில் காலநிலையில் ஏற்பட்ட சடுதியான மாற்றம் இவ்வளவுக்கும் காரணம். இருப்பினும் அதனுடன் சேர்த்து விவசாயிகளின் குறிப்பிட்ட செய்முறைகளும் இதற்கு அனுகூலமாக இருந்திருக்கின்றது.

இவ்வருட ஆரம்பத்தில் முற்றிலும் எதிர்பாராதவாறு பெய்த மழை அனைத்தையும் மாற்றிவிட்டிருக்கின்றது. விளைநிலத்திலேயிருந்து சணங்களின் மேலதிக தொற்றுதலுக்கு வாய்ப்பாகி விட்டது. மேலும் நன்றாக காயாத நிலையிலும் வெங்காயத்தாள் வீரியமிழந்த நிலையிலும் நெருக்கமாக சேர்த்துக்கட்டிய கத்தைகளின் நடுப்பகுதியில் அதிக ஈரத்தன்மையும், காற்றோட்டம் அதிகமாக இல்லாதிருந்ததாலும் அழுகலுக்கான தூண்டுதலாகி விட்டது.

பூஞ்சணங்களினாலான தொற்றுதல் ஆரம்பம் ஆகினும் பின்னர் அதில் இலையான் குடிகொள்ள அழுகல் ஏனைய வெங்காயத்திலும் தொற்றுதலாகி தொடர்ந்து அழுகுகின்றது. இங்கே முக்கியமாக கத்தை கட்டுவதில் மாற்றம் தேவை. முழு வெங்காயமும் வெளித்தெரிய கத்தை கட்டுவதால் அழுகல் ஏற்படுவதை தடுக்கலாம்.

கத்தையை பிரித்து காய வைப்பதும் நல்லது. அதிகளவில் மருந்து விசிறி ஈரப்பதனை அதிகரிக்க வைக்கக்கூடாது. இவை பற்றி இன்னும் அலசுவோம். அடுத்த முறை வெங்காய செய்கையை கவனமாக செய்ய இது வழிவகுக்கும்.

## சீன நாட்டு பெண்கள் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

இலங்கையின் விசா சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட ஏழு சீன நாட்டு பெண்களில் இருவர் நாடு கடத்தப்பட்டனர்.

மேலும் மூவர் இன்று நாடு கடத்தப்படுவர் என்று குடிவரவு கட்டுப்பாட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன் இரண்டு சீன பெண்கள் தொடர்பிலான விசாரணைகள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு சோதனையின் போது குறித்த ஏழு சீன பெண்களுடன் மேலும் ஏழு தாய்லாந்தைச் சேர்ந்த பெண்களும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் சுற்றுலா விசாவில் வந்து இலங்கையில் பணியாற்றியதாக குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டனர். (அ-2)




மின்சார கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மின்சார நுகர்வோர் தேசிய இயக்கம் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியனவே இந்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவில் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர். மின்சார கட்டணங்களை நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் 50 சதவீதத்தினால் அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## நல்லின நெல் விதைகள் விற்பனை

கிளிநொச்சி மாவட்ட பரந்தன் விவசாய விதைப் பண்ணையில் சிறந்த இன நெல் மற்றும் விதை வகைகள் விற்பனை செய்ய தனியான விற்பனை நிலையம் ஒன்று பரந்தன் விவசாய விதைப்பண்ணையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இங்கு விவசாயம் தொடர்பான அறிவு சார்ந்த புத்தகங்கள், விவசாயிகளுக்கான நன்மை பயக்க கூடிய முறையிலான அறிவுறுத்தல் பிரசுரங்கள் என்பனவும் மிகவும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

காலநிலைக்கு ஏற்ப விதைக்கக்கூடிய நெல் இனங்கள் இங்கு விவசாயிகளுக்கு வழங்கப்படுவதால் அவற்றைப் பெற்று விவசாயிகள் நன்மை அடைய கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-3-254)

## தேசிய மொழி கொள்கையை அமுல்படுத்த ஐந்தாண்டு திட்டம்

(கொழும்பு)

தேசிய மொழி கொள்கையை சீராக அமுலாக்க ஐந்தாண்டு திட்டம் ஒன்றை முன்னெடுக்க தேசிய மொழி மற்றும் சமூக இணக்கப்பாட்டு அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"அரச கரும மொழிகளை முறையாக அமுலாக்குவதன் ஊடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்த திட்டம் அமுலாக்கப்படவுள்ளது.

நாடளாவிய ரீதியாக அரச பணியாளர்களின் மும்மொழி ஆற்றலை கண்டறிவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனை கண்டறிந்து மூன்று மொழியிலும் அரச பணியாளர்கள் பணியாற்றுவதற்கான பயிற்சிகளை வழங்க அமைச்சு நடவடிக்கை எடுக்கும். சகல அரசாங்க அலுவலகங்களுக்கும் இது தொடர்பிலான படிமங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## வாகன விபத்தில் மூவர் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, புத்தடி நாகதம்பிரான் ஆலயத்திற்கு முன்பாக இடம்பெற்ற வீதி விபத்தில் மூவர் பலியாகியுள்ளனர். இச்சம்பவம் நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் ஒருவர் ஸ்தலத்திலே பலியாகியுள்ளதுடன் ஏனைய இருவர் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது, வீதியால் பயணித்த டொல்பின் ரக வான் ஒன்று வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி மற்றும் துவிச்சக்கரவண்டி வீதியில் நின்று கொண்டிருந்தவர்களுடன் மோதியதில் குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து டொல்பின் ரக வாகன சாரதியை களுவாஞ்சிக்குடி பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

## கொழும்பு தமிழ் சங்கத்தில் நூற்கண்காட்சியும் விற்பனையும்

கொழும்புத் தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்துள்ள நூற்கண்காட்சி, நூல் விற்பனை, ஓவியக்கண்காட்சி ஆகியன நேற்றைய தினம் ஆரம்பமாகி தொடர்ந்து 3 நாட்கள் காலை 9 மணி தொடக்கம் மாலை 7 மணிவரை காலை, மாலை என இரு அமர்வுகளாக கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராசா, தமிழ்ச்சங்க இலக்கியக் குழுச் செயலாளர் மு.தயாபரன், சங்கத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய துணைத்தலைவருமான மு. கதிர்காமநாதன், சங்கத்தின் துணைத் தலைவர் கி.இராஜகுலேந்திரா, சங்கத்தின் நூலகக் குழுச் செயலாளர் மா.கணபதிப்பிள்ளை ஆகியோர் குறித்த மூன்று தினங்களிலும் காலையிலும் மாலையிலும் நடைபெறும் நிகழ்வுக்குத் தலைமை தாங்க வுள்ளனர்.

இதில் காலை அமர்வின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் துணைத் தலைவர் மு. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும். இன்றையநாள் நிகழ்வுகள் இரு அமர்வுகளாக நடைபெறும். இந்நிகழ்வின்போது கண்காட்சியினை இலங்கை தென்னிந்திய திருச்சபையின் பேராயர் டானியல் தியாகராஜா திறந்து வைக்கவுள்ளார். அத்துடன் மாணவர்களுக்கான வாசிப்பு அறிவுப்போட்டி, பரிசளிப்பு நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளது.

மாலை அமர்வு கொழும்பு தமிழ்ச்சங்க துணைத் தலைவர் ஜி.ராஜகுலேந்திரா தலைமையில் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். இதன்போது மாணவர்களுக்கான வாசிப்பு அறிவுப் போட்டி, பரிசளிப்பு நிகழ்வு என்பன இடம்பெறும். (அ-2)

## தரக்குறைவான தேயிலை மீட்பு

கொழும்பு துறைமுகத்தில் வைக்கப்பட்டிருந்த 12 மில்லியன் ரூபா பெறுமதியான தரக்குறைவான தேயிலையை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். குவைத் நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்காக மூன்று கொள்கலன்களில் இத் தேயிலை அடைக்கப்பட்டு காணப்பட்டுள்ளது. பொரலஸ்கமுவை சேர்ந்த வர்த்தகர் ஒருவரே இத்தேயிலையை ஏற்றுமதி செய்யவிருந்ததாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தால் இலங்கையில் உண்மையான தரம்மிக்க தேயிலை பற்றிய தவறான கருத்துக்கு வழிவகுத்திருக்கும் என சுங்க அதிகாரிகள் கூறினர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன, மத, குரோதங்களை தடுக்க சட்டங்களை இயற்ற வேண்டும்

## மங்கள எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டில் இன, மத, குரோதங்களை தடுப்பதற்கு அரசாங்கம் சட்டங்களை அமுல்படுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

ராஜகிரியவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழீழ விடுதலைப்புலிகள் பாசிசவாதத்தை பின்பற்றினர். சிங்கள-முஸ்லிம் மக்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டனர். மாற்று கருத்துக்களை வெளியிடும் இந்து மதகுருமாரும் தாக்கப்பட்டனர்.

அரந்தலாவ பகுதியில் அண்மையில் பௌத்த பிக்குகள் கொலை தொடர்பில் மூன்றரை கோடி ரூபா செலவில் அருங்காட்சியகமொன்று அமைக்கப்பட்டது.

இதில் கொலையுண்ட பௌத்த பிக்குகளின் உருவச் சிலைகள் அமைக்கப்பட்டிருந்தன. எனினும் கொலைகளை செய்த புலிகளின் சிலைகள் இதில் வடிக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த பாசிச கொலைகளை செய்யத் திட்டமிட்ட கருணா மற்றும் பிள்ளையான் ஆகியோர் ஜனாதிபதியின் கொள்கைகளை ஏற்றுக் கொண்ட காரணத்தினால் சிலைகள் அமைக்கப்படவில்லை.

புலிகள் தோற்கடிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள போதிலும் பிரபாகரனின் பாசிசவாத கொள்கைகளை இந்த அரசாங்கம் பின்பற்றி வருகின்றது.

பிரபாகரனின் குரோத அரசியலை இன்று மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் நாடு முழுவதிலும் வியாபித்துள்ளது. கடும்போக்குடைய மத அமைப்புகளுக்கு அரசாங்கம் ஆதரவளித்து வருகின்றது.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் மத வழிபாட்டுத் தளங்கள் மீது 65 தடவைகள் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன. கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மத வழிபாட்டுத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றது.

இவ்வாறு தாக்குதல் நடத்துவோர் பற்றி எங்களிடம் தகவல்கள் காணப்படுகின்றன. தாக்குதல் நடத்துவோருக்கு எதிராக பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (அ-2)

# மருத்துவ அறிக்கையை கோருகின்றது நீதிமன்று

(கொழும்பு)

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா மீது எம்.ஆர்.ஐ.ஸ்கான் மேற்கொண்டு அவரது உடல்நிலை பற்றிய அறிக்கை சமர்ப்பிக்க மேலும் கால அவகாசம் கோரப்பட்டுள்ளது.

குறித்த கோரிக்கை சட்ட மருத்து அதிகாரியினால் கொழும்பு மேலதிக நீதவானிடம் விடுக்கப்பட்டது.

சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையை பார்வையிட்டபின்னரே துமிந்த சில்வாவை நீதிமன்றில் ஆஜர் செய்வதா அல்லது அவரை நீதிமன்றிற்கு அழைக்காமல் விசாரிப்பதா என தீர்மானிக்க போவதாக மேலதிக நீதவான் சந்துன் விதான தெரிவித்தார்.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் மே மாதம் 8 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ-2)

# பொருளாதார அபிவிருத்தியால் இலங்கை மீது கடும் அழுத்தம்

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் யாப்பா

பொருளாதார அபிவிருத்தியை நோக்கி செல்லும் நாடு என்ற அடிப்படையில் வெளிநாடுகளின் அழுத்தங்களை இலங்கை எதிர்கொள்ள வேண்டும் என அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கை மீது தற்போது பிரயோகிக்கப்படுகின்ற பல்வேறு அழுத்தங்களுக்கு இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியே காரணம் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நிலையில் அபிவிருத்தி நோக்கி பயணிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

இதனை முறையாக செய்யும்போது வெளிநாடுகள் அதற்கு எதிரான அழுத்தங்களையும் பிரயோகிக்கும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஷிராணியின் விடயம் தொடர்பில் விசாரிக்க முடியவில்லை

## சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம்

(கொழும்பு)

இலங்கையில் பிரதம நீதியரசர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமையானது சட்டத்துக்கு புறம்பான செயலாகும். அத்துடன் சட்டத்தின் மீது பொதுமக்களுக்கு உள்ள நம்பிக்கையை இது குறைக்கும் செயற்பாடு என்று சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் மனிதவுரிமைகள் நிறுவனஇணைத் தலைவர் ஸ்டேன் மோயா குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட குற்றவியல் பிரேரணை மற்றும் அவர் நீக்கப்பட்ட விதம் என்பன இலங்கை ஒரு ஆபத்தான நாடு என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தமது நிறுவனம் விசாரணையை நடத்த முயன்ற போதும் அதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை என்று மோயா குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)





இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினால் ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்க நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிரந்தர வீட்டுத் திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் அண்மையில் கூழாமுறிப்பு பிரதேசத்தில் வைபவ ரீதியாக பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பயனாளி ஒருவரின் வீட்டினை செஞ்சிலுவை சங்கத்தின் உயர் மட்ட அதிகாரி திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

# உறுப்பினர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

## தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களில் காணப்படும் உறுப்பினர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் பல உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர் பதவிகள் வெற்றிடமாக காணப்படுகின்றன. இவர்கள் பழைய உள்ளூராட்சி சட்டத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டமையினாலேயே இந்த வெற்றிடங்கள் காணப்படுகின்றன என பிரதி தேர்தல் ஆணையாளர் முஹம்மட் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நிலையில் உள்ளூராட்சி திருத்த சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமையினாலே இந்த வெற்றிடங்களை நிரப்ப முடியாதுள்ளது. எனினும் தற்போது இதற்காக தற்காலிக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு அமைய பழைய சட்டத்தின் அடிப்படையில் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்றார்.

இதேவேளை, பழைய சட்டத்திற்கு அமைய உறுப்பினர்களை நியமிப்பதற்கான சட்டமூலமொன்று இன்னும் ஓரிரு மாதங்களில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என அமைச்சின் செயலாளர் ரணவக்க தெரிவித்தார். (அ-2)

# மட்டு. உள்ளூ. மன்றங்களுக்கு வட்டார முறையில் தேர்தல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபை உட்பட ஒன்பது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் வட்டார முறையின் அடிப்படையிலேயே இடம்பெறவுள்ளன என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி சட்ட மூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த புதிய திருத்தத்தின் அடிப்படையில் வட்டார முறையிலேயே ஒன்பது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களும் நடத்தப்படும் என பிரதித் தேர்தல் ஆணையாளர் ஏ.மொஹமட் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பிலான அறிவிப்பை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும். அதுவரையில் தேர்தல் திணைக்களத்தினால் தேர்தல் தொடர்பிலான எந்த வித முடிவுகளையும் எடுக்க முடியாது எனவும் சுட்டிக் காட்டினார்.

பணிகள் எதிர்வரும் ஜூலை மாதத்திற்கு முன்னர் நிறைவடையவுள்ளன. இதனை தொடர்ந்து ஒன்பது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறும் என அவர் குறிப்பிட்டார். உள்ளூராட்சி சட்ட மூலத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் வட்டார முறையிலேயே தேர்தலை நடத்த முடியும். வட்டார முறையில் தேர்தலை நடத்துவது என்றால் எல்லை நிர்ணய குழுக்களினை நியமிக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கத் தீர்மானத்தின் வெற்றி; சவால்களை சமாளிக்குமா இலங்கை?

ஜெனீவாவில் மீண்டும் ஒருமுறை இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப் பட்டுள்ளது. கடந்தமுறை 40 நாடுகளின் இணை அனுசரணையுடன் கொண்டு வரப்பட்ட தீர்மானம், இந்த முறை 41 நாடுகளின் இணை அனுசரணையுடன் கொண்டு வரப்பட்டது.

அதுபோலவே கடந்தமுறை 24 நாடுகள் ஆதரவு தெரிவித்த தீர்மானத்துக்கு இந்தமுறை 25 நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. இம்முறை தீர்மானத்துக்கு ஆதரவாக அதிகளவு நாடுகள் வாக்களிக்கும் என்று தகவல்கள் வெளியாக போதிலும் கடந்தமுறையைவிட ஒரு நாட்டின் வாக்குத்தான் அதிகரித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளில் 25 நாடுகள் மட்டும் ஏற்றுக்கொண்ட இந்தத் தீர்மானத்துக்கு அதிகளவு நாடுகளின் ஆதரவு கிடைக்கவில்லை என்கிறது இலங்கை.

ஏதோ அருந்தப்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்பது போலுள்ளது இலங்கையின் நிலைப்பாடு. அதாவது, அமெரிக்காவின் தீர்மானத்தை எதிர்த்து கொண்டு வந்த தீர்மானம் என்பதால் அமெரிக் காவை எதிர்க்க வேண்டும் என்பதற்காக வாக்களித்த நாடுகளும் உள்ளன. அதேபோல் அமெரிக்காவின் தீர்மானத் தின் உள்ளடக்கத்தை விளங்கிக் கொண்டு அதற்கு ஆதரவாக வாக்களி த்த நாடுகள் சில. அமெரிக்காவுக்காக வாக்களித்த நாடுகள் சில.

இலங்கைக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்ற பல்வேறு அழுத்தங்களின் காரணமாக ஆதரித்து வாக்களித்த நாடுகள் சில.

இப்படியாக ஒரே தீர்மானத்தின் மீது பல்வேறு அடிப்படைக் காரணங்களின் நிமிர்த்தம் ஆதரித்தும் எதிர்த்தும் வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன.

எனவே, ஜெனீவா தீர்மான வாக்கெடுப்பை அடிப்படையாகக்கொண்டு தீர்மானத்துக்கு எதிராக அளிக்கப்பட்ட வாக்குகள் அனைத்தையும் இலங்கைக்கு ஆதரவான வாக்குகள் என்றோ, தீர்மானத்துக்கு ஆதரவாக அளிக்கப்பட்ட வாக்குகள் அனைத்தையும் இலங்கைக்கு எதிரானது என்றோ எடுத்த எடுப்பிலேயே தீர்மானிக்க முடியாது ஆனால், இந்த வாக்கெடுப்பு இலங்கை தொடர் தென்கொரியாவும் குறைந்தபட்சம் நடுநிலை வகிக்கும் என்றும் இலங்கை எதிர்பார்த்தது.

அதேவேளை, ஆர்ஜென்ரீனா, எஸ்தோனியா, ஜேர்மனி, அயர்லாந்து, மொன்ரெனிக்ரோ, ஸ்பெய்ன் என்பன தீர்மானத்தை ஆதிக்கும் என்று எதிர்பார்ப்பு நிலவியது. இந்தநிலையில் அமெரிக்கத் தீர்மானத்துக்கு 23 நாடுகள் ஆதரவே கிடைக்கும் நிலை உறுதியாக இருந்தது.

இதனால் புதுவரவான ஐவரி கோஸ்ட், எதியோப்பியா, சியராலியோன் என்பனவற்றை இலங்கைக்கு எதிராகத் திருப்ப வேண்டிய தேவை அமெரிக்க அணிக்கு ஏற்பட்டிருந்தது. ஏனென்றால் இம்முறை இந்தியாவை தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்க வைப்பது சிரமமானது என்றே அமெரிக்கா உணர்ந்திருந்தது. எனவே, கடந்த முறையை விட குறைந்தளவு ஆதரவு கிடைத்தால் தீர்மானம் தோல்வியில் முடிந்துபோகும்.

எனவே, எப்படியாவது தீர்மானத்தை கடந்த முறையை விடவும் அதிகமாக ஆதரவுடன் நிறைவேற்றுவதில் அமெரிக்கா உறுதியாக இருந்தது.

இதன்மூலம் தீர்மானத்துக்கு ஆதரவாக கடந்த முறையை விடவும் ஒரு வாக்கு அதிகமாகவே கிடைத்துள்ளது.

அதேவேளை, நடுநிலை வகித்த 3 நாடுகள் வெளியேறியபோதிலும் புதிதாக உள்ளே வந்த நாடுகளில் 4 நாடுகள் இம்முறை நடுநிலை வகித்துள்ளன.

தீர்மானத்துக்கு ஆதரவளித்த மற்றும் நடுநிலை நாடுகளின் அணியைச் சேர்த்தால் இலங்கைக்கு வலுவான ஆதரவைக்கொடுக்கும் புதிய உறுப்பு நாடுகள் எண்ணிக்கை வெறும் 4 மட்டும்தான்.

13 ஆபிரிக்க நாடுகளில் தீர்மானத்துக்கு ஆதரவாக 4 நாடுகளும் எதிராக 3 நாடுகளும் வாக்களித்த அதேவேளை, 6 நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்காமல் நடுநிலை வகித்தன.

8 இலத்தீன் அமெரிக்க நாடுகளில் தீர்மானத்திற்கு ஆதரவாக 6 நாடுகள் வாக்களிக்க 2 நாடுகள் மட்டும் எதிர்த்தன.

13 ஆசிய நாடுகளில் 2 நாடுகள் மட்டுமே தீர்மானத்தை ஆதரித்தன. 8 நாடுகள் எதிர்த்து வாக்களிக்க 3 நாடுகள் நடுநிலை வகித்திருந்தன. மேற்கு

வாக்களித்த நாடுகள் மற்றும் நடுநிலை வகித்த நாடுகள் என மொத்தம் 23 நாடுகள் தன்பக்கமே இருப்பதாக இலங்கை கருதிக்கொள்கிறது.

அதேவேளை, அமெரிக்காவே மறுபக்கம் சிந்திக்கிறது: தனது தீர்மானத்தை ஆதரித்த நாடுகளுடன் நடுநிலை வகித்த நாடுகளையும் சேர்த்து இலங்கைக்கு எதிராக 34 நாடுகள் இருப்பதா அமெரிக்கா சொல்கிறது. வாக்கெடுப்பில் நடுநிலை வகித்த 8 நாடுகள் மற்றும் வாக்கெடுப்பில் பங்கேற்காத காபோன் ஆகிய 9 நாடுகளும்- இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கவும் இல்லை- எதிர்க்கவும் இல்லை.

இலங்கை சொல்வதுபோன்று தீர்மானத்தை உறுதியாக ஆதரிப்பதானால், இந்த நாடுகள் ஆதரவாக வாக்களித்திருக்க வேண்டும். அதேவேளை தீர்மானத்தை எதிர்ப்பதாக இருந்தால் இந்த நாடுகள் எதிராக வாக்களித்திருக்கும். அப்படிச்செய்யாததால் அவை இலங்கையையிட்டு திருப்திகொள்ளவில்லை என்றே அர்த்தம் என்று வாதிடுகிறது அமெரிக்கா. ஒருவகையில் இலங்கையின் வாதம் சரியானால் இன்னொரு வகையில் அமெரிக்காவின் வாதமும் சரியானதாகவே தோன்றும். ஆனால், இந்த வாக்களிப்பில் பல விடயங்கள் செல்வாக்குச் செலுத்தியதை நினைவில்கொள்ள வேண்டும்.

இது தனியே இலங்கை சார்ந்த விடயமாக இலங்கையின் நிலைமைகள், அதன் முன்னேற்றம் சார்ந்த விடயமாக மட்டும் பார்க்கப்பட்டிருக்கவில்லை. அதற்கும் அப்பால் இந்த தீர்மானம் பல்வேறு விடயங்களில் செல்வாக்குச் செலுத்தும் ஒன்றாகவும் காணப்பட்டதை மறுக்க முடியாது. அதாவது, இலங்கையின் நிலைமையை அதன் முன்னேற்றத்தை மதிப்பிட்டு வாக்களித்த நாடுகள் சில. இலங்கையுடன் கொண்டுள்ள உறவுகளை மதித்து வாக்களித்த நாடுகள்சில.

இலங்கைக்கு ஆதரவளித்த சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் போன்றவற்றின் செல்வாக்கிற்கு அமைய வாக்களித்த நாடுகள் சில.

அதுமட்டுமன்றி அமெரிக்கா



பான சர்வதேசக் கணிப்பின் போக்குகளை ஓரளவுக்கு விளங்கிக்கொள்ள உதவும்.

அதைவி இது இலங்கை விவகாரம் என்பது சர்வதேச அரங்கில் எந்தத் தரப்பினால் கையில் எடுத்துக்கொள்ளப் படுகிறது என்பதன் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது என்ற உண்மையையும் விளங்கிக் கொள்ளலாம்.

கடந்த ஆண்டு இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவளித்த நாடுகள் இம்முறை இல்லை. கடந்த ஆண்டு இறுதியில் நடந்த உறுப்புரிமை மாற்றம் காரணமாக காய்கள் குழப்பி விடப்பட்டு புதிய ஆட்டமே தொடங்கியது.

கடந்த ஆண்டு இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்த 24 நாடுகளில் கமரூன், பெல்ஜியம், ஹங்கேரி, மொரிசியஸ், மெக்சிக்கோ, நைஜீரியா, நோர்வே, உருகுவே ஆகிய 8 நாடுகள் இம்முறை வாக்களிக்கும் தகைமையைக்கொண்டிருக்கவில்லை.

அதேவேளை கடந்த ஆண்டு இலங்கைக்கு ஆதரவாக- அமெரிக்காவின் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்த பங்களதேஷ், சீனா, ரஷ்யா, கியூபா, சவுதி அரேபியா ஆகிய நாடுகள் இம்முறை வாக்களிக்க முடியாத நிலையில் இருந்தன.

அத்துடன் வாக்கெடுப்பில் பங்கேற்காத டிஜிபோற்றி, ஜோர்தான், செனகல் ஆகிய நாடுகளும் இம்முறை பேரவையில் இல்லை.

இம்முறை பிறேசில், ஐவரிகோஸ்ட், அர்ஜென்ரீனா, எஸ்தோனியா, எதியோப்பியா, காபோன், ஜேர்மனி, அயர்லாந்து, ஜப்பான், கசகஸ்தான், கென்யா, மொன்ரெனிக்ரோ, தென்கொரியா, சியராலியோன், ஸ்பெய்ன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், வெனிசுலா என 17 நாடுகள் புதிதாக உள்ளே வந்தன.

கடந்தமுறை இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகள் அதிகளவில் பேரவையில் இருந்து வெளியேறியிருந்தன. இது அமெரிக்கத் தரப்புக்கு சவலானதொன்றாகவே இருந்தது.

இம்முறை உள்ளே வந்த 17 நாடுகளில் பிறேசில், ஐக்கிய அரவு எமிரேட்ஸ், கசகஸ்தான், கென்யா, வெனிசுலா என்பன தனக்கு ஆதரவளிக்கும் என்று இலங்கையால் எதிர்பார்க்கப்பட்டது. அதேவேளை ஜப்பானும்

இறுதியில் ஒஸ்ரியா, ஜேர்மனி, இத்தாலி, அயர்லாந்து, ஸபெயன், மொன்ரெனிக்ரோ, சுவிஸ்சர்லாந்து, அமெரிக்கா, பிறேசில், தென்கொரியா, சியராலியோன், இந்தியா, பெனின், கோஸ்டாரிக்கா, லிபியா, ஆர்ஜென்ரீனா, சிலி, ஐவரிகோஸ்ட், கௌதமாலா, பெரு, செக்குடியரசு, எஸ்தோனியா, போலந்து, மோல்டோவா, ருமேனியா ஆகிய நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன.

வெனிசுலா, தாய்லாந்து, பாகிஸ்தான், இந்தோனேசியா, ஈக்வடோர், ஐக்கிய அரபு எமிரேட்ஸ்,, கட்டார், மாலைதீவு, குவைத், உகண்டா, மொரிட்டானியா, கொங்கோ, பிலிப்பைன்ஸ் ஆகிய 13 நாடுகள் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன.

அங்கோலா, பொட்ஸ்வானா, புர்கினா பாசோ, கென்யா, எதியோப்பியா, மலேசியா, கசாக்ஸ்தான், ஜப்பான் ஆகிய நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்காமல் நடுநிலை வகித்தன.

குறைந்த பட்சம் நடுநிலை வகிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட தென்கொரியாவும் இம்முறையாவது எதிர்த்து வாக்களிக்கும் என்று நம்பிய இந்தியாவும் தீர்மானத்தை ஆதரித்தது இலங்கைக்குப்பெரும் ஏமாற்றம்.

அதுபோலவே, புதிதாகஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்குள் வந்த பிறேசில் தீர்மானத்தை எதிர்க்கும் என்ற இலங்கையின் நம்பிக்கையும் வீண்போனது. புதிதாக உள்ளே வந்த 17 நாடுகளில் 9 நாடுகள் இலங்கைக்கு எதிராகவே- தீர்மானத்துக்கு ஆதரவாகவாக் களித்தன.

ஐரோப்பிய நாடுகள் அணியில் இருந்த 7 நாடுகளும் தீர்மானத்தை ஆதரித்தன.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அணியில் உள்ள 6 நாடுகளும் கூட முழுமையாகத் தீர்மானத்தை ஆதரித்தன.

வலயரீதியாகப் பார்த்தால், ஆசியா தவிர இலங்கைக்கு வெளியே செல்வாக்கு மிகவும் குறைவேயென்பது புலனாகும்.

இந்த வாக்கெடுப்பில் ஆசிய நாடுகள் கைகொடுத்ததால்தான் ஓரளவுக்கு இலங்கை காப்பாற்றப்பட்டது.

ஒரு கட்டத்தில் இறுக்கமாக இருந்த இந்தச் சதுரங்க விளையாட்டில் அமெரிக்கா எப்படியோ தனது செல்வாக்கை வைத்து வெற்றி கொண்டுள்ளது.

இலங்கையும் தன் பங்கிற்கு தனது கூட்டாளி நாடுகளுடன் இணைந்து போராடிப்பார்த்தது. ஆனால், அமெரிக்காவின் வியூகத்தை அதனால் உடைக்க முடியாதுபோய்விட்டது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டுவந்துள்ள 2 ஆவது தீர்மானம் இலங்கையை அடுத்தடுத்த கூட்டத்தொடரிலும் கேள்விகேட்கும் நிலைக்குக்கொண்டு வந்துள்ளது. அதாவது, செப்ரம்பரில் நடக்கவுள்ள 24 ஆவது கூட்டத்தொடர் அடுத்த ஆண்டு மார்ச்மாதம் நடக்கவுள்ள 25 ஆவது கூட்டத்தொடர் என்பவற்றிலும் இலங்கை விவகாரம் சூடுபறக்கவுள்ள அடுத்தடுத்த கட்டங்களில் இந்தச் சவால்களைச் சமாளிப்பது இலங்கைக்கு மிகவும் கடினமாகவே இருக்கப்போகிறது.

கே. சஞ்சயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிந்துரைகளை நிறைவேற்றவேண்டியது அரசாங்கத்தின் கட்டாய கடமை

## ஜெனீவா தீர்மானம் அதுவே என்கிறார் செல்வராசா எம்.பி.

(மட்டக்களப்பு)

ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டு வரும் கருத்துக்கள் அடிப்படையில் தமிழ் சமூகம் குழம்பிய குட்டையாக இருக்கின்றது. எனினும் தமிழ் மக்கள் சென்ற முறையை விட இம்முறை வெற்றிவாய்ப்பிற்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்க இராஜாங்க அமைச்சின் உதவிச் செயலாளர் இலங்கை அரசுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை தமிழ் மக்களுக்கு புத்துணர்வை அளிக்கக் கூடியதாகவுள்ளது.

இன்று சமகாலத்தில் பேசப்படுகின்ற ஒரு விடயம் ஜெனீவாத் தீர்மானம் என்று சொல்லலாம். இதையிட்டு பல சர்ச்சைகள் எழுந்துள்ளன. பலரும் பலவிதமாக பேசுகின்றார்கள். குழம்பிய குட்டையாக எமது சமூகம் இருக்கின்றது.

அமெரிக்கா சென்றமுறை கொண்டு வந்த தீர்மானத்திற்கும் இந்தத் தடவை கொண்டு வந்த தீர்மானத்திற்கும் இடையில் எந்த வேறுபாடுகளுமில்லை என்பது ஒரு சாராரின் கருத்தாகும்.

ஆனால் இன்னொரு சாரார் சென்ற முறை கொண்டு வந்த பிரேரணையை விட இது கடுமையானதெனவும் இதை எமது சமூகம் விளங்கிக் கொள்ள்வில்லை எனவும் இதில் நல்ல விடயங்கள் இருக்கின்றன என்றும் கூறுகின்றார்கள்.

சென்ற முறையை விட இரண்டு நாடுகள் கூடுதலாக ஆதரித்தும் இரண்டு நாடுகள் குறைவாக எதிர்த்தும் இருக்கின்றன. ஆகவே நாங்கள் நான்கு நாடுகளால் வெற்றி பெற்றிருக்கின்றோம் என்பதே உண்மையாகும்.

2012 ஆம் ஆண்டிற்கும் 2013 ஆம் ஆண்டிற்குமிடையில் சர்வதேச நாடுகளின் பார்வை எங்கள் மேல் இருக்கின்றது என்பதை நாங்கள் மட்டுமல்ல அரசாங்கமும் ஒத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

கடந்த 2012 ஆம் ஆண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது அவர்கள் அந்தப் பிரேரணையில் முக்கியமாக ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கைகளையும் சிபாரிசுகளையும் அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப் பட்டிருந்தது.

ஆனால் அதை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றத் தவறிவிட்டது. இம்முறையும் அதை த்தான் சொல்கின்றார்கள். சர்வதேசத்தால் எம்மை அசைக்க முடியாது என்று இலங்கை அரசு சொல்லியிருக்கின்றது.

ஆனால் இம்முறையும் அந்தக் கட்டளை நிறைவேற்றப்படாவிட்டால் சர்வதேசம் என்ன நடவடிக்கை எடுக்குமென்று இப்போதைக்கு சொல்ல முடியாது என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சின் உதவிச் செயலாளர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

இந்தியாவின் அனுமதியில்லாமல் எந்த ஒரு நாடும் இலங்கைப் பிரச்சினையில் தலையிடமாட்டாது என்பது எல்லோரும் அறிந்த விடயமாகும்.

நீதிமன்றுக்கு சென்று நீதிமன்ற தீர்ப்பு வழங்கிய ஒன்றை மாற்றியமைக்கும் அளவுக்கு அரசாங்கம் பலம்பெற்றுள்ள நிலையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த சட்டங்களை மாற்ற வேண்டும் என்று கூறிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளும் முற்று முழுதாக தமிழ் மக்களுக்கு தீர்வைத் தரும் என்று சொல்ல முடியாது. அதற்கு வேறு வழிகளில் தான் தீர்வுத் திட்டம் வடிவமைக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# சவுதிக்கான புதிய தூதுவர் ஏப்ரலில் பதவியேற்பார்

சவுதி அரேபியாவிற்கான புதிய தூதுவராக வீ. கிருஷ்ணமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த மாத நடுப்பகுதியில் இவர் தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.

அத்துடன் இது தொடர்பிலான நியமனக்கடிதமும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடமைகளை பொறுப்பேற்பதற்காக அடுத்த மாத நடுப்பகுதியில் கிருஷ்ணமூர்த்தி சவுதி அரேபியா செல்லவுள்ளார். சிரேஷ்ட இராஜதந்திரி வீ.கிருஷ்ணமூர்த்தி தற்போது வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய நாடுகளுக்கான பிரிவின் பணிப்பாளர் நாயகமாக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பணிப்பெண் ரிஸானா நபீக்கிற்கு நிறைவேற்றப்பட்ட மரண தண்டனையை அடுத்து சவுதி அரேபியாவிற்கான தூதுவராக கடமையாற்றிய அஹமட் ஜவாத்தின் கடந்த ஜனவரி மாதம் மீள அழைக்கப்பட்டார். இதனால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே கிருஷ்ணமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மலேசியாவிற்கான புதிய உயர்ஸ்தானிகராக ஐ.அன்சார் பெயர் சிபாரிசு செய்யப்பட்டுள்ளார். மலேசியாவிற்கான உயர்ஸ்தானிகராக கடமையாற்றிய மூத்த இராஜதந்திரியான கல்யாணந்த கொடகோ அண்மையில் திருப்பி அழைக்கப்பட்டார். இதனால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இவர் சிபார்சு செய்யப்பெற்றார். (அ-2)

# கலந்துரையாடலும் செயலமர்வும்

(யாழ்ப்பாணம்)

சங்கானையில் இயங்கும் Butterfly International பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோருக்கான கலந்துரையாடலும் செயலமர்வும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளதாக பாடசாலையின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ)




- ★ கி.மு.240- ஹேலியின் வால்வெள்ளி பற்றிய முதலாவது பதிவு.
- ★ 1492- ஸ்பெயினில் இருந்து அனைத்து யூதர்களும் ரோமன் கத்தோலிக்கராக மாற வேண்டும் அல்லது அனைவரும் வெளியேற்றப்படுவார்கள் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
- ★ 1814- நெப்போலியனுக்கு எதிரான போரில் கூட்டுப்படைகள் பாரிஸ் நகரை அடைந்தனர்.
- ★ 1822- ஐக்கிய அமெரிக்காவில் புளோரிடா உருவாக்கப்பட்டது.
- ★ 1931- யாழ்ப்பாணம், மானிப்பாயில் அமெரிக்க மிஷன் கட்டடங்கள் தீப்பிடித்து அழிந்தன.
- ★ 1842- அறுவைச் சிகிச்சைகளில் முதன்முதலாக மயக்க மருந்து குரோஃபோர்ட் லோங் என்பவரினால் பயன்படுத்தப்பட்டது.
- ★ 1851- ஐக்கிய இராச்சியத்தில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- ★ 1858- அழிப்பானுடன் கூடிய எழுதுகோலுக்கான காப்புரிமம் ஹைமன் லிப்மன் என்பவரினால் பெறப்பட்டது.
- ★ 1867- அலாஸ்கா 7.2 மில்லியன் அமெரிக்க டொலருக்கு 2 சதம்/ ஏக்கர் ($4.19/Km²) ரஷ்யாவின் மன்னன் இரண்டாம் அலெக்சாண்டர் II இடமிருந்து ஐக்கிய அமெரிக்காவின் அரசுச் செயலாளர் வில்லியம் செவார்ட் கொள்வனவு செய்தார்.
- ★ 1945- இரண்டாம் உலகப் போர்: சோவியத் படைகள் ஆஸ்திரியாவினுள் நுழைந்து வியன்னா நகரை கைப்பற்றினர்.
- ★ 1949- ஐஸ்லாந்து நெட்டோ அமைப்பில் இணைந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து ரெய்க்ஜாவிக் நகரில் கலவரம் இடம்பெற்றது.
- ★ 1981- ஜனாதிபதி றொனால்ட் றேகன் வோஷிங்டனில் வைத்து ஜோன் ஹிங்கிளி என்பவனால் மார்பில் சுடப்பட்டார்.

**பிறப்பு**

- ★ 1709- ஆனந்த ரங்கம்பிள்ளை, தமிழில் நாட்குறிப்பு எழுதியவர் (இ.1761)

**இறப்புக்கள்**

- ★ 1949- பிரீட்ரிக் பேர்ஜியஸ், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (பி.1884)
- ★ 1965- பிலிப் ஹென்ச், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1896)
- ★ 2005- ஓ.வி.விஜயன், இந்திய, மலையாள எழுத்தாளர், ஓவியர் (பி.1930)

# மகாராணியின் பங்கேற்பை உறுதியாக கூறமுடியாது

## பக்கிங்ஹாம் மாளிகை

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகள் தலைவர்கள் மாநா ட்டில் பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத் பங்கேற்பாரா இல்லையா என்பதனை உறுதிப் படக்கூற முடியாது என பக்கிங்ஹாம் மாளிகை தெரிவித்துள்ளது.

அரச குடும்பத்தின் மிக முக்கியமான தீர்மானங்கள் குறித்து முன் கூட்டியே கருத்துக்கள் வெளியிடுவதில்லை என மாளிகை குறிப்பிட்டுள்ளது.

அமர்வுகள் நடைபெற இன்னும் சில காலம் இருப்பதனால் இப் போதைக்கு இது குறித்து வெளியிடப் படமாட்டாது என சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலகமே இந்தக் கேள்விக்கு பதிலளிக்கக் கூடிய சிறந்த இடம் எனத் தெரிவித்துள்ளது.

பிரித்தானிய மகாராணி பொது நலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டில் பற்கேற்கமாட்டார் என முன்னதாக பிரித்தானிய ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# காரியவசத்தின் கூற்றுக்கு ராமதாஸ் கண்டனம்

(சென்னை)

இந்தியர்களுக்கு இடையே இன வெறியை தூண்டும் வகையில் பொய் பிரசாரம் செய்து வரும் இலங்கைத் தூதர் பிரசாத் காரியவசத்தை நாடு கடத்த வேண்டும் என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கேட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள சிங்களவர்கள் வட இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டவர்கள் என்று மின்னஞ்சல் அனுப்பிய இலங்கை தூதர் காரியவசத்தை நாடு கடத்த வேண்டுமென்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் உள்ள 75 சதவீத சிங்களர்வர்கள் வட இந்திய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். வெறும் 12 வீத தமிழர்களுக்காக மட்டும் இந்தியா கரிசனை கொள்வது சாத்தியமற்றது என்று இலங்கைத் தூதர் பிரசாத் காரியவசம் இரகசிய பிரசாரம் செய்து வருவதாக குற்றம் சாட்டப்பட்ட நிலையில் இதற்கு ராமதாஸ் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இந்தியாவிலுள்ள மாநிலங்களுக்குள் பிரிவினையை ஏற்படுத்த இலங்கை தூதர் முயலுவதாகவும் ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட சபை தீர்மானத்தை இந்திய அரசை ஏற்றுக்கொள்ள செய்யுங்கள்

## தமிழக மாணவர்களை கோருகிறார் உருத்திரகுமாரன்

(சென்னை)

**தமிழக முதல்வரால் முன்மொழியப்பட்ட தீர்மான வாக்கியங்கள் ஈழத்தமிழர் தேசத்தின் அரசியல் நிலைப்பாட்டையும் இலங்கை அரசின் தமிழின விரோதப் போக்கையும் அனைத்துலகப் பொறிமுறை குறித்த புரிதலையும் நன்கு உள்வாங்கி தயாரிக்கப்பட்ட ஒரு சிறந்த அரசியல் ஆவணமாக அமைந்துள்ளது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.**

அத்துடன் இது முதல்வரின் அரசியல் முதிர்ச்சியினையும் ஆளுமையினையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.

தமிழக சட்டசபையில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தை இந்திய மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் மட்டுமே அத்தீர்மானம் செயல் வடிவம்பெறும். இத்தீர்மானத்தை இந்திய மத்திய அரசை ஏற்றுக்கொள்ளச் செய்யும் ஆற்றல் தமிழக மாணவர்களிடம் உள்ளது என்று நாம் கருதுகின்றோம். இதற்கான செயற்பாடுகளை ஒரு திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் ஊடாகத் தமிழக மாணவர்கள் தொடர்ச்சியாக முன்னெடுப்பார்கள் என நாம் உறுதியாக நம்புகின்றோம் எனவும் உருத்திரகுமாரன் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத் தமிழர் விவகாரத்தினை மையப்படுத்தி தமிழக சட்டசபையில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் உருத்திரகுமாரன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் முன்னெடுப்பில் கடந்த 27 ஆம் திகதி அன்று வரலாற்றுச் சிறப்பு மிகு தீர்மானமொன்றை தமிழக சட்டமன்றப் பேரவை ஏகமனதாக நிறைவேற்றியிருக்கிறது. இத்தீர்மான வாக்கியங்கள் பின்வருமாறு,

இலங்கை நாட்டை நட்பு நாடு என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும். இலங்கை இனப் போரின்போது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து சுதந்திரமான, நியாயமான சர்வதேச புலன்விசாரணை நடத்திடவும் இந்த சர்வதேச விசாரணையின் அடிப்படையில் போர்க்குற்றம் நிகழ்த்தியவர்கள் சர்வதேச நீதிமன்றம் முன்பு நிறுத்தப்பட்டு அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத் தந்திடவும் தமிழர்கள் மீதான அடக்குமுறையை இலங்கை அரசு நிறுத்தும் வரை இலங்கை நாட்டின் மீது பொருளாதாரத் தடையை விதித்திடவும் ஈழத் தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு தனி ஈழம் குறித்து இலங்கை வாழ் தமிழர்களிடமும் இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்திடவும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தினை கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்றுள்ளது.

தமிழக சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இந்திய மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் மட்டுமே இத்தீர்மானம் செயல் வடிவம் பெறும்.

இத்தீர்மானத்தை இந்திய மத்திய அரசை ஏற்றுக் கொள்ளச் செய்யும் ஆற்றல் தமிழக மாணவர்களிடம் உள்ளது என்று நாம் கருதுகின்றோம். இதற்கான செயற்பாடுகளை ஒரு திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் ஊடாகத் தமிழக மாணவர்கள் தொடர்ச்சியாக முன்னெடுப்பார்கள் என நாம் உறுதியாக நம்புகிறோம் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## எதிர்க்கட்சி தலைவர் மட்டு.விஜயம்

(மட்டக்களப்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்பிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். மட்டக்களப்பு மாவட்ட உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் மாதாந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவே அவர் இன்றைய தினம் அங்கு செல்லவுள்ளார்.

மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ கட்டடத்தில் குறித்த கூட்டம் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தின் போது இணையம் அமைப்பின் எதிர்கால திட்டங்கள், நிதி நடவடிக்கைகள் என்பன பற்றியும் ஆராயப்படவுள்ளதாக அவர் கூறினார். அத்துடன் அங்கத்துவ கட்டணம் செலுத்தும் அங்கத்தவர்கள் மாத்திரம் இக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## மஹா கும்பாபிஷேகம்

பெருமை மிக்க ஓமந்தை வண்ணான் குளம் அரசர்பத்தி ஸ்ரீ கண்ணகை அம்பாளுக்கும் விநாயகர், முருகன், நாகதம்பிரான், வைரவர், காத்தவராயன் முதலான பரிவார தெய்வங்களுக்கும் அமைக்கப்பட்டுள்ள இராஜ கோபுரத்திற்கான மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.

இம்மகா கும்பாபிஷேக பெரு விழாவினை கனடா வரசித்தி விநாயகர் டாக்டர் சிவ ஸ்ரீ நா. சோமஸ்கந்த குருக்கள், சுன்னாகம் கதிரமலை சிவன் கோவில் பிரதம குரு கலாநிதி நா. சர்வேஸ்வர குருக்கள் நடத்தவுள்ளனர். அன்றைய தினம் மாபெரும் இன்னிசை நிகழ்வு நடைபெறவுள்ளது. (அ-2-250)

## எனது கட்சியின் கொள்கைகள் வித்தியாசமானவை-பொன்சேகா

எனது கட்சியின் கதவுகள் அனைவருக்காகவும் திறந்து இருக்கும். ஆனால் அது ஏனைய கட்சிகளை போன்று சிகை அலங்கார நிலையத்தின் கதவுகளாக இருக்காது என முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எங்களது கட்சியின் கதவுகள் அனைவருக்காகவும் திறந்து இருக்கும். எமது கட்சிக்கான கொள்கைகளின் முக்கியத்துவம் தெரிந்த அனைவரினாலும் அதில் இணைந்து கொள்ள முடியும்.

ஆனால் எனது கட்சியின் கதவானது சிகை அலங்கார நிலையத்தின் கதவை.போன்றது அல்ல. சிகை அலங்கார நிலையத்தில் விரும்பிய நேரத்தில் தொழிலை பெற்றுக் கொள்வதும் பின்பு வேறு தொழிலை தேடிச் செல்லும் நிலையும் காணப்படுகின்றது. எமது கட்சி இத்தகைய கொள்கைகளை கொண்டதல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## பாலம் அமைக்க கோரிக்கை

(சிவநகர்)

உருத்திரபுரம் மகாவித்தியாலயத்திற்கும் கூழாவடி பிரதானசந்திக்கும்இடைப்பட்டதான பாலம் அமைக்கப்படாது உள்ளதால் இப்பகுதி மக்கள் இவ்வீதியால் பயணிக்கமுடியாது மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இப்பாலம் இல்லாத காரணத்தால் உருத்திரபுரம் மகாவித்தியாலய பாலம் அமைந்துள்ள பகுதி அல்லது கூழாவடி பகுதிக்கு சென்றே பயணத்தை மேற்கொள்ள வேண்டி உள்ளதகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது உருத்திரபுரம் பகுதிக்கான சிறுபோக பயிர்ச்செய்கை நிறுத்தப்பட்டு பிரதான வாய்க்கால் வேலை நடைபெறவுள்ளதால் இப்பாலத்தினையும் கவனத்தில் எடுத்து அமைத்து தருவதன் மூலம் கஷ்டப்படும் இம்மக்கள் பயனடைய முடியும் என சுட்டிக்காட்டப்படுகிறது. (அ-3-254)

## தேசிய நூதனசாலை மூடப்பட்டுள்ளது

(கொழும்பு)

கொழும்பு தேசிய நூதனசாலை காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது. நூதனசாலை திறக்கப்படும் தினம் பின்னர் அறிவிப்பதாகவும் இது குறித்து தேசிய மரபுகள் அமைச்சர் ஜகத் பாலசூரிய மற்றும் அமைச்சின் அதிகாரிகளுக்கு இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நூதனசாலையை கடந்த 28 ஆம் திகதி பார்வையிடச் சென்ற 30 மாணவர்கள் சென்ற படி இடிந்து வீழ்ந்து காயமடைந்துள்ளனர். சம்பவம் தொடர்பில் விசாரணை இடம்பெற்று வருவதாக தேசிய மரபுகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

படி மீள் நிர்மாணம் செய்யப்படும் வரை நூதனசாலை மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## வடக்கில் மாகாணசபை அமைத்தால் ஈழம் உருவாகும்

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை

வடக்கில் மாகாணசபை அமைத்தால் அதன் ஊடாக ஈழம் உருவாவதனை தடுக்க முடியாது என தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.


கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

அதிகாரப் பகிர்வின் ஊடாக நாட்டை பிளவுபடுத்த சில சர்வதேச சக்திகள் முயற்சிக்கின்றன. இந்த சதி முயற்சிக்கு இடமளிக்கப்படக் கூடாது. வடக்கில் மாகாணசபை அமைப்பதானது ஈழ இராச்சியத்தை உருவாக்குவதற்கான பாதையாக கருதப்பட வேண்டும். அதிகாரப் பகிர்வினை நோக்கி நாட்டைத் தள்ளுவதே அமெரிக்கா மற்றும் இந்தியாவின் நோக்கமாக அமைந்துள்ளது.

நாட்டின் உள்விவகாரங்களில் வேறும் நாடுகள் தலையீடு செய்வதனை அனுமதிக்க முடியாது. 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி அதன் மூலம் வடக்கில் ஈழ இராச்சியமொன்றை உருவாக்க முயற்சிக்கப்படுகின்றது.

வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டும். அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அமுல்படுத்துமாறு கூட்டமைப்பு கோரிக்கை விடுக்கும்.

இதனால் நாடு பிளவடையக் கூடிய அபாயம் காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)



யாழ். வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த புதன்கிழமை ஆடியபாதம் வீதி திருநெல்வேலியில் இடம்பெற்ற போது... (படங்கள் :-உ.சாளீன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களின் நலனுக்காக நாம் இனி என்ன செய்யவேண்டும்?

இலங்கையைப் பாதுகாக்கும் அமெரிக்கத் தீர்மானத்தை ஒரு சடங்காக நிறைவேற்றிவிட்டது ஐ.நா. ஆனாலும், உலகத் தமிழர்களுக்கு இப்போது உற்சாகம் அளிக்கும் ஒரே விடயம்... தமிழகம்.

இப்போது ஈழ மக்களும் நம்பியிருப்பது தமிழர்களின் அழுத்தங்களைத்தான். உலகத்தின் மனசாட்சியை உலுக்கியெடுக்க, வீதி வீதியாக களம் இறங்கி இருக்கிறார்கள் தமிழக மாணவர்கள்.

இந்நிலையில் தமிழ்ச் சமூகத்தின் முக்கியமான ஆளுமைகள் சிலரிடம் ஈழத் தமிழர்களின் நலனுக்காக இனி என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வியை முன்வைத்தோம்.



**புனிதப்பாண்டியன், தலித் முரசு,** இனப் படுகொலைக்கு ஆளான போஸ்னிய மக்களுக்கு நியாயம் கிடைக்கப் பெரும் பங்காற்றிய பேராசிரியர் பிரான்சிஸ் பாய்ல் மிக முக்கியமான கருத்து ஒன்றைச் சொன்னார். உலக அளவில் இனப் படுகொலை ஒப்பந்தம் ஒன்று உள்ளது. உலகெங்கிலும் சுமார் 140 அரசுகள் அந்தச் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு கையெழுத்திட்டிருக்கின்றன.

அதில் கையெழுத்திட்டுள்ள நாடுகள் இனப் படுகொலை எங்காவது நடந்தால், ஹேக் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியும். அந்த வகையில் ஹேக் நீதிமன்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நாடு ஒன்று, இலங்கைக்கு எதிராக வழக்கு தொடர்ந்தால், அது ஈழப் பிரச்சினையில் முக்கியமானதொரு நகர்வாக இருக்கும். இந்த வழக்கின் அடிப்படையில், ஈழ மக்களுக்கான சில உரிமைகளை நாம் கோர முடியும். இனப் படுகொலைக் குற்றவாளிகளைத் தண்டிக்கும் வகையில் சட்ட விசாரணை நடத்தி தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும் என கோரலாம்.

காணாமல்போதல், கொலைகள் என்று இனப் பாகுபாடு தொடர்ந்து நீடிக்கும் நிலையில், தற்காலிக தடுப்பு ஆணையம் ஒன்றை உருவாக்கும் அதிகாரம் இந்தச் சட்டத்திற்கு உண்டு. கம்போடியா, ருவாண்டா, கொசாவா ஆசிய நாடுகளின் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தச் சட்டத்தின் அடிப்படையில் நீதி வழங்கப் பட்டிருக்கிறது!

**சுப. உதயகுமாரன் - ஒருங்கிணைப்பாளர். அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கம்.**

ஈழப் படுகொலைகள் நடைபெற்று நான்கு ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், இப்போதுதான் அது முழுமையான மக்கள் போராட்டமாக மாறிக்கொண்டிருக்கிறது.

ஐ.நா-வில் மனித உரிமை அமர்வுகள் முடிந்துவிட்ட நிலையில், போராட்டங்களும் முடிந்துபோனால் அது பின்னடைவாகிவிடும் என்னும் நிலையில், மாணவர்கள் ஈழ மக்களுக்காகக் கிராமங்களுக்குச் செல்ல வேண்டும்.

ஈழ மக்களின் விடிவுக்காகச் சர்வதேசச் சமூகத்தை நம்பியிருக்கும் நிலையில், தமிழக த்தில் இருந்து உருவாகும் அழுத்தங்களே இந்திய அரசுக்கு நெருக்கடியை உருவாக்கும். இது ஒரு தொடக்கம் தான்.

இன்னும் எட்ட வேண்டிய இலக்கை மனதில் வைத்துக் கொண்டு. சாத்வீகமான போராட்ட ங்களை மாணவர்கள் தொடர வேண்டும்.

**திருமுருகன் ஒருங்கிணைப்பாளர், மே-17 இயக்கம்.**

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சர்வதேசச் சமாதான ஒப்பந்தம் கையெழுத்தாகி, அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடந்தபோது, புலிகளின் ஆளுகைக்குள் இருந்த பிரதேசங்களைத் தமிழர்களின் நிர்வாக சபையாக இலங்கை அரசும் சர்வதேசச் சமூகங்களும் ஏற்றுக் கொண்டு தான் பேச்சுவார்த்தைக்கு வந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தமிழீழக் குடிமக்கள் இல்லாத பிறர் அனுமதி இன்றி நுழைய முடியாது என்பதைச் சர்வதேசச் சமூகம் ஏற்றுக் கொண்டு இருந்தது.

இன்னமும் அந்த அங்கீகாரம் அப்படியேதான் இருக்கிறது. மூன்று தரப்பினர் ஈடுபட்ட இந்தப் பேச்சுவார்த்தையிலிருந்து இலங்கை விலகி, போர் தொடுத்து இனப் படுகொலையை நடத்தி முடித்து விட்டது. போருக்குப் பின்னர், டப்ளின் தீர்ப்பாயம் 2010 ஜனவரி 15 இல் சொன்னது மிக முக்கியமான விடயம்.

பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்திருக்கும் ஒரு குழுவை எப்படிப் பயங்கரவாத இயக்கம் என்று தடை செய்யலாம் என அமெரிக்காவை நோக்கியும், ஐரோப்பிய ஒன்றியத்தை நோக்கியும் கேள்வி எழுப்பியது டப்ளின் தீர்ப்பாயம். ஆக, பயங்கரவாதம் என்ற பொருந்தாத ஒன்றைச் சொல்லி புலிகள் அமைப்பினரை அழித்திருக்கும் நிலையில்...

நோர்வே, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வடக்குப் பகுதி நிர்வாக சபைக்கான உரிமையைச் சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் தற்காலிகத் தீர்வாகவும், தமிழீழத்துக்கான பொது வாக்கெடுப்பு என்னும் நிரந்தரத் தீர்வை நோக்கிய தொடக்கமாகவும் நமது போராட்டப் பாதையை அமைத்துக் கொள்ளலாம்!

**சரஸ்வதி- அமைப்பாளர், நாடு கடந்த தமிழீழ அரசுக்கான தோழமை மையம்.**

குறிப்பிட்ட ஓர் இனத்தைச் சார்ந்த மக்களை ஓர் அரசு கூட்டுக் கொலை செய்யும்போது, அந்த மக்கள் தங்களுக்கான ஓர் அரசை அமைத்துக்கொள்வதற்கான சுதந்திரத்தை, உரிமையைச் சர்வதேசச் சட்டங்கள் வழங்கிஉள்ளன. இந்தச் சட்டத்தின் உதவியோடு இதற்கு முன் பல நாடுகளும் பொது வாக்கெடுப்பு உரிமையின் கீழ் சுதந்திரமான நாடுகளாகவும் ஆகியுள்ளன.

ஆனால்., தொடர்ச்சியான போராட்டங்களும் அழுத்தங்களும் மட்டுமே இதைச் சாதிக்கும். ஐ.நா-வில் பொது வாக்கெடுப்பு, இனப் படுகொலை உள்ளிட்ட கோரிக்கைகளை முன்னெடுப்பது உலகின் வேறந்த நாடுகளைவிடவும் இந்தியாவுக்கே அதிக உரிமயுள்ளது. ஆக இந்திய அரசாங்கத்தை இந்தத் திருப்பத்தை நோக்கி நகர்த்துவதே நமது போராட்டங்களின் நோக்கமாக இருக்க வேண்டும்!

**சுரேஷ் - பொதுச் செயலாளர், மக்கள் சிவில் உரிமைக் கழகம்**

தமிழகத்தில் இருந்து இலங்கைக்குச் சென்றவாக்ள் அங்கு சென்று தனி நாடு கேட்கிறார்கள் என்று தான் தமிழகத்துக்கு வெளியில் உள்ளவர்கள் நினைக்கிறார்கள். தமிழகத்துக்கு என்று சில பிரச்சினைகள் இருக்கின்றன என்று ஆங்கில ஊடகங்களோ, வட இந்திய அரசியல்வாதிகளோ நினைப்பதில்லை.

அவர்களுக்கு நமது நியாயங்கள் புரியும்; வகையில் தமிழகம் தொடங்கி டில்லி வரை அனைத்து மாநிலங்களுக்கும் சென்று ஈழத் தமிழர்களின் நியாயங்களைப் பேச வேண்டும். இன்று தமிழகத்தில் உருவான அழுத்தம் வட இந்தியாவிலும் உருவானால் மட்டுமே, இந்திய அரசு இந்தப் பிரச்சினையைக் காது கொடுத்துக் கேட்கும். இப்போது நமது போராட்டம் இந்திய அரசோடு இல்லை, இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையோடு என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்!

**புகழேந்தி - செயலாளர், தமிழக மக்கள் உரிமைக் கழகம்.**

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைத் தண்டிக்க வேண்டும் என்பது ஒரு கோரிக்கைதான். ஆனால், இனி மேல் இலங்கையில் தமிழ் மக்கள் சுதந்திரம் பெற்ற குடிமக்களாக இருக்க வேண்டும் என்ற முடிவுதான் அரசியல்ரீதியாக அந்த மக்களைப் பாதுகாக்கும்.

இனப்படுகொலை முடிந்து இந்த நான்கு ஆண்டுகளில் இப்போதுதான் முதன்முதலாக தமிழக மக்களிடம் ஈழப்பிரச்சினை அதன் வீரியத்துடன் கொண்டு சேர்க்கப் பட்டு இருக்கிறது. இதுதான் இந்தத் தருணத்தில் மிகவும் சாதகமான அம்சம்.

தேர்தல் அரசியல் கட்சிகளைப் புறந்தள்ளிவிட்டு, மாணவர்கள் தலைமையில் திட்டமிட்டு இந்திய அளவிலான அழுத்தம் ஏற்படுத்த வேண்டும். அதே நேரத்தில், புகலிடத் தமிழர்கள் உலகளாவிய அளவில் இதற்கான அழுத்தங்களை ஏற்படுத்தினால், நிச்சயம் அரசியல்ரீதியாக ஈழத் தமிழ் மக்களுக்கு விடிவு கிடைக்கும். ஆனால், அது தொடர்ச்சியான போராட்டங்களாலும் அழுத்தங்களாலும் மட்டுமே கிடைக்கும்!

**மனுஷ்யபுத்திரன் - எழுத்தாளர்**

இனப் படுகொலை என்பது ஒரு கூட்டுத் கொலை என்கிற நிலையில், இந்த நினைவுகளில் இருந்தும் பாதிப்புகளில் இருந்தும் ஒரு சமூகம் மீண்டு வரப் பல ஆண்டுகள் ஆகும். சில தலைமுறைகள் கடந்தும்கூட அந்த நினைவுகள் பாதிப்பை ஏற்படுத்தும்.

அந்த வகையில், நேரடியாக ஈழ மக்களும் அதன் பண்பாட்டுத் தொடர்புகளால் தமிழக மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். இவற்றைக் கணக்கில்கொண்டு ஈழத்தமிழர் குழந்தைகள் மற்றும் இளந்தலை முறையினருக்கு மன நிலையைச் சாந்தப்படுத்தும் பயிற்சிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

இப்போது எழுச்சியோடு நடைபெறும் மாணவர் போராட்டங்கள் எந்த அரசியல் அமைப்பாலும் கைப்பற்ற முடியாத போராட்டமாக உள்ளதோடு, அரசியல் கட்சிகளுக்கு அழுத்தங்களை ஏற்படுத்தவும் செய்திருக்கிறது. ஆகவே, இப்போது தமிழகத்தில் உடனடித் தேவை ஈழ மக்களுக்கான அரசியல் முன்னெடுப்புகளைச் சீராய்ந்து செய்யும் ஓர் ஒருங் கிணைப்பு!

**ஜோதிமணி - காங்கிரஸ் கட்சி**

சமீபத்தில் தனிப்பட்ட முறையில் இலங்கை சென்று போரால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்து வந்தேன். கடந்த 30 ஆண்டு காலப் போரால் ஈழத் தமிழர்கள் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். போர்தாக்குதலில் உயிர் மட்டுமே மிஞ்சியிருக்கும் மக்களை இராணுவத்தின் இறுக்கமான கண்ணிகள் இறுக்கியபடியே இருக்கின்றன.

வட இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களுமே முழுமையான இராணுவக் கட்டுப்பாட்டில் இருப்பதால் பொதுமக்கள் ஒரு வார்த்தை நலம் விசாரிக்கக்கூட அஞ்சுகிறார்கள். உடனடியாக யாழ்ப்பாணத்தில் இருந்து இராணுவத்தை வெளியேற்ற வேண்டும்.

போரில் சிதிலம் அடைந்த பாடசாலைகளைப் புதுப்பித்து நல்ல கல்வியை அந்தக் குழந்தைகளுக்கு அளிக்க வேண்டும். இழந்த நிலங்களை மீட்டுக்கொடுப்பதும், பொருளாதார ரீதியாக அந்த மக்களை முன்னேற்றுவதும், இயல்பு வாழ்வை அங்கு கொண்டு வருவதும் ஈழத்தின் உடனடித் தேவைகள்.

நிச்சயமாக ஈழப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றே இறுதித் தீர்வாக இருக்க முடியும். ஆனால், அது தமிழீழமா, அதிகாரப் பகிர்வா அல்லது பொது வாக்கெடுப்பா... எது என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் நாம் அல்ல... ஈழத் தமிழர்கள். ஆனால், அந்தத் தெளிவை அவர்கள் எட்டுவதற்கான புனரமைப்புகளும் இழந்த வாழ்க்கைக்கான நிவாரணங்களையும் அவர்களுக்கு அளிக்கச் செய்ய வேண்டியது நமது கடமையாகும்!

**அ.மார்க்ஸ் - அமைப்பாளர், மனித உரிமைகான மக்கள் கழகம்**

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் நவநீதம்பிள்ளை மனித உரிமை கவுன்சிலுக்கு அளித்த அறிக்கையில், சுதந்திரமான பன்னாட்டு விசாரணை, இராணுவ நீக்கம், அதிகாரப் பகிர்வு முதலியன பரிந்துரைக்கப்பட்டு உள்ளது.

ராஜபக்ஷவின் குடும்ப சர்வாதிகாரத்தை கண்டித்து, இன்று குமார் டேவிட், திசராணி குணரத்ன முதலிய சிங்கள அறிவு ஜீவிகளும் பேசத் தொடங்கியுள்ளனர். இந்தப் பின்னணியில் இருந்துதான் நாம் எதிர்கால நடவடிக்கைகளை அமைக்க வேண்டும்.

போர்க் குற்றங்கள் தொடர்பான சுதந்திரமான பன்னாட்டு விசாரணை, வடக்கு, கிழக்கில் இராணுவ நீக்கம், முறையான அதிகாரப் பகிர்வு ஆகியவற்றை உடனடிக் கோரிக்கைகளாக முன்வைத்துப் போராட்டங்களைத் தொடர்வதும், பொது வாக்கெடுப்பு என்பதை நோக்கி இந்திய அளவிலும், உலக அளவிலும் ஆதரவைத் திரட்டுவதும் தான் ஈழத் தமிழரின் எதிர்காலத்துக்கான சீரிய செயற்பாடுகளாக அமையும்!

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்சல் குருவின் உடலைக் கோரி காஷ்மீரில் கடை அடைப்பு போராட்டம்

நாடாளுமன்ற தாக்குதல் வழக்கில் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்ட அப்சல் குருவின் உடலை அவரது குடும்பத்தினரின் ஒப்படைக்க வலியுறுத்தி ஜம்மு காஷ்மீரில் முழு அடைப்பு போராட்டம் நடைபெற்று வருகிறது.

ஜம்மு காஷ்மீர் பிரிவினைவாத அமைப்பான த மஜிலிஸ் ஹுரியத் சார்பில் இந்த கடை அடைப்பு போராட்டம் நடைபெற்று வருகிறது.

அப்சல் குருவுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டதை கண்டித்தும் இந்த வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடை அடைப்பு காரணமாக ஸ்ரீநகரில் பெரும்பாலான கடைகள் அடைக்கப்பட்டுள்ளன. பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து முடக்கப்பட்டுள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கடை அடைப்பு காரணமாக காஷ்மீரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. (அ)



வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். இதனைக் கண்டித்து சென்னை பாரிமுனையில் இருந்து மத்திய புகையிரத நிலையத்திற்கு போராளியாக ஈழத்தமிழர் தனியுரிமைக்கான மாணவர் அமைப்பினர் செல்வதை படத்தில் காணலாம்.

# சீர்திருத்த பிரிவிலுள்ள சிறுவர்களின் கால்களை கழுவி முத்தமிட்டார் போப்

(ரோம்)

உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள் நேற்று இயேசு சிலுவையில் அறையப்பட்ட தினமான புனித வெள்ளியை அனுசரித்தனர்.

அவர் சிலுவையில் அறையப்படும் முன்பு தனது 12 சீடர்களின் கால்களை கழுவி முத்தமிட்ட நிகழ்ச்சியை நினைவுகூரும் புனித வியாழன் வழிபாடு வத்திக்கான் நகரத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

வழக்கமாக வத்திக்கான் நகரிலுள்ள புனித பீற்றர் தேவாலயத்தில் பாதிரியார்களின் கால்களை கழுவி போப் ஆண்டவர் முத்தமிடுவார். ஆனால், இந்தமுறை புதிதாக பொறுப்பேற்றுள்ள போப் ஆண்டவர் பிரான்சிஸ் இதுவரையிலான மரபுகளை தகர்த்தெறிந்தார்.

வழக்கத்திற்கு மாறாக அவர் ரோம் நகரில் உள்ள கசல்டெல் மர்மோ என்ற சிறார்கள் சீர்திருத்த பாடசாலைச் சிறைக்கு சென்றார். அங்கு 12 இளம் சிறை கைதிகளின் கால்களை கழுவி முத்தமிட்டார். அவர்களில் 2 முஸ்லிம் சிறுமிகளும் அடங்குவர்.

இதுவரை போப் ஆண்டவர் பெண்களின் கால்களை கழுவி முத்தமிட்டது இல்லை. அந்த மரபையும் மாற்றி போப் ஆண்டவர் பிரான்சிஸ் புதிய வரலாறு படைத்தார். இது குறித்து அவர் கூறும்போது,



எனது மனச்சாட்சிப்படி மதகுருவின் கடமையை நான் செய்தேன். நான் உங்களுக்கு சேவை செய்ய இருக்கிறேன். கடவுள் எனக்கு கற்றுக் கொடுத்ததை அன்புடன் செய்கிறேன் என்றார்.

இந்த நிகழ்ச்சி வத்திக்கான் நகர் வானொலியில் மட்டும் நேரடியாக ஒலிபரப்பப்பட்டது. பாதுகாப்பு பிரச்சினைகள் காரணமாக ஏனைய தொலைக்காட்சி மற்றும் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. (அ)

# இரசாயன தொழிற்சாலையில் வெடி விபத்து; ஐவர் உயிரிழப்பு

(மும்பை)

மும்பையின் புறநகர்ப் பகுதியில் உள்ள தொழிற்சாலையில் ஏற்பட்டுள்ள வெடி விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளதோடு மேலும் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மகாராஷ்டிரா மாநிலம் மும்பை புறநகர் பகுதியில் சகினாகா எனும் இடத்தில் மேக்சிப்ட் என்ற இரசாயன தொழிற்சாலை இயங்கி வருகிறது. இத் தொழிற்சாலையில் நேற்று வெடி விபத்து ஏற்பட்டது. சகினாகா பகுதி மக்கள் நெருக்கம் அதிகம் உள்ள பகுதியாகும்.

தொழிற்சாலைக்கு அருகிலும் வீடுகள் இருக்கின்றன. இதனால் வெடி விபத்தில் வீடுகளின் சுவர்கள் இடிந்து விழுந்தது. இந்த இடிபாடுகளில் சிக்கி 5 பேர் உயிரிழந்ததோடு 7 பேர் படுகாயம் அடைந்தனர். இதில் 3 பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தகவலறிந்து வந்த தீயணைப்பு படையினர் அங்கு சென்று உடல்களை மீட்டனர். இடிபாடுகளையும் அகற்றி வருகின்றனர். சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் கூறுகையில்,

வெடிச்சத்தம் கேட்டு வந்து பார்த்தோம். ஒரே புகை மூட்டமாக இருந்தது. நாங்கள் ஒரு முதியவர் தப்பிக்க உதவி செய்தோம் என்று கூறினார். தீயணைப்பு படையினர் மீட்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். வெடிவிபத்துக்கான காரணங்கள் குறித்து பொலிஸார் விசாரணை நடத்துகிறார்கள். (அ-5)

# ஒசாமாவை கொன்றவர் தொடர்பில் புதிய சர்ச்சை

(வோஷிங்டன்)

சர்வதேச நாடுகளை அச்சுறுத்திய அல்கொய்தாவின் தலைவர் பின்லேடன் கடந்த 2011 ஆம் ஆண்டு மே 2 ஆம் திகதி அமெரிக்க படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். பாகிஸ்தான் அபோதாபாத் நகரில் பதுங்கியிருந்தபோது அவரை அமெரிக்க இராணுவம் சுட்டுக் கொன்றது.

இதற்கிடையே பின்லேடனை கொன்றது நான்தான் என அமெரிக்காவில் நேவீ சீல் என்ற அதிரடி படையின் 2 வீரர்கள் கருத்து தெரிவித்து இருந்தனர்.

அமெரிக்காவில் இருந்து வெளிவரும் பத்திரிகைக்கு அதிரடிப்படை வீரர் ஒருவர் பேட்டி அளித்துள்ளார். அதில் 2011 ஆம் ஆண்டு மே முதலாம் திகதி இரவு நான்தான் பின்லேடனை 2 முறை தலையில் சுட்டுக் கொன்றேன் என கூறியுள்ளார்.

இதேநேரத்தில் மற்றொரு கொமாண்டோ வீரர் கூறுகையில், பின்லேடன் பதுங்கியிருந்த 3 ஆவது மாடிக்கு நான் மட்டும் தனியாக சென்று சுட்டுக் கொன்றேன் என்றார். எனினும் இவர்கள் இருவரும் கூறியிருப்பதை சி.என்.என். தேசிய பாதுகாப்பு விமர்சகர் பீட்டர் பெர்லகன் மறுத்துள்ளார். அவர் அல்கொய்தா அமைப்பின் ஆதரவாளர் ஆவார்.

இதுகுறித்து அவர் கூறும்போது, 6 பேர் கொண்ட அமெரிக்க அதிரடிப் படையில் 3 பேர் மட்டும் பின்லேடன் தங்கியிருந்த வீட்டின் மேல் தளத்துக்கு சென்றுள்ளனர். அவர்களின் துப்பாக்கி சுடும் வீரர் மற்றும் பாய்ண்ட் மேனும் அடங்குவர். அவர்களில் பாய்ண்ட் மேன் பின்லேடனை முதலில் சுட்டார். அவர் பின்லேடன் பதுங்கியிருந்த அறைக்கு சென்றபோது 2 பெண்கள் அவரை வழி மறித்தனர். தாங்கள் தற்கொலைப் படையினர் என்றும் உடலில் வெடிகுண்டை கட்டியிருப்பதாகவும் மிரட்டினர். அதற்குள் 2 வீரர்கள் பின்லேடன் அறைக்குள் புகுந்து அவரது மார்பில் சுட்டுக் கொன்று வீழ்த்தினர் என்று தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற கருத்துக்களால் பின்லேடனை கொன்றது யார் என் பதில் குழப்பம் நிலவுகிறது. (அ-5)

# நீதிமன்று சென்ற முஷாரப் மீது சப்பாத்து வீச்சு

(கராச்சி)

பெனாசீர் பூட்டோவின் கொலை தொடர்பில் வழக்கு விசாரணைக்கு நீதிமன்றில் ஆஜராகியிருந்த முஷாரப் மீது சப்பாத்து வீச்சு இடம் பெற்றுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் பதவியிழந்த பின் சவுதி அரேபியாவில் தஞ்சம் அடைந்து இருந்த பின் தற்போது பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக பாகிஸ்தான் திரும்பியுள்ளார்.

அவர் மீது பெனாசீர் கொலை வழக்கு உட்பட பல்வேறு வழக்குகள் உள்ளன.

இந்த வழக்கில் அவர் ஜாமீன் பெற்றுள்ளார். இந்த வழக்கு விசாரணைக்காக முஷாரப் நேற்று சிந்து மாகாண நீதிமன்றிற்கு வந்தார். அவர் ஜாமீனை மேலும் 15 நாட்களுக்கு நீடிக்க அனுமதி கேட்டிருந்தார். இதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது.


இந்த வழக்கு விசாரணைக்கு நீதிமன்றுக்கு வந்துவிட்டு திரும்பிய போது சட்டத்தரணிகள் சிலர் முஷாரப்புக்கு எதிராக கோஷமிட்டனர். திடீரென்று முஷாரப் மீது சப்பாத்து வீசப்பட்டது. உடனே அவர் தலையை குனிந்து விட்டதால் குறி தவறியது.

இந்த சம்பவம் காரணமாக நீதிமன்றில் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து பொலிஸார் முஷாரப்பை பாதுகாப்பாக அழைத்து சென்றனர். (அ-5)

# அமெரிக்காவில் ஒட்டிப் பிறந்த இரு சுறா மீன்கள் கண்டுபிடிப்பு

ஒரே உடல் இரட்டை தலைகளுடன், சிலர் அபூர்வமாக பிறப்பதை கேள்விப்பட்டிருக்கிறோம். இரட்டைத் தலை கொண்ட பாம்புகள் கூட இருக்கின்றன. இந்த வகையில் இரட்டை தலை கொண்ட சுறா மீன் ஒன்று முதல் முறையாக அமெரிக்காவில் இருப்பது உறுதியாகி இருக்கிறது.

கடலில் சிக்கிய இந்த அதிசய சுறா மீனை புளோரிடாவிலுள்ள கல்லூரி ஒன்றுக்கு ஆய்வுக்காக கொண்டு வரப்பட்டுள்ளது. அங்கு ஆய்வினை மேற்கொண்டு போதிய வசதிகள் அற்ற நிலையில் தீவிர ஆய்வினை மேற்கொள்ள மிஷிகனிலுள்ள கடல் உயிரின ஆய்வு பல்கலைக்கழகத்துக்கு கொண்டு



செல்லப்பட்டிருந்தது.

பேராசிரியர் வாக்னெர் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு இந்த சுறா மீனை ஆய்வு செய்ததில் அது ஒட்டிப் பிறந்த இரட்டை மீன் என்பதை கண்டுபிடித்துள்ளனர்.

இச் சுறா மீனுக்கு 2 தலைகள் மட்டுமின்றி 2 இருதயம், 2 குடல் பகுதியும் ஒரு வால் ஆகியவை இருப்பதை கண்டு பிடித்துள்ளனர. (அ-5)

# சூதாட்ட விடுதியில் மோதல்; எட்டு பேர் உயிரிழப்பு

(கென்யா)

கென்யாவில் உள்ள சூதாட்ட விடுதி ஒன்றில் ஆயுதக்குழு ஒன்றுக்கும் பொலிஸாரிற்கும் இடையே இடம்பெற்ற மோதலில் இரு பொலிஸார் உட்பட 8 பேர் பலியாகியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

கென்யாவின் மாலின்டி நகரிலுள்ள சூதாட்ட விடுதிக்குள் வீச்சு அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் நுழைந்த 50 பேர் கொண்ட கும்பல் அங்கு சூறையாடி தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த கும்பல் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

குறித்த ஆயுதக் குழுவிற்கும் பொலிஸாருக்குமிடையில் மோதல் வலுத்ததுடன் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

பொலிஸாரின் துப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்கான ஆயுதக் குழுவை சேர்ந்த 6 பேர் பலியாகியுள்ளதுடன் ஆயுதக் குழுவின் தாக்குதலில் இரு பொலிஸாரும் பலியாகினர்.

இதேவேளை, சூதாட்ட விடுதியிலிருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டமை குறித்து தகவல் எதுவும் அறியப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# பிரிட்டனில் தொடரும் பனிப்பொழிவு

பிரிட்டனில் இளவேனிற் காலம் ஆரம்பமாகும் நேரத்தில் கடும் குளிர் காற்றும் பனிப் பொழிவும் மக்களை வாட்டி வருகின்றது. இந்நிலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை தொடரலாம் என்று வானிலை ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

பனியின் தாக்கத்தினால் தற்பொழுது ஏற்பட்டுள்ள காற்றமுத்தத் தடை திசை மாறி ஆபிரிக்காவின் வடபகுதியை நோக்கி வீசிக் கொண்டிருப்பதாகவும் வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

மேலும் இரவு நேரங்களில் பரவலாக உறைய வைக்கும் பனிப் பொழிவும் கிழக்குத் திசையிலிருந்து வீசும் கடும் குளிர் காற்றும் இன்னும் தொடரும் எனவும் வானிலை அறிக்கை தெரிவிக்கின்றது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைத்தானே ஆட்சி செலுத்தாதவர்களை மற்றவர்கள் ஆட்சி செய்வார்கள்.

– இக்பால்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஈழத்தில் மரித்தவர்கள் தமிழகத்தில் உயிர்த்தெழுந்தனர்

மரித்தலும் உயிர்த்தெழுதலும் பற்றி இவ்விடத்தில் எழுதுவதற்கு உகந்த காலமிது.

கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட இயேசுபிரான் உயிர்த்தெழுந்த வரலாற்றை அறியும்போது தெய்வீகத்தின் பெருமை உணரப்படும்.

மனுக்குலத்தில் பிறந்த இயேசுபிரான் இறைபரம்பொருளின் அவதாரமானவர்.

தனக்கு ஏற்படக்கூடிய இடர்களையும் இன்னல்களையும் அவர் அறியாதவரும் அல்ல.

தன்னைக் காட்டிக் கொடுப்பவரை; சிலுவையில் அறையப்படும் நேரத்தையெல்லாம் உணர்ந்த பிதாமகன் பாவகாரிகளினால் வதைக்கப்படுவதிலிருந்து தப்பிக்கத் தெரியாதவரும் அல்ல. அல்லது தப்பித்துக் கொள்வதில் அவருக்கு எந்தக் கஷ்டம் இருந்ததும் இல்லை.

ஆனால் மனுக்குலத்தை மீட்வெடுக்கத் தோன்றிய இயேசுநாதர், தனது வாழ்நாளில் மட்டும் மனுக்குல வழிப்படுத்துநராக இருப்பதில் எந்த நன்மையும் ஏற்படாதென்பதை நன்குணர்ந்திருந்தார்.

தனது பிறப்பின் நோக்கம் இந்த உலகம் இயங்கும்வரை மனித குலத்தை நெறிப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்றுணர்ந்த இயேசுபிரான் பாவத்தைத் தான் சுமந்து சிலுவையில் அறைபட்டார்;வதைபட்டார்.

எனது பிறப்பின் மகத்துவம் நிலைக்க இது போதும் என்று திடப்படுத்திய அவர், தந்தையே! இதுபோதும் என்னை உம்மிடம் எடுத்துக் கொள்ளும் என்று மனுக்குலம் வாழும் மண்ணிலிருந்து மன்றாடுகிறார்.

சுதனின் பரிசுத்த ஆவி பிதாவுடன் இரண்டறக் கலந்து கொள்ள, உயிரற்ற உடல் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகின்றது.

அடக்கம் செய்யப்பட்டு மூன்றாம் நாள் உயிர்ப்பும் உயிருமாகிய இயேசுபிரான் உயிர்த்தெழுகிறார்.

**வதைபடுதல், மரித்தல், உயிர்த்தெழுதல்** ஆகிய இவ் மூன்றுமே இயேசுநாதரின் போதனைகளை உலகறியச் செய்கிறது.

ஆக! மரித்தல் என்பதுடன் கதை முடிந்துவிட்டால் அங்கு விடுதலை இல்லை. மரித்தல் உயிர்த்தெழுந்தால்தான் விடுதலை.

விடுதலை என்பது பல வகைப்படும். பாவப்பட்ட மானிடருக்கு விடுதலை கொடுப்பதற்காக பிதாமகன் மரித்து உயிர்த்தெழுந்தார்.

இயேசுவின் வாழ்நாளில் அவர் மரித்த நாளும் உயிர்த்த நாளும் உள்ளிட்ட மூன்று நாட்களே தெய்வீகம் உணரப்படுவதற்கான திருநாட்கள்.

ஆக! மரித்தலோடு விடுதலை நின்றுவிடுவதாக யாரும் நினைத்து விடாதீர்கள்.

மரித்தல் உயிர்த்தால் அது தெய்வீகத்தால் ஆசிர்வதிக்கப்பட்ட பூரண விடுதலையைத்தரும்.

ஈழத்தில் மரித்தவர்கள் தமிழகத்தில் உயிர்த்தெழுந்தால் அது, பலமான பரிபூரணமான விடுதலையை அங்கும் இங்கும் தந்தருளும் என்று நம்பலாம்.

# கச்சதீவுப் பிரச்சினை இப்போது தேவையில்லை

## இலங்கைத் தூதுவர் தெரிவிப்பு



கச்சதீவுப் பிரச்சினை முடிந்துபோன ஒன்று. அதை இப்போது எழுப்பத் தேவையில்லை என இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசம் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக தமிழகத்தில் மாணவர்களின் போராட்டங்கள், மறியல், கடையடைப்பு என கொந்தளிப்புடன் காணப்படும் நிலையில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் பிரசாத் காரியவாசம் சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்து வருகிறார். இது தொடர்பாக அவர் அளித்த பேட்டியில்,

இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியாவின் தென் பகுதியிலும் சிங்களவர்களுக்கு வடகிழக்கு பகுதியோடும் தொடர்பு இருக்கிறது. இதை மறுக்க முடியாது. அப்படி குடியேறியவர்களுக்கு அப்போதே அரசாளும் உரிமை இருந்தது.

இப்போது அனைவரும் இலங்கை குடிமகன்களாக இருக்கிறோம்.

கச்சதீவு பிரச்சினையில் கடந்த 1974 மற்றும் 1976 -ம் ஆண்டுகளில் போடப்பட்ட ஒப்பந்தங்களின்படியே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அந்தப் பிரச்சினையை இப்போது மீண்டும் எழுப்ப வேண்டிய அவசியமில்லை.

சென்னையில் நடைபெறும் ஐபிஎல் போட்டிகளில், இலங்கை வீரர்கள் பங்கேற்க எதிர்ப்புத் தெரிவித்திருப்பது துரதிர்ஷ்டவசமானது. விளையாட்டுடன் அரசியலை இணைத்துப் பார்க்கக் கூடாது என்று கூறியுள்ளார். (ஏ-11)

## ஜனாதிபதியின் பதாகைகள் சேதமாக்கப்பட்டன

மட்டக்களப்பில்நகரின் இரு இடங்களில் ஜனாதிபதியின் ஆதவாளர்களினால் கட்டப்பட்டிருந்த பதாகைகள் இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளன.

மட்டு – கல்லடி புதிய பாலத்தின் திறப்பு விழாவை முன்னிட்டு மட்டக்களப்பு அரசடியிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீடச் சந்திக்கு அருகிலும் கல்லடிப் பாலத்திற்கு முன்னாலும் பொருத்தப்பட்டிருந்த பதாகைகளே இவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் ஜனாதிபதியின் பதாகைகள் பொருத்தப்பட்டிருந்தன. இவற்றில் இரு பதாகைகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஏ-11)

## நெருக்கடியை ஏற்படுத்திய அரச சார்பற்ற நிறுவனம்

நாட்டுக்கு நெருக்கடி நிலைமையை ஏற்படுத்திய அரசு சார்பற்ற நிறுவனம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கைக்கும் சர்வதேச சமூகத்திற்கும் இடையில் முறுகல் நிலைமை ஏற்படுவதற்கு இந்த அரச சார்பற்ற நிறுவனமே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆண்டு தோறும் குறித்த அரச சார்பற்ற நிறுவனத் தலைவருக்கு பாரியளவு நிதி உதவிகள் கிடைக்கின்றன.

கடத்தல், காணாமல்போதல் மற்றும் சித்திரவதைகள் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் இந்த அரச சார்பற்ற நிறுவனம் அமெரிக்காவிற்கு போலியான தகவல்களை வழங்கி வருகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற குறித்த அரச சார்பற்ற நிறுவனத் தலைவரே காரணம் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஏ-11)

## ஆஸி செல்ல முயன்ற 40 பேருக்கு விளக்கமறியல்

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டவேளை கைது செய்யப்பட்டவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அவுஸ்திரேலியா செல்ல தயார் நிலையிலிருந்தபோது கைது செய்யப்பட்ட 97 பேரில் 40 பேரை எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் ஜே.எம்.சமீம் உத்தரவிட்டார்.

மேலும் 20 பேரை சரீரப் பிணையிலும் 16 வயதுக்கு உட்பட்ட 37 சிறுவர்களை நீதிவான் விடுவித்தும் உள்ளார்.

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் பதில் நீதிவான் ஜே. எம். சமீம் முன்னிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இவர்களை ஆஜர்படுத்திய போதே அவர் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.

அவுஸ்ரேலியாவிற்கு சட்டவிரோதமாக சென்று கொண்டிருந்தாகக் கூறப்படும் 97 பேரை அம்பாறை மாவட்ட கடற்பரப்பில் கடந்த புதன்கிழமை அதிகாலை கடற்படையினர் கைதுசெய்தனர்.

சமுது புதா என்னும் பெயர் கொண்ட படகில் பயணித்த இவர்கள் புத்தளம், மன்னார், களுவாஞ்சிக்குடி, திருக்கோவில், ஆலையடிவேம்பு, வாழைச்சேனை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஏ-11)

## வேலையற்றோர் வீதம் அதிகரிப்பு

# சவுதி அரேபியாவில் இலங்கையருக்கு ஆபத்து

சவுதி அரேபியாவில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களில் தொழிலில் புரியும் இலங்கையர் உட்பட ஆசியா நாட்டவர் பலர் தங்களது வேலைவாய்ப்பை இழக்கும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்நாட்டு அரசாங்கமானது உள்நாட்டில் வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்களுக்கு தொழில்வாய்பைபெற்றுக்கொடுக்கும் முடிபை எடுத்துள்ளமையே இதற்கு காரணமாகும்.

எகிப்து உட்பட மத்திய கிழக்கில் வெடித்த புரட்சி போன்று தனது நாட்டிலும் ஏற்படுவதைத் தவிர்க்க சவுதி அரசு எச்சரிக்கையாக உள்ளதாகவும், அதன் ஓர் அங்கமாகவே இத்தீர்மானத்தினை மேற்கொள்வதாக வும் தெரிவிக்கப்பட்டுகின்றது.

சவுதியின் புள்ளிவிபரங்களின்படி கடந்த வருடத்தில் அந்த நாட்டின் சனத்தொகையில் 12.2 வீதமானோர் வேலையற்றோர். இது எண்ணிக்கையில் 5 இலட்சத்து 88 ஆயிரம் பேராகும்.


மற்றைய புள்ளி விபரங்களின் படி அந்நாட்டின் 15-25 வயதான இளைஞர்களில் 39 வீதம் வேலையற்றோராகும்.

இதனால் சவுதி அரசு அதிரடி யான பல முடிபுகளை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நிறுவனங்களில் குறைந்தபட்சம் எத்தனை உள்நாட்டவருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென்ற எண்ணிக்கையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுகின்றது. புதிய நடைமுறைகளை மீறுவோருக்கு எதிராக கடுமையாக சட்ட நடவடிக்கைகளையும் சவுதி அரசாங்கம் எடுக்கவுள்ளதாக தெரியவருகின்றது.

இதனால் பெருமளவிலான ஆசிய நாட்டவர்கள் குறிப்பாக இந்தியர்கள் பலர் வேலைவாய்ப்பை இழக்கும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ளனர். (ஏ-11)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வர்க்கியங்கள்



துயரத்தை எதிர்கொள்ளும்போது துயரத்திலிருந்து தப்பித்து ஓடுவதைப்பற்றி தெளிவு தரவேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில் நீங்கள் அதைத்தான் எந்நேரமும் செய்து கொண்டிருக்கிறீர்கள். எப்போதெல்லாம் நீங்கள் நான் துயரப்படுகிறேன் என்று கூறுகிறீர்களோ அப்போது துயரத்திலிருந்து தப்பித்து ஓடிக்கொண்டிருக்கிறீர்கள் என்று தான் அர்த்தம். ஏனென்றால் உங்களால் திரும்பிப் பார்த்து துயரத்தை எதிர்த்து நின்று அதில் மூழ்கி அதைத் தழுவி அதை நேசித்து அதனுடன் இருந்து முழுமையாக அதை ஏற்றுக்கொண்டு விட முடிந்தால் அதை விட இன்பம் வேறெதுவும் இல்லை. முதலில் இதை நீங்கள் செய்யுங்கள். பின்பு என்ன நிகழ்கிறது என்று பாருங்கள்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உயர உயர சோதனையும் வரும்



✦ இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யும் கைகள் ஆகியவை அனைவருக்கும் தேவை.

✦ உண்மை அல்லாதவற்றில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பதுடன் உண்மையில் பிடிப்புள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். இதைக் கடைப்பிடிப்பவர்கள் வெற்றி பெறுவது உறுதி.

✦ ஒவ்வொரு ஆன்மாவிலும் தெய்வீகசக்தி ஒளிந்து கிடக்கிறது. அதை வெளிக்கொண்டு வருவதே நம் வாழ்க்கையின் இலட்சியம். இதற்காக புறவாழ்க்கையிலும் அகவாழ்க்கையிலும் கட்டுப்பாட்டுடன் நடக்கவேண்டும்.

✦ உலகம் கோழைகளுக்காக ஏற்பட்டதல்ல. இங்கிருந்து தப்பியோட முயற்சி செய்யாதீர்கள். செய்யும் செயலில் வெற்றியோ, தோல்வியோ கவலைப்பட்டுக் கொண்டிருக்கக்கூடாது. தொடர்ந்து பணியைச் செய்யவேண்டும்.

✦ மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறானோ அந்த அளவுக்கு அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து தான் ஆகவேண்டும்.

✦ கடவுளின் குழந்தைகளாகிய மனிதர்களுக்குத் தொண்டு செய். மனிதர்களுக்குத் தொண்டு செய்வதன்மூலம் ஆண்டவனுக்கு நீ தொண்டு செய்தவனாகிறாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனத்திற்கு 4.5 கோடி டொலர் நிதி உதவி

சுவிற்சர்லாந்தின் ஜூரிச் நகரைத் தலைமையகமாகக் கொண்டு, இயங்கும் உலக காற்பந்து சம்மேளனம் பலஸ்தீனத்தின் அல்ராம் என்ற இடத்தில் கட்டப்பட்டு வரும் காற்பந்து சங்க தலைமைக் கட்டடத்திற்கு நிதியுதவி வழங்கியுள்ளது. அத்துடன் அந்த நாட்டில் காற்பந்து விளையாட்டினை மேலும் மேம்படுத்தவும் 4.5 கோடி டொலர் நிதியினை, வழங்கவுள்ளதாக இந்தச் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இதன் மூலம் காற்பந்து அக்கடமி ஒன்று வெஸ்ட் பாங்க் பகுதியில் உள்ள அல் பைரே என்ற இடத்தில் ஏற்படுத்தப்படும். இரண்டு புதிய ஆடுகளங்களில் ஒன்று அதே பகுதியில் உள்ள துல்காராமிலும், மற்றொன்று ஜெருசலேம் அருகில் உள்ள அல் ராமிலும் ஏற்படுத்தப்படும் என்றும் அறிவித்துள்ளது.

பாலஸ்தீனம், பொருளாதார நெருக்கடிகளாலும், இனப்பிரச்சினைகளாலும், அது தொடர்பாக அடிக்கடி எழும் மோதல்களாலும், சிதறுண்டு கிடக்கும்போது, இந்தப் புதிய முயற்சி உலகநாடுகளின் பார்வையில் இந்நாடு குறித்த புதிய கோணத்தைத் தோற்றுவிக்க உதவலாம் என நம்பப்படுகின்றது.

# தென்னாபிரிக்காவுக்கு கதாயுதம்



ஐசிசி டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்ததற்கான ஐசிசி டெஸ்ட் சம்பியன்ஷிப் கதாயுதம் மற்றும் ரூ.6.5 கோடி ரொக்கப் பரிசு ஆகியவை தென்னாப்பிரிக்க அணிக்கு வழங்கப்பட்டது. அதை அந்த அணியின் தலைவர் கிரீம் ஸ்மித் பெற்றுக்கொண்டார்.

தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க்கில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் ஐசிசி நடுவர்கள் மற்றும் ரெப்ரிக்கள் குழுவின் மேலாளர் வின்ஸ் வான் டி பிஜ்ஜிடம் இருந்து கதாயுதத்தையும், ரொக்கப் பரிசையும் ஸ்மித் பெற்றுக்கொண்டார்.

ஏப்ரல் முதலாம் திகதி கணக்கீட்டின்படி ஒவ்வொரு ஆண்டும் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் அணிக்கு டெஸ்ட் சம்பியன்ஷிப் கதாயுதமும், ரொக்கப் பரிசும் வழங்கப்படும். அதன்படி இந்தமுறை அந்த கௌரவத்தை தென்னாபிரிக்கா தட்டிச் சென்றுள்ளது.

இது தொடர்பாக ஸ்மித் கூறுகையில், 'நான் உண்மையிலேயே கௌரவிக்கப்பட்டுள்ளேன். என் சார்பில் மட்டுமின்றி, தென்னாபிரிக்க வீரர்கள், அணி நிர்வாகம் உள்ளிட்டோரின் சார்பில் பணிவோடு டெஸ்ட் சம்பியன்ஷிப் கதாயுதத்தை பெற்றுக்கொள்கிறேன்' என்றார்.

# பிஸ்டோரியசுக்கு வெளிநாடு செல்ல நிபந்தனையுடன் அனுமதி

இரு கால்களையும் இழந்த தென்னாபிரிக்க சாதனை தடகள வீரர் ஒஸ்கார் பிஸ்டோரியஸ், காதலியை கொலை செய்த வழக்கில் கைது செய்யப்பட்டு, பின் பிணையில் வெளிவந்தார். இந்த நிலையில் அவர் வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்ள அவருக்கு சில நிபந்தனைகளுடன் பிரிட்டோரியா நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.



# தாக்கப்பட்ட ரைடர் உடல் நிலையில் முன்னேற்றம்



நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான ஜேசி ரைடர் மதுபானசாலையில் சக வீரர்களுடன் இருந்தபோது அங்கு இருந்த சிலருடன் ஏற்பட்ட தகராறினால் தாக்கப்பட்டார். இதனால் மண்டை ஓடு பிளக்கப்பட்டு கிறிஸ்ட் சர்ச் நகரில் உள்ள மருத்துவமனை யில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ரைடரின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக மருத்துவர்கள் அறிவித்துள்ளனர்.

4 பேர்கொண்ட கும்பல் இவரை தாக்கியதாகவும் இதில் ஒருவரை பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# 'வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளில் வென்றால்தான் இந்திய அணி சிறந்த அணி'

## சொல்கிறார் ஆஸி. உடனான டெஸ்ட் போட்டியில் விளையாடாத கம்பீர்


அன்னிய மண்ணில் டெஸ்ட் தொடரை வென்றால்தான் சர்வதேச கிரிக்கெட்டில் சிறந்த அணி என்ற அங்கீகாரத்தை இந்திய அணி பெற முடியும் என்று இந்திய கிரிக்கெட் வீரர் கௌதம் கம்பீர் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் முடிவடைந்த அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் இருந்து நீக்கப்பட்ட கம்பீர், டில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டார். அங்கு அவர் கருத்து வெளியிடுகையில்,

வெளிநாடுகளில் நடைபெறும் டெஸ்ட் தொடரில் வென்றாலொழிய நாம் சிறந்த அணியாக அங்கீகரிக்கப்படமாட்டோம். வெளிநாட்டு மண்ணில் நடைபெறும் டெஸ்ட் போட்டிகளில் வெல்வதை மிகப்பெரிய விஷயம் என்றே நான் நம்புகிறேன். சமீபத்தில் முடிவடைந்த அவுஸ்திரேலியத் தொடரில் இந்திய அணி சிறப்பாக விளையாடி வெற்றி கண்டதால் மகிழ்ச்சியடைந்தேன். உள்ளூர் மைதான சூழலை இந்திய அணி சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டதில் எந்தத் தவறும் இல்லை. எல்லா அணிகளும் தங்கள் நாட்டில் நடைபெறும் போட்டிகளில் அதைத்தான் செய்கின்றன.

தென்னாபிரிக்காவை எடுத்துக்கொண்டால், அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணகளை அதன் சொந்த மண்ணிலேயே வீழ்த்தியுள்ளது. தென்னாபிரிக்கா உலகின் முதல் நிலை அணியும்கூட.

வெளிநாட்டு மண்ணல் நடைபெறும் டெஸ்ட் தொடரை வெல்லும் இந்திய அணி



யில் ஒரு வீரராக இருக்கவேண்டும். அந்தத் தொடரில் அதிக அளவில் ஓட்டங்கள் குவித்து இந்தியாவின் வெற்றியில் முக்கியப் பங்கு வகிக்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட இலட்சியம் என்றார்.

# பந்து வீச்சாளர்கள்தான் தோல்விக்கு காரணம்



இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற 3ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் பெறப்பட்ட தோல்விக்கு பந்துவீச்சாளர்கள் தான் காரணம் என இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இப் போட்டியில் மழை குறுக்கிட்டதால் போட்டி 27 ஓவர்கள் கொண்ட இன்னிங்ஸாக பங்களாதேஷ் அணியின் இன்னிங்ஸ் குறைக்கப்பட்டபோது பங்களாதேஷ் அணி 13 ஓவர்களில் 102 ஓட்டங்களைப் பெற வேண்டியிருந்தது. ஆனால் அவ் வணி 12 ஓவர்களில் 103 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

இந்நிலையில் நேற்றைய போட்டியில் இலங்கை அணி மழையின் பின்பு ஈரமான பந்துடன் பந்துவீச்சில் ஈடுபட வேண்டியிருந்த போதிலும், கள நிலைகளையும் வானிலையையும் குற்றஞ்சாட்ட விரும்பவில்லை எனத் தெரிவித்த அஞ்சலோ மத்தியூஸ், பந்துவீச்சாளர்கள் சிறப்பாகப் பந்து வீசியிருக்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

இலங்கை அணி ஒரு கட்டத்தில் ஒரு விக்கெட்டை இழந்து 203 ஓட்டங்களுடன் காணப்பட்டு, அதன் பின்னர் விக்கெட் டுக்கள் தொடர்ச்சியாக இழக்கப்பட்டிருந்தாலும், அவ்வணி பெற்றுக்கொண்ட 302 ஓட்டங்கள் போட்டியை வெற்றி கொள்ளப் போதுமான ஓட்டங்கள் எனக் குறிப்பிட்ட இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், பந்துவீச்சாளர்கள் இந்தத் தொடர் முழுவதும் சிறப்பாகப் பிரகாசித்திருக்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

# புனே வாரியஸ் அணித் தலைவராக மத்தியூஸ்

இலங்கை வீரர்கள் சென்னையில் இடம்பெறும் ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்கமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் புனே வாரியாஸ் அணியின் தலைவராக இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் நியமிக்கப்பட்டுள்ளார். சௌரவ் கங்குலியிடமிருந்து அவர் இந்த அணித் தலைமை யைப் பெற்றுகொண்டுள்ளார்.

கடந்த 2011ஆம் ஆண்டு புனே வாரியர்ஸ் அணியின் முதலாம் ஆண்டில் யுவ்ராஜ்சிங்கும், கடந்தாண்டு யுவ்ராஜ்சிங் புற்றுநோய் காரணமாக சௌரவ் கங்குலி, ஸ்டீவன ஸ்மித் ஆகியோரும் அணித் தலைவர்களாகப் பதவிவகித்திருந்த நிலையில், புனே வாரியர்ஸ் அணியின் 4ஆவது தலைவராக அஞ்சலோ மத்தியூஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாண்டுக்கான தொடரில் மைக்கல் கிளார்க்கை புனே வாரியர்ஸ் அணி ஒப்பந்தம் செய்திருந்ததோடு, தலைவராகவும் நியமிக்க உத்தேசித்திருந்த போதிலும் அவருக்கு ஏற்பட்ட முதுகு உபாதை காரணமாக 7-10 வாரங்கள் ஓய்வெடுக்க வேண்டும் என்ற நிலையில் அவர் இத்தொடரிலிருந்து விலகினார்.

ஏற்கனவே டில்லி டேர்டேவில்ஸ் அணியின் தலைவராக மஹேல ஜெயவர்தனவும் ஐதரபாத் சண் றைசர்ஸ் அணியின் தலைவராக குமார சங்கக்காரவும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிக்குகள் மீது தாக்குதல் மன்னார் ஆயர் கண்டனம்



ஆன்மீகச் சுற்றுலா மேற்கொண்டு இந்தியா சென்ற பௌத்த மத பிக்கு ஒருவர் தஞ்சாவூர் பெரிய கோவிலுக்கு சென்றிருந்தபோதும், மற்றொரு பௌத்த பிக்கு சென்னை மத்திய புகையிரத நிலையத்தில் தாக்கப்பட்ட சம்பவங்களை ஊடகம் வாயிலாக அறிந்து அதிர்ச்சியுற்றோம்.

தமிழகத்தில் பௌத்த பிக்குமார் தாக்கப்பட்டமையை வன்மையாக கண்டிப்பதாக மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து ஆன்மீகச் சுற்றுலாவுக்காக இந்தியா சென்ற பௌத்த பிக்குகள் அண்மையில் தாக்கப்பட்டனர்.

ஒருவர் தஞ்சாவூர் பெரிய கோவிலுக்கு சென்றிருந்த போதும், மற்றொரு பௌத்த பிக்கு சென்னை மத்திய புகையிரத நிலையத்திலும் தாக்கப்பட்ட சம்பவங்களை மன்னார் குருக்கள் மற்றும் மக்கள் பெயரால் தான் வன்மையாக கண்டிப்பதாக மறைமாவட்ட ஆயர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர் விவகாரத்திற்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்கான அக்கறையும் விழிப்புணர்வும் கொண்டு தமிழ்நாட்டில் பரவலாக போராட்டங்கள் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில், அங்குள்ள மாணவர் சமுதாயத்தால் முன்னெடுக்கப்படும் அற நெறிப் போராட்டங்களையும் நன்றியோடு நினைந்து வரவேற்பதோடு அங்கு ஒரு சிலரால் மேற்கொள்ளப்பட்ட வேண்டத்தகாத வன்முறைச் செயல்கள் எமக்கு வருத்தமளிப்பதாக இருப்பதை சுட்டிக்காட்டி அவற்றை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அதாவது இலங்கையில் இருந்து ஆன்மீகச் சுற்றுலா மேற்கொண்டு இந்தியா சென்ற பௌத்த மத பிக்கு ஒருவர் தஞ்சாவூர் பெரிய கோவிலுக்கு சென்றிருந்தபோதும், மற்றொரு பௌத்த பிக்கு சென்னை மத்திய புகையிரத நிலையத்தில் தாக்கப்பட்ட சம்பவங்களை ஊடகம் வாயிலாக அறிந்து அதிர்ச்சியுற்றோம்.

ஆன்மீக சுற்றுப்பயணம் மேற்கொள்பவர்களையும், அதுவும் மதத் தலைவர்களைத் தாக்கும் செயற்பாடுகளை எந்தவிதத்திலும் நியாயப்படுத்துதலுக்கு உள்ளாக்க முடியாது. இது மனிதத்திற்கு எதிரான குற்றம்.

ஆகவே இத்தகைய மனித உரிமைகளுக்கு எதிரான சம்பவங்களை மிக வன்மையாக கண்டிப்பதோடு தமிழகத்தில் புத்த பிக்குகள் தாக்கப்பட்ட சம்பவங்களுக்கு பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்தவும் இனிமேல் இப்படியான சம்பவங்கள் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்தவும் இந்திய , தமிழக அரசுகளை கேட்டுக் கொள்கின்றோம் என்று மன்னார் ஆயர் வெளியிட் டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(எ-11)

# நாட்டில் மத முரண்பாடு ஏற்படக் கூடிய அபாயம்

## இலங்கை ம.உ. ஆணைக்குழு எச்சரிக்கை

மதமுரண்பாடுகள் ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மனித வுரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. நாட்டில் நிலவி வரும் சூழ்நிலைமைகள் அபாயகரமானவை என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டில் இடம்பெற்றுவரும் மத முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கு சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய அரச அமைப்புக்கள் மௌனம் காத்து வருவதாகவும், இந்த நிலைமை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவிவரும் பதற்ற நிலைமையானது இன சமூகங்களுக்கு இடையில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது என குறிப்பிட்டுள்ளது. பேச்சுவார்த்தைகள் இணக்கப்பாடுகளின் மூலம் முரண்பாடுகளைக் களைய முடியும் எனத் தெரிவித்துள்ளது.

இன மற்றும் மதப் பிரிவினை வாதங்களை ஏற்றுக்கொள்ளக் கூடாது. இது ஆபத்தானது. அரசியல் கட்சிகளோ ஏனைய அமைப்புக்களோ நாட்டின் தற்போதைய சூழ்நிலையை தங்களது சுயலாப நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என வலியுறுத்தியுள்ளது.

சமூகங்களை நல்வழிப்படுத்தவும், நல்லொழுக்கம் மிக்க மனிதர்களை உருவாக்கவுமே சமயங்கள் உருவானது என இலங்கை மனித வுரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.(எ-11)

# வீட்டினை உடைத்து திருட்டு சந்தேக நபர் ஒருவர் மாட்டினார்

(யாழ்ப்பாணம்)

பூட்டிய வீட்டினை உடைத்து நகைகளைக் கொள்ளையடித்த நபர் ஒருவர் சுன்னாகம் பொலிஸாரால் நேற்று மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் சுன்னாகம் நகரப் பகுதியில் உள்ள ஓய்வுபெற்ற ஆசிரியை ஒருவர் தனது வீட்டைப் பூட்டிவிட்டு சந்தைக்குச் சென்றுள்ளார்.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொண்ட திருடன் வீட்டினை உடைத்து 3 இலட்சம் பெறுமதியான 5 பவுண் தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளான்.

இது குறித்து பிரஸ்தாப ஆசிரியை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தார்.

இது குறித்து விசேட விசாரணைகளில் இறங்கிய சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துஸ்மந்த தலைமையிலான குழுவினர்;

சந்தேக நபர் ஒருவரை கைது செய்ததுடன் 2 சங்கிலி, மற்றும் தாலிக் கொடி என்பவற்றையும் மீட்டனர்.

சந்தேக நபர் இன்று நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளார். (எ-11)

# காணாமல்போனவர் சடலமாக மீட்பு

(கரணவாய்)

காணாமல் போயிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

தக்குதம்பா துன்னாலையைச் சேர்ந்த வல்லு கர்க்கண்டு (வயது-57) என்பவர் நேற்று முன்தினம் முதல் காணவில்லை என உறவினர்களால் தேடப்பட்டு வந்தார்.

இந்நிலையில் நேற்றுக் காலை இவர் வயல் வெளியில் சடலமாக மீட்கப்பட்டார்.

அதிகளவில் மதுபானம் அருந்தியதால் தான் இவர் மரணமானதாக மந்திகை மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதோடு பிரேதப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தனர். (எ-11,60)

# பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை சம்பியன்



15 வயதுப் பிரிவினருக்கான பூப்பந்தாட்ட போட்டியில் வலிகாமம் கல்வி வலயச் சம்பியனாக பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் உடுவில் மான்ஸ் வித்தியாலயமும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர் தரப் பாடசாலை அணியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் பலம் மிக்க அணிகளாகக் காணப்பட்ட நிலையில் முதலில் இடம்பெற்ற இரண்டு ஒற்றையர் ஆட்டத்தில் இரு பாடசாலை அணிகளும் தலா ஒரு செற் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றன.

மூன்றாவதாக இடம் பெற்ற இரட்டையர் ஆட்டத்தில் முதல் சுற்றை உடுவில் மான்ஸ் வித்தியாலயம் வெற்றிபெற்ற போதிலும்;

அடுத்த மூன்று சுற்றுக்களையும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை வெற்றி பெற்று வலய சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

# காலபந்தாட்ட போட்டி கொலின்ஸ் அணி வெற்றி

கொலின்ஸ் அணிக்கும் ஹென்றிஸ் அணிக்கும் இடையிலான கால்பந்தாட்டப் போட்டியில் கொலின்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம், பருத்தித்துறை கால் பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ்.மாவட்ட கால்பந்தாட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் விலகல் முறையிலான கால் பந்தாட்டச் சுற்றுப் போட்டியை தனது விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வருகின்றது.

இந்த நிலையில் வியாழக்கிழமை நடைபெற்ற போட்டியில் கொலின்ஸ் அணியினை எதிர்த்து ஹென்றிஸ் அணி மோதியது.

## பொதுநலவாய...

நிறைவேற்றுவதில் இலங்கை அரசாங்கம் எவ்வாறான கரிசனையைக் கொண்டுள்ளது, எவ்வளவு தூரம் பயணித்துள்ளது என்பது உட்பட அவற்றின் முன்னேற்றம் தொடர்பில் இலங்கைக்கு விஜயம் செய்யும் பொதுநலவாய அமைப்பின் அதிகாரி ஆராய்ந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பார் என்றும் தெரிய வருகின்றது.

இந்த அறிக்கையானது அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பின் அமைச்சர்கள் மட்ட நடவடிக்கை குழுக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. அதன் பின்னர் பொர்துநலவாய மாநாடு குறித்து தீர்க்கமானதொரு முடிபு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் மனிதவுரிமை நிலைமைகளை சுட்டிக்காட்டி அங்கு பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சிமாநாட்டடை நடத்தக்கூடாது என பலதரப்பட்டவர்களும் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(எ-11)

## சிறுபான்மை...

இனங்களுக்கு இடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு பதிலாக பாதுகாப்பு அமைச்சு சிங்கள கடும்போக்காளர்களை போஷித்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

தாம் விரும்பிய மதத்தை அமைதியான முறையில் வழிபாடு செய்வதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்.

பொருளாதார நெருக்கடி, சர்வதேச அழுத்தங்கள் காரணமாக அரசாங்கம் எதிர்நோக்கி வரும் நெருக்கடி நிலைமைகளை திசை திருப்புவதற்காக இவ்வாறு உள்நாட்டில் கலவரங்களை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகிறது.

இஸ்லாமியர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாகவும், மத்திய கிழக்கு நாடுகளில் அதிகளவான சிங்கள பௌத்தர்கள் கடமையாற்றி வருவதனை சிலர் மறந்துவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்துக்கு மதிப்பளிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் ஆதரவினை துரித கதியில் இழந்து வருவதாக மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.(எ-11)

## முஸ்லிம்...

றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் முஸ்லிம்கள் கௌரவமாக வாழ்வதற்கு தமது அமைச்சுப் பதவிகள்தான் தடையாக இருக்குமானால், அதனை துறக்க தாம் தயாராக இருப்பதாக மற்றுமொரு அமைச்சரான ரிஷாத் பதியுதீன் கூறியுள்ளார்.

ஏனைய முஸ்லிம் அமைச்சர்களும் அதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (எ-11)

## தமிழகத்...

அதிகாரத்தை பகிர்ந்ததளிக்கும் முனைப்பை வலுவிழக்கச் செய்யும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலி ஆதரவாளர்கள் மற்றும் மேற்குலக நாடுகளின் ஆதரவுடன் தமிழகம் இந்திய மத்திய அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகித்து வருகிறது. வங்குரோத்து அடைந்த உள்நாட்டு அரசியல் சக்திகளை சில வெளிநாட்டு சக்திகள் பயன்படுத்தி இறைமையுடைய நாடுகளில் தலையீடு செய்து வருகிறது.

உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாட்டுச் சக்திகள் தலையீடு செய்வதனை ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

ராஜபக்ஷ அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், இந்த முயற்சிகளை சுலபமாக வெற்றிகொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக முதல்வர் ஜெய...

கருத்து வெளியிட்டுள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்த சுப்பிரமணியன் சுவாமி, தமிழ்நாட்டில் உள்ள பாதிக்கும் மேற்பட்ட தலைவர்கள் படிப்பறிவு இல்லாதவர்கள் என்று அதிரடியாகக் கூறி அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளார்.

இலங்கை விவகாரம் குறித்து பேசிய போது இவ்வாறு கூறிய சுப்பிரமணியன் சுவாமி, இலங்கை குறித்த ஜெயலலிதாவின் தற்போதைய கருத்துக்கள் கேட்பதற்கு மிகவும் சுவையாக இருக்கின்றன.

ஜெயலலிதா தன்னுடைய சுயவுணர்வை இழந்திருக் கலாம் என்றுநினைக்கிறேன்.

வெளிநாட்டுவிவகாரங்களில் அவர் தலையிடக்கூடாது. அது பற்றி முடிபு எடுக்க வேண்டியது மத்திய அரசின் உரிமை என்றார். அதே போல் சுஞ்சய்த்தத் விவகாரத்தில் கருத்துக்கூறியசுவாமி, பொது மன்னிப்புக் கோரும் விவகாரத்தில் அவர் சுயமாக அவரே கையெழுத்திட்டுமனுப்போடவேண்டும். அதைவிடுத்து மற்றவர்கள் அவ்வாறு அவரைச் செய்யச் சொல்வதுவீண்முயற்சி என்றார் சுவாமி.

சுப்பிரமணியன் சுவாமி சமீபகாலமாக இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக அதிகளவில் கருத்துக்களை தெரிவித்து வருகிறார்.

இது தமிழ்நாட்டிலுள்ள தமிழ் உணர்வாளர்களை கடும் கொந்தளிப்பில் ஆழ்த்தி வருகிறது.

இந்த நிலையில் தமிழகஅரசியல்தலைவர்களைப் பற்றியும், முதல்வர் ஜெயலலிதா பற்றியும் கூறிய கருத்துக்கள் கடும் புயலைக் கிளப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ-11)

## தமிழக...

அவர்களின் சொத்துக்கள் ஏதேனும் இலங்கையிலிருந்தால் அவற்றை அரசுடமையாக்கவேண்டும். ஜெயலலிதாவும் கருணாநிதியும் இலங்கைக்கு எதிராக போட்டியிட்டு போராட்டம் நடத்துகின்றனர்.

தமிழகத்தில்வாழும் இலங்கையைச்சேர்ந்த மாணவர்கள், வர்த்தகர்களில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என இந்திய மத்திய அரசாங்கம் இது வரையில் எந்தவித வாக்குறுதிகளையும் அளிக்க வில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள பௌத்தர்களின் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்பதை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## இந்திய மத்திய அர...

வித்தாலும் மத்திய அரசை எதிர்த்து தாங்கள் நடத்திவரும் போராட்டம் தொடரும் என்று கூறினார். தமது கல்வி நடவடிக்கைகள் பாதிக்காத வகையில் போராட்டங்கள் நடத்தப்படும் என பிரபாகரன் தெரிவித்தார். மீண்டும் கல்லூரிகள் திறப்பது குறித்து விரைவில் ஆணை வெளியிடப்படுமென அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் சில இடங்களில் கல்லூரிகள் ஏற்கனவே இயங்கத் தொடங்கி விட்டதாக செய்திகள் கூறுகின்றன. (எ-11)


### வேலை வாய்ப்பு

மலேசியாவில் தொழில் வாய்ப்பு, பனடோல் கம்பனி ,பிஸ்கட் கம்பனி, சொக்கிலேட் கம்பனி இம் மூன்று நிறுவனத்திலும் உடன் தொழில் வாய்ப்பு சிங்கப்பூர் Visit சென்று 2 மாதம் வேலை செய்ய விருப்பமானவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

Lanka Voice : 0750650084 (1020)

யாழ் நகரில் .....

**கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி! புதிய பிரிவுகள் ஆரம்பம்**

*Mobile phone Repairing Course*

Just 4 days course ஆரம்பம் 02.04.2013

கட்டணம்: 9500/-

வடமாகாணத்தில் உங்கள் பிரதேசத்தில் நீங்களும் ஓர் சுய தொழிலொன்றை மேற்கொள்ள அரிய சந்தர்ப்பம் கல்வி அறிவு, ஆரம்ப அறிவு, ஆங்கில அறிவு எதுவும் அவசியம் இல்லை. பகுதிநேரமாகவும் இத்தொழிலை ஆரம்பிக்கலாம். வயது எல்லை கிடையாது மாதம் ஒரு இலட்சத்திற்கு மேல் சம்பாதிக்க முடியும் முதல் நாளில் இருந்தே Phone Repairing பயிற்றுவிப்பதோடு நீங்கள் கொண்டு வரும் பழுதடைந்த Phone இரண்டு இலவசமாக திருத்திக் கொடுக்கப்படும். இலங்கையிலும் வெளிநாட்டிலும் அதிக தொழில் வாய்ப்பு ஒரு வகுப்பில் குறிப்பிட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவதால் உங்கள் பதிவுக்கு முந்துங்கள்.

**ISSES NALLUR CAMPUS**
NO.762, POINT PETRO ROAD,
NALLUR, JAFFNA.
0777444225, 021 222 4728

வெளிநாட்டு உயர்கல்வி, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு IELTS ஓர் தடையா?

**IELTS**
**இலவச கருத்தரங்கு**

திகதி - 31/03/2013 (SUNDAY)
நேரம் - 10.30 a.m.
இடம் - DMI COMPUTER EDUCATION - JAFFNA

பங்குபற்ற விரும்புவோர் உங்கள் பெயரை 0777 173517 இலக்கத்திற்கு SMS செய்யவும்.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**DMI COMPUTER EDUCATION**
யாழ்ப்பாணம்
No.113. கன்னாதிட்டி வீதி,
(சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403

**BIT-University of Colombo**

மேற்படி கற்கைநெறிக்கான 2ம் 4ம் 6ம் அரையாண்டுக்கான விரிவுரைகள் யாவும் இம் மாதம் 31ம் திகதி யாழ் MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் ஆரம்பமாகின்றது. புதிய கல்வியாண்டிற்கான பதிவுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. க.பொ.த (சா.த) சித்தியடைந்த எவரும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மேற்படி பட்டக்கற்கை நெறியை பயில முடியும். 1ம் ஆண்டு முடிவில் கொழும்பு பல்கலைக்கழகத்தால் தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா எனும் சான்றிதழ் வழங்கப்படும். மேலதிக விபரங்களை இல.324 பலாலி வீதி பரமேஸ்வராச்சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**PC MATE SYSTEMS**
Computer Sales & Repair
உங்களது கணினியில் ஏற்படும்
Software/Hardware/Virus
பிரச்சினைகளுக்கு சிறப்பாகவும் மிக விரைவாகவும் தீர்வைப்பெற்றுக்கொள்ள எங்களை நாடுங்கள்
மலிவு விலையில்
Core 2 duo, Dual Core , LGA HT
Branded Computers 0779689043

478 Mother Board
LGA DDR2 Board
DDR/DDR2 Rams
IDE/SATA HDD
LCD Monitors
Computers

எமது புதிய கிளை
746B பருத்தித்துறை வீதி
நல்லூர்
யாழ் மாநகரசபை முன்பாக

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடைவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

**ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்**
303, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. No.:-021 222 5392
WESTERN UNION MONEY TRANSFER



**ஈஸ்ரர் பஜனை**

பாடுகளின் காட்சியும் உயிர்ப்பும்
தலைப்பு : இரட்சிப்பின் மகுடம்
இடம் : ஒட்லி மண்டபம்
யாழ்ப்பாணக் கல்லூரி
நேரம் : 5.00 மணி
காலம் : 31.03.2013

Happy Easter

**ஓடுகள், செங்கற்கள் விற்பனைக்குண்டு**



தரமான ஓடுகள், செங்கற்கள் யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களுக்கு குறைந்த செலவில் விநியோகம் செய்துதரப்படும்.



**பிரணவன் என்ரபிறைசஸ் 0773818799**
பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(சங்கிலியன் சிலைக்கு முன்பாக)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
Excellent Teachers' Panel & Individual Attention

**Diploma in English** *(2 Months)*

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத் தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**Spoken English With Grammar-Quick Learning Course** *(1½ Months)*

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்காகவே நடாத்தப்படுகின்றது.
தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல் சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில்நுட்பத்திறகமைவாகவும்
(Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகின்றது.

**Advanced Diploma in English** *(4 Months)*

- ஆங்கில மொழியையும் ஆங்கில இலக்கிய அறிவையும் பெற்றுக்கொள்ள வாஞ்சிப்பவர்களுக்கும் மேலும் மொழியைச் சிறப்பாகக் கற்று அதற்கு வேண்டிய தகமையை ஏற்படுத்த உதவி செய்யும்.
- இந்த நெறி ஆங்கிலத்தில் சரிவர விளங்கிக்கொள்ளவும் அதோடு ஆங்கில அறிவையும், இலக்கியத்தினையும் விருத்தி செய்ய உதவும்.

**IELTS** Academic / General — Duration : (2½ Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**A1 Exam-Sponsor/Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது.

**B1 Exam-Student Visa** மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிப்பட்டதுடன்
Duration : 2 Months

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 - 12)
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்.
- British Council உடன் பரீட்சைக்கான பதிவுகள் March 15ஆம் திகதிக்கு முன் பதியவும்.
- பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் May 8ஆம் திகதிகளில் நடைபெறும்.

Batch I - 30.03.2013 Batch II - 01.04.2013 Batch III - 06.04.2013 Batch IV - 08.04.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 077 722 2422, 077 758 5913, 071 429 9935, 077 773 0074


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை [illegible] பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org